# சுயம்பு

## சிறப்பு மலர் - 04



கலாசாரப் பேரவை
மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகம்
பட்டிப்பளை
- 2015 -

# சுயம்பு

## சிறப்புமலர் -04




## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| பெயர் | : | **சுயம்பு** |
| வெளியீடு | : | **கலாசாரப் பேரவை,<br>மண்முனை தென்மேற்கு,<br>பட்டிப்பளை.** |
| அட்டைப்படம் | : | **திரு. ஆ. தனுஸ்கரன்<br>கொக்கட்டிச்சோலை** |
| கணனி வடிவமைப்பு | : | **த. சங்கர்** (வணசிங்கா பிரிண்டர்ஸ்) |
| அச்சுப்பதிப்பு | : | **வணசிங்கா பிரிண்டர்ஸ்,<br>இல. 126/1. திருமலை வீதி, மட்டக்களப்பு,<br>0652227170.** |



# ஆசியுரை

சிவபூமி என திருமூலரால் வர்ணிக்கப்படும் லங்காபுரியின் கிழக்கே தானாகத்தோன்றி "சுயம்பு" என வர்ணிக்கப்படும் தான்தோன்றீஸ்வரர் அருள் பாலிக்கும் இப்பூமியில் பண்பாடுகளை சுமந்து வரும் "சுயம்பு" எனும் மலருக்கு ஆசியுரை கூறுவதையிட்டு பெரும் மகிழ்வடைகிறேன்.

எமது பிரதேச பெருமைகளையும் கலாசார பண்பாடுகளையும் இளஞ்சந்ததியினர் திறன்களையும் எடுத்துக் காட்டுவதுமாக நிகழும் கலாசார விழாவும் சுயம்பு மலர் வெளியீடும் இனிதாக நடந்தேற எல்லாம் வல்ல தான்தோன்றீஸ்வரரை பிரார்த்தித்து ஆசி வேண்டுகின்றோம்.

**சிவஸ்ரீ சோதிலிங்கம் (குருக்கள்)**
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்.



# வாழ்த்துச்செய்தி

மண்முனை தென்மேற்கு பிரதேச கலாசார விழாவினை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கும் "சுயம்பு" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இயற்கை அன்னையின் கொடைகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட பட்டிப்பளை பிரதேசத்தில் மருதம் சூழ நெய்தல் நெருட அப்பிரதேச மக்களின் கலாசாரங்ளை பிரதிபலிக்கும் கண்ணாடியாய் பளிச்சிடுவதனால் பல சாதனைகளையும் வெளிக்காட்டி ஆல் போல் தளைத்தோங்கி அறுகு போல் வேரூன்றி கலாசார வெளிப்படுத்துகையின் மைல் கல்லாக தன்னை அடையாளப்படுத்துவதுடன் இப்பிரதேச வாழ் மக்களின் வரலாறு, பண்பாடு, கலை இலக்கியம் சார்ந்த உணர்வுகளை பேணும் நடவடிக்கைகளினூடாக மாறிவரும் உலக நடப்புகளுகேற்ப பொருளாதார முன்னேற்றத்தையும் இணைத்ததான எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டிய தேவைப்பாடுகளையும் கருத்திலெடுத்தல் சாலச்சிறந்தது.

இம்மலர் பிரதேச கலாசார தனித்துவங்களை பிரதிபலிக்கும் வகையில், இம்மலரின் ஆக்கத்தில் பங்கு கொண்ட பிரதேச செயலாளர் மற்றும் சக ஊழியர்கள் அனைவருக்கும் இவ்விடத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

**திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ்,**
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்
மட்டக்களப்பு மாவட்டம்.



# வாழ்த்துச்செய்தி

தமிழர் பாரம்பரியம் மிகத் தொன்மையானது. வரலாற்றுப் பெருமையும் பாரம்பரிய கலைகளின் உறைவிடமாகவும் விளங்குகின்ற மண்முனைத் தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவின் கிராமங்களும் வரலாற்று ரீதியில் தொன்மையான தமிழர் பாரம்பரியத்தைக் கொண்ட கிராமங்களாகும். மக்களின் பாரம்பரிய சடங்கு நிகழ்வுகள், சமய வழிபாடுகள், கலை நிகழ்வுகள், வாழ்வியல் முறைகள், விளையாட்டுக்கள் மற்றும் இன்னோரன்ன வைபவங்களில் பாரம்பரிய பண்பாடுகள் இலங்கக் காண்கின்றோம்.

நவீனத்துவமும் அதனால் உண்டான சமூக பொருளாதார மாறுதல்களும், நவீன இலத்திரனியல் சாதனங்களின் பெருக்கமும் எமது பாரம்பரிய பண்பாடுகளை வாழ்வியல் முறைகளை வேறு தளத்திற்குக் கொண்டு சென்றிருக்கின்றன. உலகளாவிய பண்பாடும் நவீனத்துவத்தால் பல மாறுதல்களை எதிர்நோக்கியுள்ளது. மாற்றம் என்ற சொல்லொன்றைத்தவிர மாறாதது எதுவும் இல்லை என்பதற்கிணங்க, தவிர்க்க முடியாதபடி கால மாறுதல்களை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டியிருக்கின்றது.

இவ்வாறானதொரு நிலையிலேயே எமது பண்பாடுகளைக் கட்டிக் காக்கும் பண்பாட்டு நிகழ்வுகள் முக்கியத்துவமுடையனவாகின்றன. அதனை பட்டிப்பளை பிரதேச பண்பாட்டு விழாவும், வெளியிடப்படும் சுயம்பு சஞ்சிகையும், விழாவின் கலை நிகழ்வுகளும் வெளிப்படுத்தும் என நம்புகின்றேன்.

பிரதேச பண்பாட்டு விழா சிறப்படன் அமைய என் நல்வாழ்த்துக்கள்.

**திருமதி. சத்தியானந்தி நமசிவாயம்**
பிரதேச செயலாளர்
மண்முனை தென்மேறகு, பட்டிப்பளை.

# வெளியீட்டுரை

"சுயம்பு படுவானில் ஆளுமைமிக்க எழுத்தாளர்களை உருவாக்கட்டும்"

ஒரு சமூகம் வேரூன்றி நிலைத்து நிற்பதற்கு தொன்று தொட்டு வருகின்ற அச்சமூகத்திற்கே உரித்தான அடையாளங்களைப் பேணிப் பாதுகாத்தல் அவசியமாகின்றது. நாங்கள் அறிந்தவை சில அறியாதவை பல இதனையறிந்து உள்ளார்ந்து தேடுகின்றபோது ஒரு சிலவற்றைப் பெற்றுக்கொள்கின்றோம். அவ்வாறு பெற்றவை தலைநிமிர்ந்து நிற்கும் வண்ணம் வியப்படைய அமையப்பெறலாம். எனவே நாம் வாழும் சூழலை நன்கறிதல் அறிந்தவற்றைப் பகிர்தல் என்பது தற்காலத்தின் அத்தியாவசிய தேவையாகவுள்ளது. காரணம் இன்று எமக்குரிய அடையாளங்கள் இன்னுமொருவரின் அடையாளங்களாக சொந்தம் கொண்டாடப்படுகின்றன. இதற்குக் காரணம் நாங்கள் எமக்குரிய தனித்துவங்களை பேணிப்பாதுகாப்பதில் அல்லது ஆவணப்படுத்திப் பகிர்வதில் வரட்சித்தன்மையும் அசமந்தப்போக்கும் உடையவர்களாக இருத்தலே.

சிறந்த தேடலும் வாசிப்பும் ஒருவரை பூரணம் உடையவராக மாற்றுகின்றன. இதனடியாக ஆக்கபூர்வமான படைப்புக்கள் உருவாகின்றன. அது இன்று உலகில் பல்வேறு வகையில் பரிணமிக்கின்றது. ஆக்கத்திறனாளிகளின் சுய படைப்பினால் தோன்றிவரும் "சுயம்பு" கல்வி, கலை, பண்பாடு, இலக்கியம், நாட்டாரியல், விழுமியங்கள், வலராறு என பல்வேறுபட்டவற்றை உள்ளடக்கியதாக வருடாந்தம் வெளிவருகின்றது. மண்முனை தென் மேற்கு கலாசாரப்பேரவையின் சுயம்பு மலர் பல்வேறுபட்ட எழுத்தாளர்களை உருவாக்குவதோடு வேரூன்றி நிற்கின்ற எமது மரபுகளை பேணிப்பாதுகாக்கும் என நம்புகின்றோம். மட்டக்களப்பு மாவட்டம் தமிழர்களுக்கென தனித்துவமான அடையாளங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக படுவான்கரை இன்றும் பாரம்பரியம் பிறளாமல் மக்கள் வாழும் பிரதேசம். தற்காலதில் எமது மரபுகளில் பலவற்றை நாம் ஆவணப்படுத்த வேண்டியுள்ளது. இதனை கடந்த காலங்களில் சுயம்பு செய்ததோடு தொடர்ந்தும் செய்துவருகின்றது.

மேலும் சுயம்பு கொண்டுவரும் ஆக்கங்கள் தனித்தனியே ஆய்வு செய்யப்பட வேண்டியவை. பல ஆக்கத்திறனுள்ள ஆய்வாளர்கள் எமது பிரதேசத்தி லிருந்து உருவாக வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

**கலாசாரப் பேரவை**

மண்முனை தென் மேற்கு, பட்டிப்பளை

# கலாசார பேரவை உறுப்பினர்கள் - 2015

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | திருமதி.என்.சத்தியானந்தி (பிரதேச செயலாளர்) |
| **உப தலைவர்** | : | திரு.எஸ்.கங்காதரன் (கலாசார பேரவை உறுப்பினர்) |
| **செயலலாளர்** | : | திரு.எஸ்.ருபேஷன் (கலாசார உத்தியோகத்தர்) |
| **உப செயலாளர்** | : | திரு.எஸ்.தனுஸ்கரன் (கலாசார பேரவை உறுப்பினர்) |
| **பொருளாளர்** | : | செல்வி.எம்.சுதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| **கணக்காய்வு உத்தியோகத்தர்** | : | திரு.எஸ்.புவனேஸ்வரன் (கணக்காளர்) |
| **உறுப்பினர்கள்** | : | திரு.எ.நவேஸ்வரன் (உதவி பிரதேச செயலாளர்)<br>திரு.எஸ்.குணரெட்ணம் (பிரதி திட்டப் பணிப்பாளர்)<br>திரு.எஸ்.பிரபாகரன் (உதவி திட்டப் பணிப்பாளர்)<br>திரு.ரி.துரைராஜ் (பதவிநிலை உதவியாளர்)<br>திருமதி. மு.மேகலா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)<br>கலாபூஷணம் திரு. வே. வல்லிபுரம் (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திரு.கே.சிவகுருநாதன் (கிராம உத்தியோகத்தர்)<br>திருமதி.பெ.தேவகி (கிராம உத்தியோகத்தர்)<br>திரு.அ.குபேந்ரராஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர்)<br>திரு.ரி.கரதூசனன் (விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்)<br>திரு.சி.ருசகுமார் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)<br>திரு.ரி.ஜீவநாதன் (அலுவலக பணியாளர்)<br>திரு.இ.குகநாதன் (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திரு.எஸ்.சந்திரசேகரம் (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திரு.பா.நல்லதம்பி (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திரு.ஞா.பேரின்பம் (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திரு.க.இந்திரகுமார் (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திருமதி.சி.நிர்மலாதேவி (கலாசார பேரவை உறுப்பினர்)<br>செல்வி.தி.பவநிதா (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திரு.எம்.கேதீஸ்வரன் (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திரு.வி.தவகுமார் (கலாசார பேரவை உறுப்பினர்) |
| **மலர்க்குழு** | : | திரு.என்.தயாசீலன் (கோட்டக்கல்வி அதிகாரி)<br>திரு.கே.குணரெட்ணம் (அதிபர்)<br>திரு.வே.மகேசுரெத்தினம் (அதிபர்)<br>திரு.எஸ்.ருபேஷன்(கலாசார உத்தியோகத்தர்)<br>திருமதி. மு.மேகலா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)<br>திரு.எஸ்.சந்திரசேகரம் (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திரு.இ.குகநாதன் (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திரு.எம்.நக்கீரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)<br>திரு.எஸ்.கங்காதரன் (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திரு.எஸ்.தனுஸ்கரன் (கலாசார பேரவை உறுப்பினர்)<br>திரு.வி.தவகுமார் (கலாசார பேரவை உறுப்பினர்) |

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ▸▸ மட்டக்களப்பு படுவான் கரைப்பிரதேசத்தின்... | 07 |
| ▸▸ பண்டைத்தமிழர் வரலாற்றை வலியுறுத்தும்... | 16 |
| ▸▸ பட்டிப்பளை பிரதேசத்தில் வழக்கொழிந்து போன.. | 20 |
| ▸▸ கூத்தரங்கு | 24 |
| ▸▸ மட்டக்களப்பு பண்டைய கோவிலான... | 27 |
| ▸▸ பிள்ளையின் கல்வி அடிப்படை மனித உரிமை | 30 |
| ▸▸ மகிழடித்தீவுக் கிராமம் ஒரு நோக்கு | 35 |
| ▸▸ ஆக்கபூர்வமான மனிதர்களை உருவாக்கும்.. | 42 |
| ▸▸ திருவுருவங்களில் லிங்கம் | 46 |
| ▸▸ மகிழடித்தீவில் கண்டெக்கப்பட்ட 2000 ஆண்டு | 50 |
| ▸▸ எமது படுவான்கரை பெருநிலமே... | 52 |
| ▸▸ கொஞ்ச உதவுங்கள் | 53 |
| ▸▸ அவன் | 54 |
| ▸▸ வேறொன்றும் வேண்டாம் உன்னைத் தவிர.. | 55 |
| ▸▸ சிறுமி விதவையானாள் | 56 |
| ▸▸ இரவில் ஆகாயம் | 59 |
| ▸▸ உருத்திரபெருமான் (சிவன்) | 60 |
| ▸▸ மார்க்கண்டேயன் (நாடகம்) | 63 |
| ▸▸ பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு | 74 |
| ▸▸ நச்சுப் பொய்கை கூத்தின் சுருக்கம் | 83 |
| ▸▸ கௌரவிக்கப்படும் கலைஞர்கள் | 94 |
| ▸▸ மண்முனை தென்மேற்கு பிரதேச... | 99 |
| ▸▸ பிரதேச இலக்கிய கலைப்போட்டித் தொடர்-2015.. | 100 |

# கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் - 2015



**இடமிருந்து வலமாக முன்வரிசை –** திரு. எஸ். சந்திரசேகரம் (பே.உ), திரு. பா. நல்லதம்பி (பே.உ), திரு. எஸ். புவனேஸ்வரன் (கணக்காளர்), திருமதி. என். சத்தியானந்தி (பிரதேச செயலாளர்), திரு. எ. நவேஸ்வரன் (உதவி பிரதேச செயலாளர்), திரு. ஞா. பேரின்பம் (பே.உ), திரு. எஸ். ருபேஷன் (கலாசார உத்தியோகத்தர்),


**இடமிருந்து வலமாக 2ஆம் வரிசை –** திருமதி. பொ. தேவகி (கிராம உத்தியோகத்தர்), திருமதி. மு. மேகலா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு. எஸ். குணரெட்ணம் (பிரதி திட்டப் பணிப்பாளர்), திரு. அ. குபேந்ரராஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு.எஸ்.பிரபாகரன் ( உதவி திட்டப் பணிப்பாளர்), திரு. ரி. கரதூசனன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு. எஸ். கங்காதரன் (பே.உ), திரு. கே. சிவகுருநாதன் (கிராம உத்தியோகத்தர்), திரு. எஸ். தனுஸ்கரன் (பே.உ), திரு. ரி. துரைராஜ் (பதவிநிலை உதவியாளர்), திரு. சி. ருசகுமார் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்), திரு. க. இந்திரகுமார் (பே.உ), ரி. ஜீவநாதன் (அலுவலக பணியாளர்),செல்வி. எம். சுதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்),

**இடமிருந்து வலமாக 3ஆம் வரிசை –** திரு. எம். நக்கீரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்), திருமதி. சி. நிர்மலாதேவி (பே.உ), திரு. இ. குகநாதன் (பே.உ)



# மட்டக்களப்பு படுவான்கரைப்பிரதேசத்தின் இன்றைய கல்வி நிலை சவால்களும் சாத்தியப்பாடுகளும்.

புவியியல் அமைப்பை அடிப்படையாக வைத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுவான் கரை – படுவான்கரை என இரு பெரும் பிரதேச கூறுகள் மிக நீண்ட காலமாகவே அடையாளப் படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக மண்முனை வாவியினை அடிப்படையாக வைத்தே முன்னோர்கள் இப் பெயரினை வழங்கி வந்து ள்ளனர். இவ்வகையில் மண்முனை வாவிக்குக் கிழக்கே உள்ள பகுதி எழுவான்கரையாகவும் மேற்குப்பகுதி படுவான்கரையாகவும் பிரிக்கப் பட்டுள்ளது. கிராமங்களையும் வயல்வெளிக ளையும், மேய்ச்சற் தரைகளையும் காடுகளை யும், மலைகளையும் குளங்கள், ஆறுகளையும் கொண்ட வளம்மிக்க பிரதேசமாக படுவான் கரைப்பிரதேசம் அமைந்துள்ளது. போரதீவுப் பற்று (வெல்லாவெளி), மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை), மண்முனை மேற்கு (வவுணதீவு) ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சார்ந்த கிராமங்களையும் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெரிய புல்லுமலை, கோப்பாவெளி, உறுகாமம், கரடி யனாறு, கித்துள், மரப்பாலம், பன்குடாவெளி, வேப்பவட்டுவான், குடும்பிமலை ஆகிய கிரா மங்களையும் உள்ளடக்கிய பெரு நிலப் பகுதியாக இப்பிரதேசம் அமைந்துள்ளது.2013 இல் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தினால் வெளியிடப்பட்ட புள்ளிவிபரவியல் தகவல்களின் படி படுவான்கரைப்பிரதேசத்தின் சனத் தொகை 112722ஆகும்.மட்டக்களப்பு மாவட்டத்தில் மொழி, சமயம், பண்பாடு, சமூக அமைப்பு,




வாழ்க்கை முறை சார்ந்து தனித்துவமானதொரு பிரதேசமாகவும் இப்பகுதி விளங்குகின்றது. படுவான்கரைப்பிரதேசமானது யுத்த காலத்தில் த.வி.புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இதனால் மீட்கப்படாத பிரதேசம் (Uncleared area) என்றும் அரசாங்கத்தால் அழைக்கப்பட்டு வந்தது.

**2. கல்வி நிலை**

மட்டக்களப்பு மாவட்ட நகர்ப்பகுதிப் பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது படுவான் கரைப் பிரதேசத்தின் கல்வி நிலை பல மடங்கு பின்னிலையிலேயே உள்ளது. யுத்தகாலத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்ற போர்கள், போர்க ளில் இணைவு, இடப்பெயர்வுகள், மாணவர்களி னதும் ஆசிரியர்களினதும் தொடர்ச்சியான வரவின்மை, வறுமை நிலை இத்தகைய கார ணங்களால் கல்வி நிலை பின்னடைந்திருந்தது. மட்டக்களப்பு கல்வி வலயத்துடனும் பட்டிருப்பு கல்வி வலயத்துடனும் இணைக்கப்பட்டிருந்த படுவான்கரைப்பிரதேச பாடசாலைகள் பிரிக்கப்

பட்டு 2010 இல் படுவான்கரைக்கான தனியான வலயமாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் தோற்றுவிக்கப்பட்டது. இவ் வலயத்தில் தற்போது 64 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 27 கஸ்டப்பிரதேச பாடசாலைகளும் 37 அதிகஸ்டப் பிரதேச பாடசாலைகளும் உள்ளன.

**அட்டவணை.4.1**

| கல்விக் கோட்டம் | பாடசாலை வகை | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 ஏபி | 1 சி | வகை II | வகை III | மொத்தம் |
| ஏறாவூர்ப் பற்று | 00 | 01 | 05 | 08 | 14 |
| மண்முனை மேற்கு | 00 | 03 | 13 | 13 | 29 |
| மண்முனை தென்மேற்கு | 01 | 04 | 07 | 09 | 21 |
| மொத்தம் | 01 | 08 | 25 | 30 | 64 |

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் 15 வருட மாணவர்களின் தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை.4.2**

| மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் | | |
|---|---|---|
| ஆண்டு | மாணவர் தொகை |
| 2000 | 1199 |
| 2001 | 12456 |
| 2002 | 12379 |
| 2003 | 13137 |
| 2004 | 13366 |
| 2005 | 14376 |
| 2006 | 14661 |
| 2007 | 12213 |
| 2008 | 15141 |
| 2009 | 15700 |
| 2010 | 16134 |
| 2011 | 16331 |
| 2012 | 16359 |
| 2013 | 16220 |
| 2014 | 15628 |
| 2015 | 15766 |

இதன் படி மாணவர் தொகை பெரியளவான வளர்ச்சிப் பரம்பலை எட்டவில்லை என்பது புலனாகின்றது.

## 2.1. சவால்கள்

### 2.1.1. இடைவிலகல்

இலங்கையின் கல்வி வளர்ச்சி வீதம் அதிகரித்துள்ளபோதிலும் மாணவர்களின் இடைவிலகல் இன்னும் பெரியளவான மாற்றங்களை அடையவில்லை என்பதற்குப் படுவான்கரைப்பிரதேசம் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக உள்ளது. வறுமை, தொழிலில் ஈடுபடுதல், பெற்றாரின் அசமந்தப் போக்கு, இளவயதுத் திருமணம், எழுத வாசிக்கத் தெரியாமை, கற்றலில் பின்னடைவு, இடப்பெயர்வு, சுகவீனம், விசேட தேவை, போக்குவரத்து பிரச்சினை, பெற்றார் வெளிநாடு செல்லல், மாணவன் வெளிநாடு செல்லல், பெற்றார் மற்றும் சகோதரரைப் பராமரித்தல் போன்ற பல காரணங்கள் படுவான்கரைப்பிரதேச மாணவர்களின் இடைவிலகலுக்கு காரணங்களாக உள்ளன. பின்வரும் அட்டவணை(4.1.1)மாணவர்களின் இடை விலகலை எடுத்துக்காட்டுகின்றது.

| வருடம் | இடை விலகிய மாணவர்கள் |
|---|---|
| 2011 | 256 |
| 2012 | 339 |
| 2013 | 443 |
| 2014 | 239 |

### 2.1.2. மாணவர்களின் சீரான வரவின்மை

மாணவர்கள் தொடர்ச்சியாக பாடசாலைக்கு வராமல் இடையிடையே சமூகமளிப்பதும் அதனால் கற்றலில் உள்ள ஊக்கம் படிப்படியாக குறைந்து செல்வதும் காரணமாக பெறுபேறுகளில் வீழ்ச்சியேற்படுவதுடன் காலப்போக்கில் இடைவிலகவும் வாய்ப்பாக உள்ளது. பெற்றாரின் கவனமின்மை, இடையிடையே மாணவர்கள் கூலி வேலைக்குச் செல்லல் (உதாரணமாக மேசன் வேலைக்குச் செல்லல், வேளாண்மை அறுவடை செய்யும் காலங்களில் அறுவடை வேலைகளில் ஈடுபடல்),கோயிற் சடங்கு காலத்தில் பாடசாலைக்கு வராமை முதலானவை மாணவர்களின் சீரான வரவின்மைக்குக் காரணங்களாக உள்ளன.

### 2.1.3.குடும்ப வறுமை நிலை

படுவான்கரைப்பிரதேச மக்களில் பெரும்பாலானோர் தொழிலற்றவர்களாகவும் அதனால் வறுமை நிலையில் வாழுகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்நிலை மாணவர்களின் கல்வி நிலையிலும் பெரிதும் தாக்கம் செலுத்துமொன்றாகக் காணப்படுகின்றது. வயல் நிலங்கள் அதிகமாகக் காணப்பட்டபோதிலும் அவை சாதாரண மக்களுக்கு உரித்துடையதாக இல்லை. வெளியூர்களில் இருப்பவர்களும் உள்ளூரிலுள்ள வசதி படைத்த குறிப்பிட்ட சிலருமே வயல் நிலங்களிலிருந்து வருமானங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். சிலருக்கு மேட்டு நிலக்காணிகள்

இருந்தும் அவற்றைத் திருத்தி அவற்றிலிருந்து ஊதியத்தைப் பெறக் கூடிய பொருளாதாரம் இல்லாதவர்களாகவும் இங்குள்ள சில மக்கள் உள்ளனர். கடந்த காலங்களில் வயல் அறுவடைக்காலங்களில் அரிவாள்களால் வேளாண்மை வெட்டி அதன் மூலம் வரும் வருமானத்தின் மூலமும் ஏனைய காலங்களில் வேறு பிரதேசங்களுக்குச் சென்று வயல்வேலைகளில் ஈடுபட்டும் மற்றும் விறகு வெட்டி விற்றல், தேன் எடுத்தல், மீன் பிடித்தல் முதலானவற்றின் மூலமும் வாழ்வை நகர்த்தி வந்த மக்கள் இன்று உழைக்கும் வழிகளை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அருவி வெட்டும் இயந்திரங்களின் வருகை இங்குள்ள சாதாரண மக்களின் தொழிலை இழக்கச் செய்துள்ளதுடன் அவர்களை அறுவடைக்காலங்களிலும் மிகவும் துன்பப்படும் வறுமை நிலைக்கு உட்படுத்தியுள்ளது. இதனால் வீட்டில் கணவன் மனைவியருக்கிடையே முரண்பாடுகளும் குழந்தைகள் உளவியல் ரீதியில் பாதிக்கப்படும் நிலையும் ஏற்படுவதுடன் குழந்தைகள் போசாக்கற்றவர்களாகவும் அதனால் கற்றலில் ஆர்வமற்றவர்களாகவும் காணப்படும் நிலையும் கூடுதலாகக் காணப்படுகின்றது.

**2.1.4.பெற்றார் வெளிநாட்டில் தொழில் புரிதல்**

தாய் அல்லது தந்தை அல்லது இருவரும் வெளிநாட்டில்தொழில் நிமிர்த்தம் செல்லும்போது தங்கள் குழந்தைகளை பாட்டன், பாட்டியிடம் அல்லது வேறு யாரிடமோ ஒப்படைத்துவிட்டுச் செல்கின்றனர். அதனால் பிள்ளைகள் உள ரீதியான பாதிப்புக்கு உட்படுவதுடன் கற்றலில் ஆர்வமின்றிப்போகும் நிலையும் மந்தப் போசாக்குக்கு உட்படும் நிலையும் ஏற்படுகின்றது. அத்துடன் பாடசாலைக்குச் செல்லும் வீதமும் குறைவடைகிறது. வெளிநாட்டிலிருக்கும் தாய் அங்கேயே பாலுறவுக்கு உட்பட்டு குழந்தையைக் கருத்தரித்துக்கொள்வதும் அல்லது மனைவி வெளிநாட்டிலிருக்கும் சந்தர்ப்பத்தில் கணவன் வேறொரு பெண்ணுடன் தொடர்பை வைத்திருப்பதும், திருமணம் செய்வதும், பிள்ளைகள் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுவதும் போன்ற காரணங்களால் பிள்ளைகளின் கல்வி கேள்விக்குறியாக மாறிவிடும் சூழல் காணப்படுகின்றது.

**2.1.5. முன்பள்ளிக்கல்வி சிறந்த முறையில் கிடைக்காமை**

முன்பள்ளி கற்பிக்கும் ஆசிரியர்களின் தகைமையின்மை, முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் முறையாக வழங்கப்படாமை, தொண்டராகத் தொடர்ந்தும் பணியாற்றுவதனால் அக்கறையின்மை முதலான காரணங்களால் முன்பள்ளிக் கல்வி பலவினமானதொன்றாகவே காணப்படுகின்றது. இவ் அசாதாரணச் சூழல் சிறுவர்களுக்கான கல்வி யானதுசரியாகச் சென்றடைவதற்குத் தடையாகவுள்ளது. முன்பள்ளிக்கல்விசிறந்த முறையில் சென்றடையாமை காரணமாக அது தொடர்ந்து வரும் கற்றலில் பெரிதும் தாக்கம் செலுத்துமொன்றாகவும் மாணவர்களிடையே பெரியளவான ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்து மொன்றாகவும் அமைந்துவிடுவதை இனங்காண முடியும்.

**2.1.6. போக்குவரத்துப்பிரச்சினை**

பாடசாலைக்கும் வீட்டுக்குமுள்ள தூரம் அதிகமாகக்காணப்படுவதுடன் போக்குவரத்து வசதியின்மையும் படுவான்கரைப்பிரதேச மாணவர்கள் எதிர்நோக்கும் முக்கியமான சவாலாகவுள்ளது. தரம் ஐந்துவரை தமது ஊரிலுள்ள பாடசாலையில் கல்வி கற்கும் ஒரு பிள்ளை, அப்பாடசாலையில் தரம் ஆறு இல்லாமைகாரணமாக வேறு பாடசாலைக்குச் செல்லும் நிலை வரும்போது புதிதாகச் செல்ல வேண்டியுள்ள பாடசாலைக்குள்ள தூரம் காரணமாக செல்லாது கல்வியை இடைநிறுத்தவும் சீராகப் பாடசாலைக்குச் செல்லாமல் நிற்கவும் வாய்ப்பேற்படுகின்றது.

**2.1.7. இப்போதுள்ள மாணவர்களில் பலர் அடிப்படைக்கல்வி அற்றவர்களாகக் காணப் படுகின்றமை.**

யுத்தகாலத்தில் காணப்பட்ட அசாதாரண சூழல் காரணமாக மாணவர்களுக்கான அடிப்

படைக்கல்வி முறையாகக் கிடைக் கவில்லை. அத்துடன் குடும்ப வறுமை, பெற்றாரின் கவனயீனம்,கற்பதற்கு ஏற்ற வீட்டுச் சூழலின்மை இவை போன்றகாரணங்களால் அடிப்படைக் கல்வியை மாணவர்கள் பெறவில்லை. ஆசிரியர் பற்றாக்குறை, பயிற்றப்பட்ட துறைசார் ஆசிரியர் கள் கல்வி கற்பிக்காமை முதலான வையும் மாணவர்களின் கல்வியில் பாதிப்பினை ஏற்படுத்தின. இன்றுள்ள மாணவர்களில் பெரும்பாலானோர் இத்தகையதன்மையில் காணப்படுகின்றமையினால் தரம் ஐந்து, க.பொ.த.சாதாரண தர, உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வீழ்ச்சியேற்படும் நிலை காணப்படுகின்றது. படுவான்கரைப் பிரதேசத் தினைப் பொறுத்தவரை இப்பிரச் சினைப் பாரிய சவாலாக தற்போது உள்ளது.

**அட்டவணை.4.1.3**

| தரம் ஐந்து பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | | | |
|---|---|---|---|
| வருடம் | பரீட்சைக்குத் தோற்றியோர் | 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | சித்தி வீதம் |
| 2010 | 1073 | 413 | 38.5 |
| 2011 | 982 | 394 | 40.05 |
| 2012 | 1227 | 567 | 47.2 |
| 2013 | 1148 | 576 | 50.2 |
| 2014 | 1218 | 676 | 55.5 |

**அட்டவணை.4.1.4**

| | க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை | | |
|---|---|---|---|
| வருடம் | பரீட்சைக்குத் தோற்றியோர் | உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றோர். | சித்தி வீதம் |
| 2010 | 498 | 183 | 36.7 |
| 2011 | 659 | 362 | 54.9 |
| 2012 | 674 | 300 | 44.5 |
| 2013 | 695 | 275 | 39.6 |
| 2014 | 812 | 269 | 33.1 |

**அட்டவணை.4.1.5**

| உயர்தரம் - கலைப்பிரிவு | |
|---|---|
| வருடம் | பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றோர் வீதம் |
| 2010 | 61.6% |
| 2011 | 55.0% |
| 2012 | 33.0% |
| 2013 | 47.7% |
| 2014 | 50.7% |

**2.1.8. வீட்டுச் சூழல் படிப்பதற்கு ஏதுவாக இல்லாமை**

பல மாணவர்களின் வீட்டுச் சூழல் அவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்றதாக இல்லாமல் உள்ளது. கணவன், மனைவியருக்கிடையே புரிந்துணர்வற்றதன்மை, கல்வி கற்பிக்க வேண்டுமென்ற விழிப்புணர்வின்மை, தொலைக் காட்சி நாடகங்களில் கூடுதலாக நாட்டம் செலுத்துதல், மதுப்பழக்கம், இடவசதியின்மை இவை போன்ற காரணங்களால் மாணவர்கள் படிக்க முடியாத இக்கட்டான நிலைக்கு உட்படவேண்டியுள்ளதுடன் காலப்போக்கில் வீட்டுச் சூழலுக்கு ஏற்ப இசைவாக்கமடைந்து கற்றலில் ஆர்வம் குறைந்துபோகவும் வாய்ப் பேற்படுகின்றது.

**2.1.9. ஆசிரியர் பற்றாக்குறை**

போர்க் காலத்துடன் ஒப்பிடும்போது தற்போது ஆசிரியர் பற்றாக்குறை குறைந்துள்ளமையைக் காணலாம். எனினும் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், தொழிநுட்பம் முதலான முக்கிய பாடங்களுக்கான ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டியுள்ளது. குறிப்பாக 50 இற்கும் மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் முக்கிய பாடங்களுக்காக நிரப்பப்படாமல் உள்ளன.

**2.1.10. பயிற்றப்பட்ட துறை சார் ஆசிரியர்கள் குறைவாகக் காணப்படுகின்றமை**

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னிருந்த வளப்பற்றாக்குறை தற்போது குறைந்துள்ளது. முன்பு கட்டட வசதிகளின் தேவைகளும் ஆசிரியர் வளப்பற்றாக்குறையும் பெரும் சவா லாக இருந்தன. இன்று பாடசாலைக் கட்டங்கள் புதிதாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் திருத்தவேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொக்கட்டிச்சோலை இராமகிருஸ்ண மிசன் வித்தியாலயம், நாவற்காடு நாமகள் வித்தியா லயம் முதலான ஒரு சில பாடசாலை களுக்கே கட்டட வசதி தேவையாகவுள்ளது. தளபாடங் களின் பற்றாக் குறை தற்போதும் உள்ளது.

ஆசிரியர் ஆளணியின் தேவையும் தேவையாக உள்ள அதேவேளை குறிப்பிட்ட துறைசார் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமல் அதாவது நியமனப்படியான ஆசிரியர்களின் தட்டுப்பாடும் ஒரு சவாலாகவே உள்ளது. கலைப்பட்டதாரிகள் கூடுதலாக உள்ள போதிலும் தமிழ், சமயம் முதலான பாடங்களில் மாணவர்கள் சித்தியடையும் வீதம் குறைவாக உள்ளதுடன் இப்பாடங்களில் தேர்ச்சிபெறாமை காரணமாக உயர்தரம் கற்க முடியாத நிலையும் காணப்படுகின்றது.

**2.1.11. பாடசாலைச் சூழலுக்கு வெளியே மாணவர்களின் இயங்குதல் பற்றி கவனம் செலுத்தாமை.**

பாடசாலையில் மாணவர்களின் கல்வி நிலை, நடத்தை சார் விருத்திகள் தொடர்பாக கவனம் செலுத்தும் அதேவேளை பாடசாலைச் சூழலுக்கு வெளியே குறித்த மாணவர்களின் இயங்கு நிலை பற்றி கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். ஆனால் இங்கு இரண்டாவதாகக் குறிப்பிடப்படும் பாடசாலைச் சூழலுக்கு வெளியே மாணவர் ஒருவர் எவ்வாறு கல்வியைப் பெற்றுக் கொள்கின்றார் அல்லது அவரது இயங்குதல் எவ்வாறு இருக்கிறது, அவர் தமது பொழுதை எவ்வாறு கழிக்கின்றனர் என்று கவனம் செலுத்தப்படுவது மிக மிகக் குறைவாகவே உள்ளது. பாடசாலையில் கற்பிப்பதற்குத் தான் சம்பளம் வழங்கப்படு கின்றது என்று சிலர் கருதலாம். ஆனாலும் கல்விக் கொள்கையின் நோக்கம் ஒருவரை சிறந்த நற்பிரஜையாக - சவால்களை வெற்றி கொண்டு வாழக்கூடியவராக ஆக்குவதே ஆகும். இதனடிப்படையில்பெற்றாரின் வழிகாட்டலும் சரியாக இல்லாமல் ஆசிரியர்களின் வழிகாட்டல்களும் முறையாகக் கிடைக்காமல் உள்ள மாணவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தாமையால் பாடசாலைக்கு உள்ளே எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டாலும் அம்முயற்சிக்கு ஏற்ற பலன் கிடைக்காமல் போகின்ற நிலை ஏற்படுகின்றது.

**2.2. சாத்தியப்பாடுகள்**

**2.2.1. பொதுப் போக்குவரத்துச் சேவை களைச் சீராக நடைமுறைப் படுத்துதல்.**

மக்களின் பொருளாதார விருத்திக்கும் ஓரிடத்தில் நிலைத்து வாழும் சிறப்பான வாழ்வுக்கும் போக்குவரத்து இன்றியமையாததாகும். ஆனால் படுவான்கரைப்பிரதேசத்தில் பல போக்குவரத்துப் பாதைகள் சீரின்றிக் காணப்படுகின்றன. இதனால் மக்களின் சாதாரன போக்குவரத்தே மிகவும் கடினமானதாகவுள்ளது. நீண்ட தூரங்களிலிருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்கள் போக்குவரத்துச் சீரின்மையால் பாதிக்கப்படுகின்றனர்.

அவ்வகையில் பாதைகள் புணரமைப்புச் செய்யப்பட்டுபொதுப்போக்குவரத்துச் சேவைகள் வழங்கப்படுதல் வேண்டும். இன்று மக்கள் செறிவு குறைவாகவுள்ள பிரதேசங்களுக்கு போக்குவரத்துச் சேவைகள் வழங்கப்படவில்லை. வருமானத்தை நோக்காகக் கொண்டு போக்குவரத்துச் சேவையை வழங்குவது என்பது படுவான்கரைப்பிரதேசத்தில் சாத்தியப்பாடற்றது. ஆகையினால் போக்குவரத்துச் சேவையாளர்களுக்கு அரசாங்கம் மானியங்களைக் கொடுத்து எல்லா இடங்களுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளைவழங்குமாயின் பல சவால்களைப் படுவான்கரைப்பிரதேச மக்கள் எட்டமுடியும். குறிப்பாக விவசாயச் செய்கை உள்ளிட்ட உள்ளூர் உற்பத்திகள் விருத்தியடையும். இடம்பெயர்ந்து வேறு இடங் களுக்குச் செல்லும் நிலையும் தவிர்க்கப் படும். போக்குவரத்துக் காரணமாக நிகழும் இடைவிலகல் தவிர்க்கப்படுவதுடன் மாணவர்கள் பாடசாலைக்கு வருகைதருவதும் சிறப்பாக அமையும்.

**2.2.2. பொருளாதார விருத்திக்கான செயற்பாடுகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்**

படுவான்கரைப்பிரதேச மக்களின் நாளாந்த வருமானம் இன்று கேள்விக்குறியாக்கப் பட்டுள்ளது. கூலித் தொழில் செய்வதற்கும் வழியற்றுத் தவிர்க்கும் துன்பநிலையிலேயே மக்கள் காணப்படுகின்றனர். மக்களின் குடும்ப

பொருளாதார நிலை மேம்படும்போது வறுமை காரணமாக மாணவர்கள் தொழிலில் ஈடுபடுதல், பெற்றார் வெளிநாடு செல்வதனால் மாணவர்கள் உடல் உளரீதியில் பாதிக்கப்படுதல், மாணவர் வரவு வீதம் குறைவாகக் காணப்படுதல், போசாக்குக் குறைவாகக் காணப்படுதல் முதலான சவால்களை வெற்றிகொள்ளமுடியும். ஆகையினால் உள்ளூர் வளங்களைப் பயன் படுத்தி தொழில் செய்வதற்குரிய தொழில் வழிகாட்டல்களை வழங்குவதுடன் அவற்றினைக் கொள்வனவு செய்வதற்குரிய சந்தை வாய்ப்பினையும் ஏற்படுத்துதல் வேண்டும். அத்துடன் இலாபமீட்டுவதை நோக்காகக் கொண்டு முறையான திட்டமிடலும் மேற்பார் வையும் இன்றி நிறுவனங்கள் கடன்களைக் கொடுத்து மக்களை மேலும் கடன்காரர்களாக ஆக்காமல், பிறரிடம் கையேந்தி வாழும் நிலைக்கு வழிப்படுத்தாது தன்னளவில் நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார ஈட்டத்திற்கு வலுவூட்டவேண்டும். வாழ்வாதாரத் தொழி லொன்றுக்காகக் கடன்களைப் பெற்றுக் கொள் ளும் மக்கள் அந்நோக்கத்தின் அடிப்படையில் பணத்தினைப் பயன்படுத்தாது அப்போதுள்ள அவசர தேவைக்காக அல்லது ஏதாவது பொருட்களை வாங்குதல் முதலான தேவை களுக்காகச் செலவு செய்கின்றனர். பணம் தீர்ந்துபோனதும் மீண்டும் யாரிடமாவது கடன் வாங்கவேண்டுமென்ற நிலைக்கு உள்ளாகின் றனர். சிலர் பெற்றுக் கொண்ட கடனை தீர்ப் பதற்கு வட்டிக்குக் கடன் வாங்கும் நிலையும் காணப்படுகின்றது. இவற்றின் விபரீதம் பற்றிய விழிப்புணர்வூட்டலை மக்களுக்கு வழங்கி அவர்களை வலுவூட்ட வேண்டும். சமூக சேவைகள் அமைச்சு மக்களின் வாழ்வாதார மேம்பாடு குறித்து அதிக கவனம் செலுத்தி திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துதல் அவசியமானதாகும்.

**2.2.3. விழிப்புணர்வூட்டல் செயற்பாடு களை முன்னெடுத்தல்**

இடைவிலகல், சீரான வரவின்மை, பெற்றார் வெளிநாடு செல்லல், மாணவர்களை வேலைக்கு அமர்த்துதல், வீட்டுச் சூழல் கற்றலுக்கு ஏற்றதாக இல்லாமை முதலான சவால்களை வெற்றிகொள்வதற்கு பெற்றாரி டையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் முக்கிய மானதாகும். பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பு நெருக்கமானதாக இருக்கவேண்டும். இல்லையேல் கல்வியில் முன்னேற்றம் என்பது சாத்தியப்பாடற்றதாகவே மாறிவிடும். படுவான்கரைப்பிரதேசத்தில் பெரும்பாலான பெற்றார் கல்வியறிவு அற்றவர் களாகக் காணப்படுகின்றனர். தமது பிள்ளை களை கல்வியில் முன்னேற்றுவதற்கு பெற்றார் நன்றாகக் கற்றிருக்கவேண்டுமென்பது முக்கிய மில்லை. ஆனால் தம் பிள்ளைகளைக் கற்பித்து நல்லதோர் நிலைக்குக் கொண்டுவரவேண்டு மென்ற உணர்வு அவசியமானதாகும். எந்நிலை யிலும் தளராது தம் பிள்ளைகளை கற்பிக்க வேண்டுமென்ற நம்பிக்கை பல பெற்றாரிடம் இல்லாமல் உள்ளது. ஆசிரியர்கள் மிகுந்த கவனமெடுத்துக் கற்பித்தாலும் வீட்டில் குறித்த மாணர்கள் கல்வி கற்காது அல்லது கல்வி கற்பதற்குரிய சூழலை இழந்து நிற்கும்போது திருப்திகரமான பெறுபேற்றினையோ முன்னேற் றத்தினையோ எட்டமுடியாது. ஆகையினால் கிராம மட்ட அமைப்புக்களும் பாடசாலைச் சமூகமும் பெற்றாரின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் நிலைகளை அறிந்து படிப்படியாக கல்வி, வாழ்வியல் சார் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்.மாணவர்களின் ஆற்றல் களை வெளிப்படுத்தக் கூடிய நிகழ்வுகளில் பெற்றாரையும் இணைத்துக் கொண்டு அவர்களின் பிள்ளைகளின் ஆற்றல்களைப் புரிந்து கல்வியில் அக்கறை செலுத்தும் நிலையை உருவாக்கவேண்டும். இவ்வாறு பட்ட செயற் பாடுகளை ஓர் தொடர் செயற்பாடாக முன்னெ டுப்பதன் மூலம் பாடசாலைக்கும் பெற்றாருக்கு மிடையிலான உறவை மேம்படுத்திக் கொள்ள லாம்.

கிராம மட்டங்களில் பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுகின்றபோதிலும் அவை சமூகத்தினரின் மனநிலையில் ஆரோக்கியமான

மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் செயலாற்றவில்லை. குறித்த ஓரிடத்தில் பயனாளிகளை கூட்டங்களுக்கு அழைப்பது மக்கள் வரவில்லையாயின் மக்கள் மீதே பழியினைப் போடுதல் ஒரு மரபாகவே மாறிவிட்டது. சில நிறுவனங்கள் கூட்டத்திற்கு வருகின்றவர்களுக்கு பணமும் மதிய உணவும் கொடுத்து சமூகத்தை மிகவும் கீழ்த்தனமான மனநிலைக்கும் பொறுப்பற்ற தன்மைக்கும் வழிப்படுத்தியுள்ளனர். பாடசாலைகளும் பெற்றாரை வருடத்தில் ஒரு முறை அல்லது இருமுறை கூட்டங்களுக்கு அழைத்து அவர்கள் வரவில்லையாயின் பிள்ளைகளின் கல்வியில் ஊக்கமற்ற பெற்றார் என்று பழியினைத் தூக்கிப் போட்டு விடுகின்றனர். இந்நிலை மாறவேண்டும். பெற்றாரைத் தனித்தனியாக அணுகி அவர்களின் மனங்களில் படிப்படியான மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய வகையான செயற்றிறன் மிக்க முன்னெடுப்புக்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**2.2.4. மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்குதல் வேண்டும்.**

பெற்றார் விழிப்படைவதன் மூலம் வீட்டில் இடவசதியிருந்தும் பிள்ளைகள் கல்வி கற்கும் நேரத்தில் தொலைக்காட்சித் தொடர்களில் மூழ்கியிருத்தல், மது அருந்தி சத்தமிடுதல் மற்றும் கணவன், மனைவி இருவரும் குடும்பச் சண்டையிடுதல், வாய்த்தக்கம் செய்தல் உட்பட்ட பிரச்சினைகள் தீர்வுக்கு வந்துவிடும். வீட்டில் படிப்பதற்கு இடவசதியில்லாமல் இருக்கும் மாணவர்களும் உண்டு. கிராம மட்ட அமைப்புக்கள் முன்வந்து கற்பதற்கேற்ற சூழலை இழந்து தவிக்கும் மாணவர்களுக்கு கற்பதற்கு ஏற்ற நிலையங்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்து பெற்றாரையும் இணைத்து கற்பதற்கு உதவுதல் வேண்டும். படுவான்கரைப்பிரதேசத்தில் கொக்கட்டிச் சோலை, அரசடித்தீவு, அம்பிளாந்துறை, முனைக்காடு, முதலைக்குடா, கன்னன்குடா முதலான பல இடங்களில் நடைபெற்று வந்த இரவு நேர வகுப்புக்கள் தற்போது சிறந்த முறையில் நடைபெறவில்லை. அத்தகைய செயற்பாடுகள் தொடர்ச்சியாக மிகுந்த அவதானத்துடன் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

**2.2.5. முன்பள்ளிக் கல்வியைப் பலப்படுத்துதல்**

முன்பள்ளிக் கூடங்களில் நிலவும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றினை சீர்செய்வதுடன் முன்பள்ளிக் கூடங்கள் இல்லாத இடங்களுக்கு முன்பள்ளிக் கூடங்களை அமைத்து செயற்படுத்துதல் வேண்டும். முன்பள்ளிக் கூடங்களில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களையே பயன்படுத்துதலும் அவர்களுக்கான கொடுப்பனவுகளை முறையாக வழங்குவதும்முக்கியமானதாகும். மேலும் தூர இடங்களுக்கு சென்று முன்பள்ளிக் கல்வியைக் கற்கவேண்டும் என்பதனால் முன்பள்ளிக்கே செல்லாது தரம் ஒன்றில் இணைந்துகொள்ளும் பிள்ளைகளும் இருக் கிறார்கள். இத்தகைய சிறுவர்கள் பற்றியும் மிகுந்த கவனம் செலுத்துதல் வேண்டும். குறிப்பாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அல்லது கிராம மட்டச் செயற்பாட்டாளர்கள் அரச,அரச சார்பற்ற நிறுவனங்களுடன்தொடர்பை ஏற்படுத்தி முன்பள்ளிக் கல்விக்கு உதவுதல் வேண்டும். பாடசாலைகளில் காணப்பட்ட ஆசிரிய வளப்பற்றாக்குறை தற்போது 95 வீதம் (மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவ லகத்தின் தகவலின் படி) தீர்க்கப்பட்டுள்ளது. ஆகையினால் சமூக மட்ட அமைப்புக்களும் கோயில்களும் முன்பள்ளிக் கல்வியிலேயே தமது கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். ஆலயங்களில் வீண் செலவு செய்வதைத் தவிர்த்து கல்வி விருத்திக்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும்.

**2.2.6. அடிப்படைக்கல்வியை இழந்த மாணவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்துதல்.**

தற்போது பரீட்சைகளில் குறைவான புள்ளிகளைப் பெறுகின்றவர்களாகவும் சித்தியடையத் தவறுகின்றவர்களாகவும் காணப்படுகின்றவர்களில் பெரும்பாலானோர் முன்பு அடிப்படைக்

கல்வியை இழந்தவர்களாவர். தற்போதைய நிலையில் பரீட்சைப் பெறுபேறுகள் சிறந்ததாக அமையாமைக்கும் இத்தகைய ஆரோக்கியமற்ற சூழலும் முக்கியமான காரணமாகும். எனினும் ஆசிரியர்கள் இத்தகைய மாணவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். அவர்களுக்கான எழுத்தறிவு விருத்தி, மன நிலை வலுவூட்டல் சார் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். பரீட்சைகளைப் பொறுத்தவரை குறிப்பாக சாதாரண தரப் பரீட்சைகளில் இத்தகைய மாணவர்களில் கூடுதலானவர்கள் சித்தியடையாமலிருப்பதைத் தவிக்கும் வகையில் ஒரு மாணவர் சாதாரண மாகச் சித்தியடையக் கூடிய கணிதம் தமிழ் உட்பட மூன்று விசேட சித்தி மூன்று சாதாரண சித்தி என்ற இலக்கின் அடிப்படையிலாவது தமது செயற்பாட்டை முன்னெடுக்கும் போது சித்தியடையும் வீதத்தினை அதிகரித்துக் கொள்ளலாம்.

**2.2.7. ஆசிரிய ஆளணியினரை நியமித்தல்**

கடந்த காலத்தில் போரினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் மோசமாகப் பாதிக்கப் பட்ட பிரதேசம் என்ற வகையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழிநுட்பம் முதலான பாடங்களுக்காகத் தேவைப்படுகின்ற ஆளணியினரை நியமித்துக் கொள்வதன் மூலம் இச்சவாலை வெற்றி கொள்ளமுடியும்.

**2.2.8. பயிற்றப்பட்ட துறைசார் ஆசிரியர்களைப் பயன்படுத்துதல்.**

பயிற்றப்பட்ட துறைசார்ந்த ஆசிரியர்களையே அனைத்துப் பாடங்களுக்கும் பயன்படுத்துவதென்பது மிகவும் இலகுவானதன்று. ஏற்கனவே சேவையிலுள்ள ஆசிரியர்களை என்ன செய்வதென்பது இவ்விடத்தில் எழும் பாரிய சவாலாகும். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு முதலான பாடங்களுக்காக நீண்ட காலமாக நிலவி வந்த ஆசிரிய பற்றாக்குறை காரணமாகவே நியமனப்படியல்லாத ஆசிரியர்களை வேறு பாடங்களுக்குப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. இத்தகைய ஆசிரியர்களில் சிலர் சுய தேடல்கள் மூலம் தம்மை விருத்தி செய்து மாணவர்களை வளப்படுத்துகின்றவர்களும் உள்ளார்கள். குறிப்பிட்ட சிலர் இவ்வகையில் வெற்றி காண முடியாதவர்களாகவே உள்ளன. தற்போதைய நியமனங்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட பாடத் துறைகள் சார்ந்தவர்களை உள்வாங்குவதாகவே அமைந்துள்ளன. இந்நிலைப்பாடு காலப் போக்கில் இச்சவாலைச் சாத்தியப்படுத்தக் கூடியதாக அமையும்.

**2.2.9. பாடசாலைச் சூழலுக்கு வெளியே மாணவர்களின் இயங்கு நிலை தொடர்பாகக் கவனம் செலுத்தல்**

பாடசாலைக்கு வெளியே மாணவர்களின் இயங்குதலை அறிந்து அவர்களை வழிப்படுத்துவதற்கு கள ஆய்வுகளை மேற்கொள்ளத்தேவையில்லை; மேற்பார்வை செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. பாடசாலையிலேயே மாணவர்களிடம் அவர்களின் வெளிச் சூழல் இயங்குதல் பற்றி அறிந்து வழிப்படுத்தலாம். குறிப்பாக மாணவர்கள் பிரத்தியேக வகுப்புக்களில் செல்பவர்களாக இருப்பின் அவர்கள் அந்த வகுப்புக்களாக செலவு செய்யும் நேரத்தின் அளவு என்ன? அதனால் அவர்கள் அடைந்து வருகின்ற மாற்றங்கள் என்ன? என்பதை உணர்ந்து வழிப்படுத்த முடியும். படுவான்கரைப் பிரதேசத்திலிருக்கின்ற மாணவர்களில் பலர் நகர்பகுதிக்கு பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்வதிலேயே தமது பொழுதைக் கழித்து விடுகின்றார்கள். அவ்வாறான மாணவர்களில் பலர் வீட்டில் சுய கற்றலில் ஈடுபடுவதில்லை. மாணவர்கள் சுய கற்றலில் ஈடுபடுவதற்கு வழிப்படுத்த வேண்டும். பெற்றார் சந்திப்புக்கள் மூலமாகவும் மாணவர்களின் நலனை மேம்படுத்த முடியும். மேற் கூறியவாறு மாணவர்களினூடாக அவர்களின் நிலையை அறிதல், பெற்றார்

சந்திப்புக்களை மேற்கொள்ளுதல் ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களும் வெளிச் சூழலில் மாணவர்களின் கல்வி விருத்திச் செயற்பாட்டை மேற்கொள்வது கை கூடவில்லையாயின் குறித்த பிரதேசத்திலுள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள், கல்வி அபிவிருத்தி அமைப்புக்கள், கிராம நலன் சார்ந்த சங்கங்கள், கிராம சேவை உத்தியோகத்தர் போன்றோர் மூலம் ஓரளவு மாணவர்களின் இயங்குதலை அவதானிக்க முடியும். இத்தகைய வகையில் பாடசாலைக்கு வெளியே மாணவர்களை வழிப்படுத்துவது சில இடங்களில் சாத்தியமற்றதாக இருப்பினும் சாத்தியப்படக் கூடிய இடங்களில் மேற்கொள்ள லாம் எல்லா மாணவர்கள் தொடர்பிலும் இவ்வாறு கவனம் எடுக்கத் தேவையில்லை. படிப்பில் பின்னடைந்த நிலையிலுள்ள, வரவு ஒழுங்கற்ற பிள்ளைகள் தொடர்பில் அவதானம் செலுத்தினாலே குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் மாணவர்களின் பாடசாலைக் கல்வியிலும் சமூகத்திலும் ஏற்படும்.

**3. முடிவுரை**

படுவான்கரைப்பிரதேசத்தின் கல்வி நிலை மிகவும் சவால்மிக்கதொன்றாகவே காணப்படுகின்றது. இதனை மட்டக்களப்பு மேற்குப் பாடசாலைகளின் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தர, உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கோடிட்டுக் காட்டுகின்றன. முன்னேற்றகரமற்ற பெறுபேறுக ளுக்கு கடந்த கால யுத்தச் சூழல் மிக முக்கிய மான காரணமாகும்.கடந்த காலங்களில் அடிப்படைக்கல்வியை இழந்த மாணவர்கள் இன்று பரீட்சைகளை எதிர்கொள்ளுகின்றனர். போக்குவரத்து வசதியின்மை, குடும்ப வறுமை, பெற்றாரின் கவனக்குறைவு, சிறந்த முகா மைத்துவமின்மை முதலானவையும்பிரதேச கல்வி வளர்ச்சிக்குத் தடையாகவுள்ளன. இவற் றுக்கு பொதுப்போக்குவரத்து வசதிகளை வழங்குதல், சமூக விழிப்புணர்வூட்டற் செயற் பாடுகளை முன்னெடுத்தல்,பொருளாதார விருத்திக்கான செயற்பாடுகளையும் வழிகாட்டல்



களையும் வழங்குதல், மாணவர்கள் கற்றலுக்கு ஏற்ற சூழலை உருவாக்குதல், முன்பள்ளிக் கல்வியை பலப்படுத்துதல், அடிப்படைக் கல்வியறிவு குறைவான மாணவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்துதல் முதலான செயற் பாடுகளை கிராம மட்ட அமைப்புக்கள், குறிப்பாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கல்வி அபிவிருத்திச்சங்கங்கள்,கோயில்கள், விளை யாட்டுக்கழகங்கள் முதலானவை முன்னெடுக் கும் நிலை உருவாக்கப்படவேண்டும். நிறுவனங் களும் குறுகிய கால நோக்கத்திலான ஆரோக் கியமற்ற செயற்பாடுகளை விடுத்து கல்வி விருத்திக்கான மாற்றங்களை ஏற்படுத்தத் தக்க செயற்றிறன் மிக்க செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

**த.மேகராசா**
அரசடித்தீவு

**4. உசாத்துணைகள்**

4.1.ஆய்வரங்கக் கட்டுரைகள், 2011, பட்டிப் பளைப் பிரதேச கலை இலக்கிய சமூக அபிவிருத்தி ஒன்றியம்.

4.2. புள்ளிவிபரத்தகவல்கள், 2013,மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு.

4.3. புள்ளிவிபரத்தகவல்கள், 2013,2014, திட்ட மிடல் பிரிவு, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம்.




# பண்டைத்தமிழர் வரலாற்றை வலியுறுத்தும் 2000ம் வருடங்களுக்கு முற்பட்ட தாந்தாமலை

பண்டைய ஈழ வரலாற்றில் தெளிவற்ற பகுதிகள் பலவுள்ளன. அவற்றுள் குறிப்பாக பண்டைய மட்டக்களப்பு மாநில வரலாற்றில் இருள் படிந்து கிடக்கின்றது. இவ் விருளுள் எதையேனும் தேடிக்காண பௌத்தபாளி நூல்களையும் பிராமிக் கல்வெட்டுக்களையும் அகழ்வாராய்ச்சி தேடல்களையும் ஆய்வாளர்களின் அபிப்பிராயங்களையும் நாட வேண்டியுள்ளது.

கி.மு. 5ம் நூற்றாண்டில் ஆரியர் இந்நாட்டில் குடியேறியதாகவும் அதனால் ஒரு புதுயுகம் தோன்றியதாகவும் பௌத்த பாளி நூல்கள் குறிப்பிடுகின்றன. இந் நிகழ்வு இந் நாட்டு வரலாற்றில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை என்பதும் பெரியதொரு அடிப்படையில் ஆரிய குடியேற்றம் நிகழவில்லை என்பதும் நவீன ஆய்வாளர் கருத்தாகும்.

கி.மு 3ம் நூற்றாண்டில் பௌத்தம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது என்பது ஓர் உண்மை நிகழ்வு. எனினும் அசோகச் சக்கர வர்த்தியுடன்



தொடர்புபடுத்தி இந்நிகழ்வு பெரிதாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. பௌத்தம் இலங்கைக்கு வந்த காலத்தில் தமிழ் நாட்டிலும் இதன் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டிருந்தது.

கி.மு 8ம் நூற்றாண்டில் இனக்குழுக்களின் ஆதிக்கத்தின் கீழ் தமிழ் நாடு நாகரிகம் அடைந்திருந்தது.

மகிழடித்தீவு அமரர் கலாபூஷணம்
க. மகேஸ்வரலிங்கம் (மகிழை மகேசன்)
அவர்களால் எழுதப்பட்ட 2002.07.16
தினக்கதிர் பத்திரிகையில் வெளியான
கட்டுரை மீள் பிரசுரிக்கப்படுகின்றது.

கி.மு.5ம் நூற்றாண்டளவில் அங்கு அரசுகள் தோன்றி நாகரிக முதிர்ச்சி நிலையைக் காணமுடிந்தது. இந் நிலையில் தமிழ் நாட்டார் வெளிநாட்டு வாணிபங்களிலும் ஈடுபடத் தொடங்கினர். சமணமும் பௌத்தமும் தமிழ் நாட்டுள் பரவத்தொடங்கியபோது வாணிபத்தில் ஈடுபட்டோர் இச் சமயங்களை பெரிதும் தழுவிக் கொண்டனர். இதனால் இலங்கையுள் பௌத்தம் பரவுதற்கு தமிழ் நாட்டு வாணிபத்தில் ஈடுபட்டவர்களும் காரணமாக இருந்தனர். குறிப்பாக பௌத்தத்தோடு இணைந்து பத்தினி வழிபாடு இங்கு வருவதற்கு தமிழ் நாட்டு வணிகர்களே முக்கிய காரணமாக இருந்தனர். எனவே இலங்கையில் பௌத்தம் என்று கூறும்போது அதற்கும் தமிழர்களுக்கும் தொடர்பில்லை என்று நறுக்கி விடுவதில் அர்த்தமில்லை.

கி.மு 3ம் நூற்றாண்டு பௌத்தம் இலங்கைக்கு வந்தபோது இங்கு மூன்று பெரிய குடியிருப்புக்கள் இருந்தன. இவை இந்நாட்டின் வட பகுதியிலும், தென்கிழக்கிலும், மேற்கிலும் காணப்பட்டன. இக் குடியிருப்புக் களில் வாழ்ந்த ஆதிக் குடிகள் இஸ்லோயிட் திராவிடர், நாகர் என்னும் இனங்களைச் சேர்ந் தவர்களாக பௌத்த பாளி நூல்கள் கூறுவது போல இவர்கள் அசாதாரண மனிதர்களல்ல சாதாரண மனிதர்களே இவர்களுள் நாகர் திராவிட இனத்தவர்களின் ஒரு பகுதியினர் என்பது இவர் கருத்து வேறு சிலர் நாகர் என்றோர் இனமில்லை நாகத்தை வழிபடுபவர்களுக்கு இப்பெயர் தோன்றிற்று என்று கூறுவர். ஒஸ்ர லேயிட் இனம் பற்றிய ஆய்வு முடிவுகள் அண்மைக்காலங்களில் தான் வெளிவரத் தொடங்கின. இவ்வினத்தவர் தெற்காசியாவில் பரவலாக வாழ்ந்தவரென அறியக்கிடக்கிறது.

நாம் முன்பு கூறிய மூன்று குடியிருப்புக் களில் தென் கிழக்கில் இருந்தது அளவில் பெரியது. இதனை உறுகுணை இராட்சியம் என்று அழைத்தனர். இன்றைய மட்டக்களப்பு அப்பாறை மாவட்டங்கள் எல்லாம் இவ் உறுகுணை இராட்சியத்துக்கு உட்பட்டதாகவே அன்றி ருந்தன. என பேராசிரியர் க. சிற்றப்பலம் குறிப்பிடுகின்றார். இவ்விராட்ச்சியம் பௌத்தம் வந்த காலத்தில் இரண்டு சஸ்திரிய வம்சங்க ளால் ஆளப்பட்டதாக பௌத்த பாளி நூல்கள் கூறுகின்றன. மேலும் இவ்விரு இனங்களி டையே முரண்பாடு தோன்றியபோது அதை தீர்த்து வைக்க புத்தர் இங்கு வந்தமையும் இவற்றுள் கூறப்பட்டுள்ளது. சங்கமித்தையால் அனுராதபுரத்துக்கு கொண்டு வரப்பட்ட வெள்ளரசு மரக்கிளை மரநாட்டு விழாவுக்கு இவ்விரு சஸ்திரிய வம்சத்தவரும் அழைக்கப் பட்ட செய்தி மகாவம்ச நூலில் கூறப்பட்டுள்ளது.

உறுகுணையில் ஆதிக்கம் பெற்றிருந்த இவ்விரு வம்சங்களையும் கதிர்காம சஸ்திரியர், சந்தணகம சஸ்திரியர் என இந்நூல்கள் குறிப் பிட்டுள்ளன. இவர்களுள் கதிர்காமத்தில் இருந்து ஆட்சி செய்தவர்கள் கதிர்காம சஸ்திரி யர்களாகும். அக் காலத்தில் கதிர்காமத்தில் முருக வழிபாடு எழுச்சி பெற்றிருந்தது. எனவே இக் கதிர்காம சஸ்திரியவம்சத்தவர் இவ் முருக வழிபாட்டை தோற்றுவித்தவராக அல்லது ஆதரித்தவராக இருந்திருத்தல் வேண்டும். முருகன் தமிழர்களின் குறிஞ்சி நிலத்தெய்வம். எனவே கதிர்காம சஸ்திரிய வம்சம் திராவிட இனத்தைச் சேர்ந்தது எனக் கருத இடமுண்டு. மேலும் கி.மு3ம் நூ ற்றாண்டில் உறுகுணைப் பகுதிக்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையில் இருந்த வர்த்தக உறவை பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை உறுதிப்படுத்தி யுள்ளார். மேலும் கி.மு 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த அங்கு காணப்படும் பிராமிக் கல் வெட்டுக்கள் இதற்கு சாட்சி தருகின்றன. பாண்டியரின் இக் கல் வெட்டுக்கள் சிலவற்றில் மீன் சின்னம் குறிக்கப்பட்டிருப்பதும் அவதானிக் கத்தக்கது. இவற்றால் எல்லாம் பௌத்தம் வரும் போது கதிர்காமத்தில் இருந்து ஆட்சி செய்த சஸ்திரியர்கள் திராவிடர் என்பது உறுதி.

சந்தணகம என்பது எது? அங்கிருந்து ஆட்சி செய்த சத்திரியர்கள் யார்? என்னும் வினாக்களுக்கு தெளிவான விடை இது வரை

யாரும் கூறவில்லை. சந்தணகம என்பது கதிர் காமம் போல ஒரு மலையை மையப்படுத்திய இடமாக இருத்தல் வேண்டும். என பேராசிரியர் க.சிற்றம்பலம் கூறுகின்றார். இவர் ஆற்றுப்படு த்துகின்ற முறையில் தாந்தாமலையை நாம் அணுகினால் அங்கு ஒரு மலையையும் அதன் சாரலில் பெருங்கற்கால நகர மொன்றின் அழிபாட்டினையும் காணமுடிகின்றது. மேலும் குறிஞ்சியும் முல்லையும் மருவிய இச் சூழலில் தூர்ந்து போன ஓர் கேணியும் உண்டு. இந் நகரத்தை மையப்படுத்தி இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் ஓர் இராட்சியம் இங்கு இருந்துள்ளது என்பது தெளிவு எனவே இந்துக் கள் தாந்தா மலையென்றும் பௌத்தர்கள் சாந்திகல என்றும் குறிப்பிடுவது சந்தணகம என்ப தன் திரிபுகளேயாம். இச் சந்தணகம இராட்சி யத்தில் ஆதிக்கம் செலுத்திய சஸ்திரியன் யார்? என்பதற்கு தக்க விடைகாண்பது கடினம்.

தாந்தா மலை உச்சியில் மிக தொன் மைக்காலம் முதல் திறந்தவெளி பிள்ளையார் வழிபாடு செய்யப்பட்டு வந்துள்ளது. இத் தொன்மை மிக்க பிள்ளையார் வழிபாடுகளை சங்கமான்கண்டி, அம்பாறையில் நாதனை, குழுபனைமடு பெருமாவெளி முதலிய இடங்க ளில் எல்லாம் காணலாம். இவ்வழிபாட்டிடங்கள் மலையிலும் குளக்கரை, ஆற்றங்கரை முதலிய இடங்களில் எல்லாம் காணப்படுகின்றன. எனவே பண்டைய ஒஸ்ரலோயிட் இன மக்களின் யக்ஷ வழிபாட்டை இவை நினைவு படுத்து கின்றன. யக்ஷ வழிபாட்டின் கீழ் மலைகள் குளங்கள், ஆறுகள், காடுகள் மரங்களெல் லாம் தெய்வங்கள் உறையும் இடங்களாக பூசிக்கப்பட்டன. குபேரன், பூதநாதன், வியாத தேவன், யக்ஷன், யக்ஷி வேறு பல பெண் தெய்வங்கள் எல்லாம் மேற்படியிடங்களில் உறைவதாக யக்ஷர்கள் நம்பினர். எனவே தாந்தாமலையும் நாம் முன்பு குறிப்பிட்ட வழிபாட்டிடங்களும் யக்ஷ வழிபாட்டின் கீழ் பூத நாதனுக்கு அல்லது குபேரனுக்கு வழிபாடு செலுத்தும் இடங்களாக இருந்து பின் கணபதி வழிபாட்டுக்குரிய இடங்களாக மாற்றம் பெற்றன எனலாம். எனவே நமது இன்றைய பிள்ளையார் வழிபாடு யக்ஷ வழிபாட்டின் ஒரு தொடர்ச்சியேயாகும். பேராசிரியர் க.சிற்றம் பலம் அவர்கள் பிள்ளையார் பூதநாதன், குபேரன் உருவங்கள் எல்லாம் கிட்டத்தட்ட ஒரே தன்மையானவை என கூறியி ருப்பது இங்கு அவதானிக்கத்தக்கது.

மேலும் தாந்தா மலைக்கு அண்மையில் விசாரமலை என ஒரு மலை உண்டு. இது வியாத மலை என்பதன் திரிபு போல் தோன்றுகிறது. வியாத தேவன் என்பது யக்ஷ வழிபாட்டின் வேட்டைக்குரிய தெய்வமாகும். அன்றைய சூழ்நிலையில் ஒஸ்ரலோயிற் இன மக்கள் வேட்டை யாடுவதை முக்கிய தொழிலாகக் கொண்டிருந் தனர். எனவே வேட்டையில் நல்ல பலன் கிடைக்க வேண்டுமென வியாத தேவனை வழிபட்டனர். இவ் வியாத தேவன் உறையும் இடமாகிய வியாத மலை பூசிக்கப்பட்டு வந்தது.

யக்ஷ வழிபாட்டின் கீழ் பெண் தெய் வங்கள் காடுகளில் உறைந்தனர். இவர்களுக் குரிய வழிபாட்டிடங்கள் நடுக்காடுகளில் அமைக்கப் பட்டன. இவ் வழிபாட்டிடங்களில் மிருகபலி, நரபலி எல்லாம் கொடுக்கப்பட்டன. எனவே அவ்வழிபாட்டிடங்களுக்கு மனிதன் தனித்துச் செல்ல அஞ்சினான். இத்தகைய வழிபாட்டிடங்களை குமண, பாணமை, பட்டிமேடு, கோரா வெளி முதலிய இடங்களில் அவதானிக் கலாம். இப் பெண் தெய்வ வழிபாட் டிடங்களில் பல பௌத்தத்தின் வருகையால் பத்தியம்மன் வழி பாட்டிடங்களாகவும் மாறியுள்ளன.

எனவே பௌத்தம் இலங்கைக்கு வந்த போது இங்கு திராவிடர்களது வழிபாடு முறையோடு யக்ஷ நாக வழிபாடு முறைகளும் உறுதி பெற்ற நிலையில் இருந்துள்ளன. குறிப்பாக திராவிடர்களும் யக்ஷ வழிபாட்டிற் குறிய ஒஸ்ரலோயிட் மக்களும் மிகுதியும் ஆதிக்கம் பெற்றிருந்தனர். அன்றை சூழ்நிலையில் பொதுவாக வரலாறும் குறிப்பாக தெற்காசிய வரலாறும் இன மோதல்களாகவே இருந்தது. இவ்வினமோதலை சித்தரிக்கும் முறையில்தான் கதிர்காம சத்திரியரையும்,



சந்தண கம சத்திரியரையும் சமாதா னப்படுத்த புத்தர் இலங்கைக்கு வந்தார் என்ற கதை பௌத்தபாலி நூல்களில் புனைந்துரைக் கப்பட்டுள்ளது. எனவே ஒஸ்ரலொயிட் இன மக்களின் ஆட்சிப் பீடமாகத்தாந்தாமலையும் திராவிட மக்களின் ஆட்சி பீடமாக கதிர்காமமும் பௌத்தம் வரும் போது இருந்துள்ளன. இவர் களது உறுதியான அரசிருக்கையே தேவநம்பிய தீஸன் வெள்ளரச மர நாட்டு விழாவுக்கு இவர்களை அழைக்க காரணமாயிற்று.

இலங்கையின் வரலாறு பௌத்தத்தின் வருகையோடு தொடங்க அதற்கு முற்பட்ட ஆதிக்குடிகளின் வரலாற்றை கதிர்காமமும், தாந்தாவும் உணர்த்தி நிற்கின்றன.


மேலும் திராவிடர்கள் கதிர்காமத்திலும் ஒஸ்ரலோயிட் இனத்தவர் தாந்தா மலையிலும் ஆதிக்கம் செலுத்தினாலும் இவ்விரு இனங்களும் இலங்கையின் தென் கிழக்கிலும் பரந்து வாழ்ந்துள்ளனர். இதற்கு இவ் விரு இனத்தவரின் வழிபாட்டிடங்கள் பரவலாகக் காணப்பட்டமை சான்று தருகிறது. திராவிடர் களின் முருக வழிபாட்டிடங்கள் வெருகல், மண்டூர், திருக்கோயில் முதலிய இடங்களிலும் பரந்து காணப்பட்டன. ஏராகாவில் கொக்கட்டுச் சோலை, மண்முனை, வெல்லாவெளி முதலிய இடங்களிலும் பரந்து காணப்பட்டுள்ளன. ஏராகாவில் என்னும் இடத்தில் இருந்த சிவன் கோயிலை கி.பி3ம் நூற்றாண்டில் மகாசேனன் அழித்ததாக பேராசிரியர் பரணவிதான குறிப்பிடுகிறார். ஏராகாவில் என்பது ஏறாவூர் என்பது பேராசிரியர் க.சிற்றம்பலத்தின் கருத்து எனவே கி.மு.3ம் நூற்றாண்டிற்கு முன்பின்னாக மட்டக்களப்பு மானிலத்தின் ஒஸ்ரலோயிட் இன மக்களும், திராவிட மக்களும் கலந்தும் விரிந்தும் மட்டக்களப்பு மாநிலம் எல்லாம் வாழ்ந்துள்ளனர்.

ஒஸ்ரலோயிட் மக்கள் தெற்காசியா எங்கும் பரந்து வாழ்ந்தாலும் அவர்களை தனித்து இனம் காணக்கூடிய அளவு அவர்கள் பரம் பரையை இன்று காணமுடியவில்லை. தெற்காசி யாவில் உள்ள எல்லா இனங்களோடும் இவர் கள் சங்கமமாய் உள்ளனர். உதாரணமாக இன்றைய திராவிடரோடு ஒஸ்ரலோயிட் மக்களும் சேர்ந்த கலவையே. இவ்வாறே சிங்களவரும் இந்தியாவில் உள்ள ஏனைய இனத்தவர்களும் ஒஸ்ரலோயிட் இனத்தவர்கள் கலந்தவர்களே இவர்களது மொழி வழிபாடு வாழ்க்கை முறை எல்லாம் ஏனைய இனத்தவரின் பண்பாட்டு வளர்ச்சிக்காக உதவி செய்து இறுதியில் சுய. உருவமே இழந்த நிலையா யிற்று. இத்தகைய தியாகிகளின் ஆட்சிப்பீடம் தாந்தாமலை என்னும் போது அந்த இடத்திற்கு அளவற்ற மகத்துவம்.

**நன்றி - தினக்கதிர்**

# பட்டிப்பளை பிரதேசத்தில் வழக்கொழிந்து போன பாரம்பரிய கிராமிய விளையாட்டுகள்

**த.சசிகாந்தன் - ஆசிரியர்** BA(HONS)
மகிழடித்தீவு.



**அறிமுகம் :-**

உலகிலுள்ள சகல ஜீவ ராசிகளிடமும் இயற்கையாகவே காணப்படும் ஒரு செயற்பாடு விளையாட்டாகும். ஒரு பிள்ளை பிறப்பதற்கு முன்பே தாயின் கருவில் இருக்கும்போதே விளையாடத்தொடங்குகின்றாள். பின்பு அப் பிள்ளை வளர்ந்து மனிதனாகி மரணிக்கும் வரையும் அது தொடர்கிறது. விளையாட்டுக்கள் மூலம் மனிதன் பொறுமை, சகிப்புத் தன்மை, மனிதநேயம், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஒற்றுமை போன்ற நற்பண்புகளை வளர்த்துக் கொள்வதுடன் அவனது உடல் வளர்ந்து உறுதியும் ஏற்படுகின்றது.

**பாரம்பரிய விளையாட்டுக்கள்**

எமது படுவான்கரைப்பிரதேசத்தில் பள்ளி செல்லும் குழந்தை முதல் துள்ளி விளையாடும் இளைஞர்கள் வரை அந்தக்காலத்திலே பாரம் பரிய கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபட்டும் அதிலே தங்களை



நாட்டம் செலுத்தியும் வந்துள்ளமை யாவரும் அறிந்த உண்மையே. அந்த வகையில் இப்பிரதேசத்தில் காணப்பட்ட விளையாட்டுக்களாவன பிள்ளையார் கட்டை, வார் விளையாட்டு. மட்டைப் பந்து, நொண்டியடித்தல் (வட்டக்கபடி), மாங் கொட்டை விளையாட்டு, கிட்டிப்புள்ளு, ஊஞ்சல் விளையாட்டு, கோட்டுப்பந்து, கள்ளன்-பொலிஸ் (ஓடி ஒளித்தல்) போன்றவற்றுடன் சின்னஞ்சிறுமிகளின் பலவிதமான விளையாட்டுக்களைக் குறிப்பிட முடியும்.

**பிள்ளையார் கட்டை :-**

ஒரு பெரிய செங்கல்லை செங்குத்தாக நிறுத்தி அதன் உச்சியில் சிறு சிறு உடைந்த சிரட்டைகளை அல்லது ஓட்டுத்துண்டுகளை (சீற்) ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைத்துவிட்டு இருபக்கமும் குறிப்பிட்ட தூரத்தில் ஆட்டக்காரர்கள் நிற்பர். ஒருவன் இறப்பர் பந்தை செங்கல்லின் மீது எறிவான். எதிரணியில் நிற்பவர்கள் பந்தை பிடித்தால் எறிந்தவன் ஆட்டமிழப்பான். பந்து குற்றியில் பட்டு விழுந் தால் எதிரணிக் காரர்கள் விழுந்த குற்றியை மீண்டும் நிறுத்தி அதன்மீது ஓட்டுத்துண்டுகளை அல்லது சிரட்டைகளை முன்பு இருந்ததுபோல் அடுக்கவேண்டும். ஆனால் பந்து எறிந்தவன் ஓடிச்சென்று பந்தைப்பொறுக்கி அவர்களுக்குள் பந்தை பரிமாற்றம் செய்வார்கள். கட்டையை அடுக்கும் வரைக்கும் அடுக்குபவர்களின் முதுகில் பந்தை பலமாக எறிந்து கொண்டே இருப்பார்கள். கட்டையை அடுக்குபவர்கள் முதுகில் அடிபடாமல் அங்கும் இங்கும் "மறுகி மறுகி" ஓடிக்கொண்டு கட்டையை அடுக்குவார். இது மிகவும் சுவாரஸ் யமானதொரு விடையாட்டாகும்.

**வார் விளையாட்டு :-**

இரு குழுக்களாக பிரிந்து 100m-110m தூரம் இடைவெளி விட்டு நேர்கோட்டில் அணி வகுத்து இருகுழுக்களும் முகம் நோக்கி எதிர் எதிராக நிற்பர். ஒருபக்கம் இருந்து ஒருவன் மறுபக்கம் சென்று தான் விரும்பிய ஒருவனின் கையை அல்லது உடலை தொட்டு "வார்" என்று சொல்லிவிட்டு தனது அணிபக்கம் ஓடி வருவான். கைகொடுத்தவன் அவனைத் துரத்தி வந்து முதுகில் அடித்தால் அடிபட்டவன் ஆட்டம் இழப்பான். ஆனால் அவனை அடிக்க விடாமல் மாற்று அணியில் இருந்து ஒருவன் ஓடிவந்து துரத்துபவனை அடிக்கவருவான். இப்படி யாவரும் மாறிமாறி ஓடிக்கொண்டே இருப்பர். குறித்த அணியினர் மற்றைய அணியுள்ளவரை ஒவ்வொருவராக பிடித்துக்கொண்டு தம் பக்கம் வைப்பதும், எதிரணியினர் அந்த



அடிபட்ட நபரை கொண்டு செல்வதற்கு (பழம் எழுப்புவதற்கு) ஓடி வருவதும் மிகவும் மகிழ்ச்சி கரமானதாகவே இருக்கும். ஓர் அணிக்காரர்கள் ஆட்டம் இழக்கும் வரை விளையாட்டு தொடரும்.

**வட்டகபடி :-**

இருகுழுக்களாகப்பிரிந்து ஒரு பெரிய வட்டமாக கோட்டை பூமியிலே வரைந்து அதற்குள் ஓர் அணியினர் நிற்பர். மறு அணியினர் வெளியில் நிற்பர். அதில் ஒருவன் "நொண்டியா? நடையா? வட்டமா?" என கேட்டுக்கொண்டு நொண்டி என அவர்கள் (உள்ளே நிற்பவர்கள்) பதில் கூற அவன் ஒரு காலை மடித்துக்கொண்டு துள்ளித்துள்ளி வட்டத்திற்குள் வந்து அங்கு நிற்பவர்களை ஒவ்வொருவராக தொடுவதற்கு வருவான். அவனது கைபட்டவன் ஆட்டம் இழப்பான். அதுபோல நொண்டி அடிப்பவன் காலை விட்டாலும் விழுந்தாலும் ஆட்டம் இழப்பான். வட்டத்திற்குள் நிற்பவர்கள் நொண்டியிடம் அடிபடாமல் அங்கும் இங்கும் மறுகி மறுகி ஓடுவர். இவ்விளையாட்டை நான் சிறுவனாக இருக்கும்போது எனது நண்பர்களுடன் சேர்ந்து எமது கண்ணகை யம்மன் ஆலய முன்றல் மணலில் விளையாடியமை இன்றும் மறக்க முடியாத அம்சமே

**மாங்கொட்டை விளையாட்டு:-**

நீளமான சதுரமான ஒரு கோட்டை வரைந்து அதை 08 பகதிகளாக பிரித்துக் கோடிடுவர். ஒருவன் ஒரு மாங்கொட்டையைக்

கோடிடுவான். அவன் அந்த மாங்கொட்டையைக் கோட்டின் முதலாம் பிரிவுக்குள் போட்டுவிட்டு, நொண்டிக் கொண்டு அதன்மேல் பாய்ந்து ஒவ்வொரு பிரிவுக்குள்ளும் துள்ளித்துள்ளி மாங்கொட் டையை தள்ளிக்கொண்டு போய், கடைசியில் அதனை கோட்டின் வெளியே எத்தித்தள்ளி "பழம்" என்று வெற்றி பெறுவான். அப்படி அவன் செய்யும் போது கால் கோடு களில் பட்டாலும் காலைவிட்டு சமநிலைக்கு வந்தாலும் ஆட்டம் இழப்பான்.

**மட்டை பந்து :-**

அக்கால விளையாட்டுக்கள் பிரதேசம், சூழல் என்பவற்றுக்கேற்ப வேறுபட்டுக் காணப் பட்டன. இன்று பிரபல்யம் மிக்கதும் எல்லா நாடுகளிலும் விளையாடப்படுவதுமான "கிரிக்கட்" எனும் விளையாட்டின் ஆரம்பமே"மட்டைபந்து" எனும் கிராமிய விளையாட்டாகும். இவ்விளை யாட்டு நம்பிரதேசத்தில் அக்காலத்திலே அநே கராலும் விளையாடப்பட்ட ஒன்று என்றுதான் கூறவேண்டும் தென்னை ஓலையின் அடி மட்டை யில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட மட்டையும், பழைய சீலைத்துண்டுகளைச் சுற்றி ஆக்கப் பட்ட ஒரு பந்தையும் கொண்டு விளையாடுவதே மட்டைப்பந்து எனும் விளையாட்டாகும்.

**கிட்டிப்புள்:-**

கிட்டிப்புள் விளையாட்டானது ஒரு முள நீளமும், விரல் அளவு பருமனுமுள்ள ஒரு தடியும் 4-6 அங்குல நீளமான ஒரு தடியுமாக இரு தடிகள் கொண்டு ஆடுவதாகும் சிறுவர்கள் முதல் பெரியவர் வரை இப்பிரதேசத் திலே அனைத்து கிராமங்களிலும் ஆடிவந்த விளையாட்டாகும். நிலத்திலே ஒரு சிறு குழி தோண்டி அதில் கிட்டியை (சிறுதடி) வைத்து புள்ளால் (நீண்டதடி) உந்திக்கிளப்பி எறிவான். எதிர் அணியில் ஒருவன் அதைத்தாவிப் பிடித்தால் கிட்டிப்புள் எறிந்தவன் ஆட்டம் இழப்பான். பிடிபடாமல் தடி கீழே விழுந்தால் பிடிப்பவன் தடியைப்பொறுக்கி குழியோரம் வைக்கப்பட்டிருக்கும் புள்மீது எறிய வேண்டும். கிட்டி புள்மீது பட்டால் உந்துபவன் ஆட்டம் இழப்பான். வீசப்பட்ட கிட்டி விழுந்துகிடக்கும் இடத்துக்கும் குழிக்கும் உள்ள தூரம் கிட்டியால் அளக்கப்படும் அளவு 10க்கு கூடுதலாக இருக்கவேண்டும். குறைந்தாலும் ஆட்டம் இழக்க நேரிடும். கூடுதலாக இருந்தால் விழுந்த இடத்தில் இருந்து தொடங்கி மூன்று முறை கிட்டியை அடித்துக் கொண்டு போய் மூன்றாம் முறை விழுந்த இடத்தில் இருந்து எதிரணிக் காரன் மூச்சுவிடாமல் பாடி ஓடி வரவேண்டும். இவ்வேளையிலே தான் பின்வரும் பாடல்களைப் பாடி மகிழ்வர்.

"ஆலையிலே சோலையிலே
ஆலம்பாடிய சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுக்கி அடிக்க பாலாறு.... பாலாறு...

போன்ற பாடல்களைக் குறிப்பிடலாம்.

**ஊஞ்சல் விளையாட்டு:-**

இவ்விளையாட்டு பண்டிகைக் காலங்க ளில் குறிப்பாக சித்திரை வருடப்பிறப்பு தினங் களில் மிகவும் கோலாகலமாக அனைத்து கிராமங்களிலும் சிறுவர்கள், இளைஞர்கள் என அனைவரும் விளையாடிய ஒரு விளை யாட்டாகும். மரத்தின் (மா, நாவல், புளியமரம்) சாய்வான ஒரு கிளையில் (கந்தில்) பழைய சாக்கு துணி ஒன்றை போட்டு தேடா எனும் ஒரு கனமான புரிகள் கூடிய கயிற்றை இரு முனை களையும் முடிந்து மேல் வளையில் போட்டு ஒரு அடி அகலமும் 4-6 அடி நீளமான ஒரு பலகையைப் போட்டு ஆடுவர். ஊஞ்சல் உயரமாக இருக்கும். கால்களால் தள்ளி ஆட்ட முடியாது. பலகையின் இரு முனை களிலும் இருவர் நின்று கயிற்றைப் பிடித்து உத்தி உத்தி ஆடுவர். இரண்டு அல்லது மூன்று பேர் பலகையில் உட்கார்ந்து ஊஞ்சல் பாடல்களை பாடி சந்தோசமாக ஆடிப்பாடி விளையா டும் ஒரு விளையாட்டாகும்.

"தெத்தாதே ஊஞ்சல் தெத்தாதே - தெத்திப் பலகாரம் சுட்டுத்தாரேன் போன்ற பாடலகள் குறிப்பிடத்தக்கது.

**கோட்டுப்பந்து :-**

இவ்விளையாட்டு 50m அளவிலான ஒரு நீள் சதுர வடிவில் அமைந்த எல்லை கோட்டிற்குள் இடம்பெறுமாறு அமையும். குறிப்பாக 10-12 பேர் இவ்விளையாட்டில் இடம்பெறுவர். அதில் இருவர் கோட்டிற்கு வெளியில் நிற்பர். ஏனையோர் உள்ளே நிற்பர். பழைய சீலைத் துண்டுகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு பந்தை வெளியில் இருக்கின்ற இரண்டு நபர்களும் மாறி மாறி எறிந்து கொண்டிருப்பர். தவறுதலாக இப்பந்து உள்ளே இருப்பவர்கள் மூலம் பிடிபடுமானால் வெளியில் நிற்கின்ற இருவரையும் நோக்கி பலமாக எறிவர். மாறாக வெளியில் நிற்பவர்களும் பந்தை பரிமாறும் போது படி எடுத்தால் உள்ளே நிற்பவர்களுக்கு முதுகில் பலமாக எறிவர். இவர்கள் அங்கும் இங்கும் ஓடி ஆடி திரிவர் இவ்வாறு மாறி மாறி இடம்பெறும்.

**சிறுவர், சிறுமிகளின் பலவிதமான விளையாட்டுக்கள் :-**

இவற்றோடு சேர்ந்து நமது பிரதேச சின்னஞ் சிறுமியர்களும் பலவிதமான விளையாட்டுக்களை விளையாடி மகிழ்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதே அந்த வகை யில் சிறுமியர்கள் தென்னை ஓலை மட்டை களால் வீடு கட்டி, தேங்காய் சிரட்டைகளில் மண்ணினால் சோறு சமைத்தும் இலை,குழை பூக்களால் கறி ஆக்கியும் சிறு பாவைகளை வைத்து மாப்பிள்ளை, பெண் கல்யாணம் பண்ணியும் விளையாடுவர்.

ஆர்சங்கு ஆர் சங்கு...., கண் கட்டி விளையாட்டு, சுரைக்காய் விளையாட்டு, நாய் இறைச்சி, பூக்குட்டி, மூலைபிடித்தல், கள்ளன் பொலிஸ், மொச்சை விளையாட்டு, கிள்ளி கிள்ளி புறாண்டியார். எவடம் எவடம் புங்கியடி புளியடி எனப்பலவிதமான விளையாட்டுக்களை விளையாடியுள்ளனர். இவை தற்போது மறைந்து போயின. ஒரு சிலவே வழக்கில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.



**முடிவுரை:-**

அக்காலங்களில் சனத்தொகையும் குறைவு. அதிகமான வீதிகள் இல்லை வாகனங்களும் குறைவாகவே காணப்பட்டன. மணல் ஒழுங்கைகளும், மண் மேடுகளுமே அதிகம் இதனால் பிள்ளைகள் ஒழுங்கை களிலும் சிறு வீதிகளிலும் தங்கள் பொழுது போக்கை களிக்கும் முகமாக விளையாடினர்.

இன்று தெலைக்காட்சி, சினிமா, வானொலி, இணையம், முகப்புத்தகம் (Face Book) போன்ற வற்றிலே அதிக நேரத்தை சிறுவர், இளைஞர்கள் செலவளிக்கின்றார்கள். மேலும் சிறுவர்கள் 04 வயதில் முன்பள்ளி செல்ல வேண்டி உள்ளதை கட்டாயமும், பின் பாடசாலை, தனியார் வகுப்பு எனக் கல்விச்சுமை ஒரு பக்கம். விளையாடுவதற்கு ஏற்ற வசதிகள் இல்லாமை, சிறுவர்கள் துஸ்பிரயோகங்களுக்கும் உள்ளாகும் நிலைமை மறுபக்கம். கிடைக்கின்ற ஓய்வு நேரத்தை தொலைக்காட்சி பார்ப்பதற்கு அனேகமான சிறுவர், சிறுவர்கள் பயன்படுத்துதல், இளைஞர்களிடையே புதுப்புது சிந்தனைகள் புதுமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலை மதுப்பழக்கம், தேவைக்கு அதிகமான கதைகள் தேவையில்லா பேச்சுக்கள் பேசுவதிலேயே காலத்தை ஓட்டுகின்ற நிலைமை அத்தோடு இன்று படுவான்கரையிலே தேரோட்டத் திருவிழா போல் உருவெத்துள்ள ("உதை பந்தாட்ட சுற்றுப்போட்டிகள்" என மனித வாழ்வு இன்று இயந்திர மயமாகிவிட்டது. இதனால் இன்று பழமை வழக்கொழிந்து போய் இருக்கின்றது. இது காலத்தின் தேவையின் அவசியமே ஆகும்.

# கூத்தரங்கு

**ந.தர்சினி (மகிழடித்தீவு - தெற்கு)**
கிழக்குப்பல்கலைக்கழகம்

ஈழத்தின் கிழக்குப் பகுதியிலே உள்ள தமிழர் வாழ்கின்ற பாரம்பரிய பிரதேசமான மட்டக்களப்புப் பகுதியிலே கூத்தரங்கானது முதன்மை பெறுகின்றது. தமிழர்களினுடைய அடையாளம் கூத்தாகும்.

கூத்தரங்கானது அன்று தொட்டு இன்றுவரைக்கும் சமூக மையச் செயற்பாடாக இருந்து வருவதோடு சமூகம் தழுவிய கலைவடிவமாகவும் விளங்குகின்றது. கூத்து ஆடுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் அரங்கேற்றம் செய்து வீட்டுக்கு வீடு ஆடுதல் வரையிலும் சமூகத்தின் பங்குபற்றலானது தொடர் செயற்பாடாகவே உள்ளது.

நவீன உலகில் வாழ்ந்து வரும் நாம் காலனித்துவ சிந்தனைக்குள் அடக்கப்பட்ட போதிலும் எமது கலையான கூத்துக் கலையினை சமூகமானது வளர்த்துக்கொண்டே செல்கின்றது. திறந்த வெளிக் கூத்தானது மனிதனின் வாழ்தலைத் தன்னகத்தே கொண்ட கலை வடிவாகும். நவீன மயமாக்கலுக்கு உட் படுத்தப்பட்டு நாகரீகத்தால் சிதைவுற்றிருக்கும் மக்களை கூத்தரங்கு ஒன்றிணைக்கிறது.

தனியன்களாக ஆக்கப்பட்ட சமூதாய மக்களது ஆற்றலை, ஆளுமைகளை, ஒன்றிணைவை, படைப்பாற்றலை, முகாமைத்துவத்திறனை வளர்க்கின்றது. இது கலைஞர்களை அவர்களது முன்னெடுப்புக்கு ஊக்குவிப்பதாக அமைகின்றது. கிராமிக் கலையானது சமூகப் பண்பாட்டு வரலாற்றினை முக்கியப்படுத்துகின்றது. இக் கூத்தரங்கானது தனித்துவமான விடயமல்ல எண்ணக்கருக்கள், பஞ்சாயக்காரர்கள், முன்னீடுகாரர்கள், ஊர் மக்கள், அண்ணாவியாளர்கள் இணைந்து உருவாக்கம் பெற்றதாகும்.

ஒன்றிணைந்த சமுதாயமாகச் சேர்ந்து இயங்குவதற்கும், முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும், ஆற்றல்களைக் கொண்டாடுவதற்கும், சமூகப் பண்பாட்டு வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கும், வளர்த்துக் கொள்வதற்கும், படைப்பாக்கங்கள், மதிப்பீடுகளை வளர்த்துக் கொள்ளும் இடமாக கூத்தரங்கு விளங்குகின்றது.

ஆற்றுகையில் பங்குபற்றல் மூலம் கூத்தரங்கினை மட்டுமல்லாது கூத்தினையும் கற்றுக் கொள்ளலாம். கூத்துக்கலையானது வெறுமனே





ஒரு பொழுது போக்குமட்டுமல்ல அது மக்களுடன் இரண்டறக் கலந்துவிட்ட ஒரு சமூக விழுமியப் பண்பாட்டு ஒழுக்க நெறியாகிறது. கிராமம் முழுவதும் ஒன்றிணைந்து மேற்கொள்கின்ற ஒரு வேள்வியாக கூத்தரங்கு அமைந்து விடுகின்றது.

கூத்தினைப் பழக்கும் தலைமைப் பொறுப்பு அண்ணாவியரைச் சார்ந்தது. இது வட்டக்களரியிலே விடிய விடிய ஆடப்படுவதாகும். களரியானது வட்டவடிவமாக இருப்பதனால் மக்கள் சூழ இருந்து கூத்தை பார்த்து ரசிப்பர். களரியின் நடுவே அண்ணாவியார் ஏடுபார்ப்பவர் (கொப்பி பார்ப்பவர்) தாளக்காரர், பிற்பாட்டுக்காரர்கள் நிற்பர். இவர்கள் சபையோர் என அழைக்கப்படுவர். களரியினைச் சுற்றி நான்கு பக்கமும் வாழைக் குற்றியை நட்டு அதில் தேங்காய்ப்பாதியில் எண்ணெய் ஊற்றி விளக்கு எரிந்து கொண்டிருக்கும் அல்லது சிறிய மண் சட்டியினுள் பச்சையரிசி கட்டி எண்ணெய் ஊற்றி எரிய விடப்படும்.

இங்கு கூத்தர்கள் இரண்டு கால்களிலும் சதங்கை அணிந்தே ஆடுவார்கள். கூத்தாடுபவர்களுக்கு அச்சமூகமானது காசு மாலைகள், சால்வைகள் இடுவர். இங்கு மத்தள ஓசையும், சல்லாரி இசையும் சதங்கை ஒலியும், பாட்டும் கலந்து இரவு முழுவதும் அதிரும் ஒலி இக்கூத்தின் தனித்துவமாகும். அதுமட்டுமன்றி காப்பு, விருத்தம், சபைத்தரு, கொச்சகம், உலா, வெண்பா, பாட்டு என்பனவும் முடிவில் வழிபடுவதும் சிறப்பானதாகும்.

கூத்து என்று கூறியவுடனே மக்கள் மனங்களிலே ஒரு ஆனந்தத்தை கொண்டு வருவதாக அமைகின்றது. கூத்தில் பெண்களின் பங்குபற்றல் என்பது அளப்பெரியது எனலாம். இன்று பெண்கள் களரிகளில் பெண்பாத்திரங்களையும், ஆண்பாத்திரங்களையும் ஆடி வருகின்றனர். சான்றாக கடந்த 2012இல் கண்டியரசன் தென்மோடிக்கூத்தும் மழைப்பழம் வடமோடிக் கூத்தும் 2015இல் அலங்காரரூபன் தென்மோடிக் கூத்தும் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்களால் அரங்கேற்றப்பட்டது. அது மட்டுமல்லாது பெண்கள் கூத்தர்களுக்கு உடைகளைத் தெரிவு செய்து கொடுப்பதிலும், அவர்களுக்கு ஒத்தாசை வழங்குவதிலும் ஆர்வமாக உள்ளனர் எனலாம்.

கூத்தரங்கில் ஊர் மக்கள் ஒன்றிணைவது என்பது சிறப்பானதாகும். வேலைப் பழுக்கள் நிறைந்த காலத்தில் தங்கள் ஓய்வுகளை கூத்தரங்கு மூலமே பெறுகின்றனர் எனலாம். இங்குள்ள மக்கள் வட்டக்களரியினைச் சுற்றி இருப்பர். இவர்கள் இருந்தும் நித்திரை கொண்டெழுந்தும் கூத்தினைப் பார்ப்பார்கள்.



சுதந்திரமாக இருந்துகொண்டு பக்கத்தில் உள்ளவர்களிடம் கூத்தின் கதைகளைக் கேட்டுக் கொண்டும் இருப்பர். பல ஊர் மக்களை இக் கூத்தரங்கானது ஒன்றிணைக் கின்றது.

செயல்முறைக் கல்விகளில் ஒன்றான கூத்துவர்களின் ஆளுமையை வளர்த்தெடுப் பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. பாடசாலைக் கல்வியில் கூத்தை, கற்பித்தல் கருவியாகப் பயன்படுத்தும் போது மாணவர்க ளின் தன்னம்பிக்கை, செயல்திறன், மொழி வளம், தொடர்புத்திறன், படைப்பாற்றலுடன் கூடிய விமர்சன சிந்தனை ஆகியவை மேம்படு கின்றன. பாடசாலைக் கல்வியில் கூத்து ஒரு பாடமாக இருந்தபோதும் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்புகளில் கூத்தைப் பாடமாக பல் கலைக்கழகங்களில் செயற்பாட்டு முறையினூடே கற்று வருகின்றனர்.

இன்றைய உலகில் நவகாலனித்துவ ஆக்கிமிப்பை எதிர் கொள்வதற்கான சாதனங்க ளுள் ஒன்றாக கூத்தரங்குகளின் முக்கியத்துவத் தினை முன்மொழியும் கூத்து ஆற்றுகைச் செயற்பாடு இவ்வாறான பாரம்பரியத் தொடர்ச் சியான செயற்பாடுகளின் இருப்பும் அதனைப் பாரம்பரியமாக செய்து வருபவர்களின் நம்பிக் கையும் இயங்குவதைத் தெளிவாகவே கட்டி நிற்கின்றது.


ஈழத்து தமிழரது பாரம்பரியக் கூத்தி னுடைய இருப்பும், இயக்கமும் சமூகம் குழுமம் சார்ந்தது. எனவே மனித வாழ்க்கையை பிரகாசிக்க வைக்கும் கலைப் பொக்கிஷங்கள் அழியாது பாதுகாப்பதோடு காலமாற்றத்தின் தேவைகருதி மாற்ற மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. உலக மயமாக்கலின் சவால் களை எதிர் கொள்வதற்கான பெறுமதியான வலுவான சாதனமாக கூத்தரங்கு காணப்படுவ தோடு இன்றைய சூழலில் விடுதலைக்கான அரங்காகவும் தொழிற்படுகின்றது.

## மட்டக்களப்பு பண்டைய கோவிலான

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின்

## தனிசிறப்பும், அதன் அற்புதங்களும், புராதான சின்னங்களும்

மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள மண்முனை எனும் பகுதி பண்டைய நாட்களில் இருந்தே ஒரு நிருவாக மையமாகத் திகழ்ந்து வந்திருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கலிங்கா, ஒரிசா தேசத்திலிருந்து உலகநாச்சி வந்து வரும் வழியில் இலங்கை அரசன் மேகவர்ணனிடம் (இவன் ஆண்ட காலம் கி.பி.801 - கி.பி 882) தான் தலைமயிரில் மறைத்துக் கொண்டு வந்த புத்த சாசனத்தை கொடுத்து அவனது ஆசியுடன் அப்போது மட்டக்களப்பை ஆண்ட குணசிங்கன் எனும் மன்னனின் உதவியை நாடி மண்முனைக் காட்டினை வெட்டி வெளியாக்கி அங்கு ஒரு சிவன் கோயிலை அமைத்து குகவம் சத்தார் தன்னிடம் கொடுத்த சிவலிங்கத்தை அதில் ஸ்தாபித்து தனக்கும் ஒரு மாளிகை அமைத்து வழ்ந்தாள். இப்போது மண் முனைக்கு தென்பால் கொக்கட்டி மரங்களால் சூழப்பட்ட ஒரு வனத்திலே திகடன் எனும் வேடுவன் தேனெ டுக்கச் சென்று அங்கு ஒரு கொக்கட்டிய மரத்தினை வெட்டிய போது இரத்தம் பீறி ஓடுவதைக் கண்டு பயமடைந்து ஓடிச் சென்று அரசி உலகநாச்சியிடம் தெரிவித்தான். அவளும் பிரதானிகளோடு சென்று அதைப்பார்வையிட்டு அது ஒரு சிவலிங்கம்தான் என உணர்ந்து அங்கு ஒரு ஆலயம்



அமைத்து வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்தாள் இதுவே ஆரம்ப கால ஆலயம் என்று கூறப் படுகின்றது. பின்னாட்களில் மட்டக்களப்பை ஆண்ட வன்னிய சிற்றரசர்களால் இது பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது.

மகோன் 13ம் நூற்றாண்டில் பொல நறுவையை கைப்பற்றி கிழக்கிலங்கை முழு வதையுமே தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தான் அவன் இக் கோயிலை இன்னும் சிறப்புற அமைத்து பூசைகளை வகுத்து ஆல யத்தின் ஊழியம், தொண்டுகள் புரிவதற்கான பலசாதிக்குடிகளை வகுத்தான் இதனை மாகோன் வகுத்த அறனூழியம் என்று இப்பிரதெச ஏட்டுப்பிரதிகள் கூறுகின்றன.

கர்நாடகத்தில் தோற்றம் பெற்று வளர்ந்த வீர சைவ வழிபாட்டு முறையே இங்கு தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றது. வீர சைவம் என்பது சாதிமுறைக்கு எதிராக சமத்துவத்தை பேண வேண்டும் எனும் இலட்சியத்தோடு பசவேசரால் கர்நாடகத்தில் தோற்றுவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் இக்கோயில் கிழக்கிலங்கையில் உள்ள ஒரே ஒரு தேரோடும் கோயிலாகும். இதனாலேயே இப்பகுதி மக்கள் இக்கோயில் விழாவினை தேரோட்டம் என அழைப்பர். ஆலயத்தில் உள்ள பல சித்திரங்கள் அமைந்த சித்திரத்தேரிலே உமையாள் சகிதம் சிவபெருமான் எழுந் தருளி இருக்க மற்றத்தேரில் ஆனை முகனாகிய பிள்ளையார் ஏற்றப்பட்டு பக்தர் களால் வீதிவலமாக இருதேர்களும் இழுத்து வரப் படும். இக்காட்சி தேரோட்டம் என்று அழைக்கப் படுவது வழக்கம். கிழக்கிலங்கையில் வேறு எந்தக்கோயிலுக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு இக்கோயிலுக்கு இதுவேயாகும்.


தருமசிங்கமன்னன் ஆலயத்தினை கல்லால் கட்டியதுடன் ஆலயத்துக்கான மண்டபங்கள், சுற்றுமதில்கள் என்பவற்றையும் கல்லினால் கட்டினான். அத்தோடு சோழ நாட்டில் இருந்து மூன்று தேர்களையும் வரவ ழைத்து ஆலயத்திருவிழாவிற்கு பயன்படுத் தினான். இந்த மூன்று தேர்களில் ஒன்று பொற்தேர். அதேதேர் தேரோட்ட நிகழ்வு ஒன்றில் ஏற்பட்ட தெய்வக்குற்றம் காரணமாக தேரோடும் பாதையை விட்டு விலகி ஆலயத் தின் மேற்குதிசையை இடித்து ஆற்றிற்குள் விழுந்த வரலாறும் உண்டு. இதனையே தேர் இடித்த மூலை என்று மக்கள் மத்தியில் இன்றும் பேச்சு வழக்கில் காணப்படுகின்றது. ஏனைய இரண்டு தேர்களும் இன்றும் தேரோட்ட நிகழ்விற்கு பயன்படுத்தி பேணி பாதுகாக் கப்பட்டு வருகின்றன. என்பது சிறப்பம்சமாகும்.

**கோயில் கல்நந்தி எழுந்து புல்லுண்டு சாணமிட்ட கதை :-**

பண்டைய நாட்களில் அன்னியரான போர்த்துக்கேயர் இலங்கையை கைப்பற்றிய காலத்தில் கி.பி. 1567 பின் இங்கிருந்த எல்லா இந்து ஆலயங்களையும் இடித்து, கொள்ளை யிட்டமை வரலாற்றில் நடந்த நிகழ்வாகும். கொக்கட்டிச்சோலை திருத்தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தினை இடிக்க வந்த போர்த்துக்கேய தளபதியும் அவனது படையினரும் ஆலய குருக்களிடம் கல்நந்தியை காட்டி இது புல்லுண்ணுமா என வினவினர். ஆம் அது உண்ணும் என்று பதிலளித்தார். அதன்போது புல்லைக் கொடுத்து உண்ண வைக்குமாறு ஆலய குருக்களிடம் கட்டளை யிட்டான். அதன்போது ஆலயக்குருக்கள் எம்பெருமானை நினைத்து உருகியவராக கண்ணீர் விட்டவாறு அதனை கல்நந்தி வாயருகே புல்லைக் கொண்டு செல்ல எருதும் அரண்டு எழுந்து கத்தியவாறு அப்புல்லினை உண்டு சாண மிட்டது. இதனை கண்ணுற்ற போர்த்துக்கேய தளபதியும் அவர் படையினரும் புறமுதுகு காட்டி ஓடிய வரலாறும், பின்பு ஆலயம் இடிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டு இன்றும் அதன் பெருமை பேசப்படுகின்றது.

**திருத்தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தினுள் காணப்படும் கல்வெட்டு :-**

துண்டமான கற்சாசனம் ஆலயத்தின் உட்பிரகாரத்தினுள் வாகன சாலைக்கு அருகில் வேறு இரு தூண்களை ஆதாரமாக கொண்டு



கிடையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டபத்திற்கும், மகா மண்டபத்திற்கும் இடைப்பட்ட மேல் நிலைக் குற்றியில் எழுதப்பட்டிருக்கிறது. அண்மைக்காலத்திலே பழைய கட்டுமானங்களை இடித்து புதிய கட்டிடம் அமைத்த போது ஆலய பரிபாலர்க ளால் சாசனம் எழுதிய பகுதி மேற்குறித்த பகுதியில் வைக்கப்பட்டது. அதன் விளைவாக சாசனத்தின் வாசகம் கல்லில் உள்ளமாதிரி பின்வருமாறு எழுதப்பட்டது.

.....வெலை முமுசச
வெங்கிமுடிஞ.....
டராமனசது மணமு
சாமி சேகானைக....

மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளிகள் இடப்பட்ட வாசகம்.

.....வெலை முசச
வெங்கிமுடிஞ்.....
டராமன்ரது மண்மு
சாமி சேகர்னைக....

சாசனம் நான்கு வரிகளைக் கொண்ட சுருங்கிய வாசகமாக அமைகின்றது. இதில் மெய்யெழுத்துக்களின் மேல் புள்ளிடப்பட வில்லை. எழுத்துக்களை நிலையாக ஒழுங்கு படுத்தி வாசிக்காது ஒன்றின் கீழ் ஒன்றாக வாசிக்கும் போது "வெங்கிட ராமன் சாமி சேகர் வேலை முடிஞ்சது மண்முனை" என்ற வாசகத்தினை மட்டுமே வாசிக்க முடிகின்றது.

சிவாலயங்களில் மிக சிறப்பானவை சுயம்புலிங்கங்கள் அவை தானாகவே பூமியில் எழுந்து இறையருளை உணர்த்துபவை அத்தகைய சக்தி வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ் வரர் ஆலயம் திகழ்கின்றது. இவ்வாலயம் பண்டையகால அரசர்களின் மதிப்பும், மானியங்களும், சீர்வரிசைகளும் பெற்று விளங்கியமைக்கு ஆலயத்திலுள்ள கல்வெட்டு பழமையான இரண்டு தேர்கள், புல்லுண்ட நந்தியின் கம்பீரமான தோற்றம் இலங்கையில் அதியுயரமான கொடிமரம் கோயிற் தளபாட ங்கள், தங்க அரிசி, நெல், தங்க நாணயங்கள் மற்றும் ஏனைய பொருட்களும் சான்றாக அமைகின்றன.

அந்த வகையில் ஆலயத்திலுள்ள கோயில் தளபாடங்கள் புராதனமானவை. அவை சிற்றரசர்களாலும், பிரதானிகளாலும் தானமாக கொடுக்கப்பட்டுள்ளதாக வரலாறு ஏடுகளிலிருந்து கூறப்படுகின்றது. எம்பெருமா னுக்கு சாத்துவதற்கு பல வகையான தங்க ஆபரணங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எனவே "மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிது" என்ற சான்றோரின் வாக்கிற்கிணங்க சுயம்புலிங்க மூர்த்தியாகத் தோன்றி இன்று வானோங்கு கோபுரத்துடனும் கலை நயனத்து டனும் தமது கீர்த்தியை பரப்பி கொண்டிருக் கின்றது. தான்தோன்றீஸ்வரரின் தேவஸ்தானம் பழமையின் காரணமாக இன்று வரை சிறப்பு பெறுகின்றது.

**இ.சாந்தலிங்கம்** (GS)
தீவு முழுவதற்குமான நீதவான்
செயலாளர் (வண்ணக்கர்)
திருத்தான்றோன்றீச்சரம்
கொக்கட்டிச்சோலை.

**நாகமணி சுவாசினி** (BEd)
பிரதேச செயலகம், ம.தெ.மே



# பிள்ளையின் கல்வி
## அடிப்படை மனித உரிமை

இன்றைய கல்வி உலகில் அறிவியல் சிந்தனைகள் நாளுக்குநாள் பெருகி வருகின்றன. இவ்வாறான நிலையில் பரந்தும், விரிந்தும், வியாபித்து வருகின்ற அறிவை பெறும் வாயில்களில் பிரதானமானது கல்வியாகும். எந்தக் கல்வியுமே அறிவை வளர்ப்பதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. எனவே இக்கல்வியினை சிறப்பாக கற்று அதில் உச்ச பயனைப் பெறவேண்டும். இதன் மூலம் சிறந்த அடைவு மட்டத்தினை மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டி யாக, பாடசாலையும், சமூகமும் அதனோடு இணைந்த ஏனைய நிறுவ னங்களும், பிள்ளையின் கல்விச் செயற்பாடுகளை ஓர் அடிப்படை மனித உரிமை என்ற அத்தி வாரத்தில் கட்டியெ ழுப்புவதற்கு முன்மாதிரியாக திகழவேண்டும்.

பாடசாலை வருகின்ற மாணவர்கள் அனைவருமே கல்வியைப் பெற்றுக்கொள்கின்ற உரிமையுடையவர்கள். ஏதாவது குறைபாடுகள், வசதியீனங்கள் அவர்கள் கல்வியை பெறுவதிலிருந்து தடுத்துவிடும் சந்தர்ப்பத்தில் அவற்றினைப் போக்கியவாறு கல்வியை வழங்கவேண்டியது கல்வித் துறையிலுள்ளவர் களினதும், பெற்றோர்களினதும் தலையாய கடமையாகும். அந்தவகையில் உலகில் இன்று அதிகமாகப் பேசப்படுகின்ற விடயங்களுள் பிள்ளை உரிமைகள் முக்கியமானதாகக் கருதப் படுகின்றன. எதிர்கால உலகம் தொடர்பான பாரிய பொறுப்புக்களைச் சுமக்கப்போகும் பிள்ளைகளின் பல்வேறு விதமான உரிமைகள் மறுக்கப்படுகின்றமையைக் கருத்திற்கொண்டு ஐக்கிய நாடுகள் சபை 1989ம் ஆண்டு நவம்பர் 20ந் திகதி "பிள்ளை உரிமைகள்" தொடர்பான ஒப்பந்தத்தை (Convention on the right of the Child) உருவாக்கியது. இது உலகளாவிய

ரீதியாகவும், உள்நாட்டிலும், பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பது பற்றிய சட்ட மூலாதாரமாகும்.

பிள்ளைகள் எனக் குறிப்பிடப்படுபவர் யார் என்பதை நோக்கும்போது இலங்கை அரசியல் யாப்பின்படி 1979ம் ஆண்டு இலக்கம் 2ஐக் கொண்ட வாலிபர்கள் தொடர்பான கட்டளைச்சட்டம் 1986ம் ஆண்டு இலக்கம் 48ஐக் கொண்ட பிள்ளைகள் மற்றும் வாலிபர்கள் தொடர்பான கட்டளைச் சட்டம், 1978ம் ஆண்டு இலக்கம் 12ஐக் கொண்ட வர்த்தக மற்றும் அலுவலகப் பணியாளர் சட்டங்கள் "பிள்ளை" என்பதனை 14வயதுக்குக் குறைந்த ஒருவரை வியாக்கியானம் செய்கின்றது. மேலும் கல்வி தொடர்பான கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் வாயிலாகவும் பிள்ளையின் வயதினை வியாக்கியானம் செய்யும் சந்தர்ப்பத்தில் 1939ம் ஆண்டின் கல்விக்கட்டளை சட்டத்தின்படி ஒரு குழந்தை என்பது 5 வயதைத் தாண்டாத பாலர் பருவத்தினரையும் பிள்ளை என்பது 5 வயதுக்கு குறையாத 14 வயதுக்கு மேற்படாத வயதுக்கு வராத ஒருவரைக் குறிக்கின்றது.

**பிள்ளைகளுக்குரிய உரிமைகள்**

சர்வதேச சாசனங்களினால் உருவாக்கப் பட்ட சட்டங்கள் உலகிலுள்ள எல்லாப்பிள்ளைக ளுக்கும் உள்ள உரிமைகளை அது வரையறுத்துள்ளது. உலக நாடுகள் அனைத்தும் இதனடிப்படையிலேயே பிள்ளைகள் நடத்தப்படுவார்கள் என ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கை அரசாங்கமும் 1991ம் ஆண்டு ஜுலை மாதம் 12ம் திகதி இச்சட்டத்தில் கைச்சாத்திட்டு ஏற்றுக்கொண்டுள்ளது.

உலக நாடுகள் பல்வேறு அரசியல் சமூக பொருளாதாரக் காரணங்களுக்காக பிள்ளைகளுக்கு வழங்கவேண்டிய உயிர் வாழ்தல், பங்குகொள்ளல், மேம்பாடு, பாது காப்பு போன்ற உரிமைகளை வழங்காதுள்ளது. எனவே இத்தகைய பிள்ளை உரிமை மீறல்களைக் கருத்திற்கொண்டு பிள்ளைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பிள்ளை உரிமை சாசனம் 54ம் உறுப்புரை மூலம் இதனை தெளிவாக எடுத்துரைக்கின்றது. இந்தவகையில் பின்வரும் நான்கு வகையான பிள்ளைகளுக்கான அடிப்படை உரிமைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

1. உயிர்வாழ்வதற்கான உரிமை (Survivial Rights)
2. முன்னேற்றத்திற்கான உரிமை (Development Rights)
3. பாதுகாப்பிற்கான உரிமை
4. (Protection Rights)
5. பங்கேற்பதற்கான உரிமை (Participation Rights)

**பாடசாலைகளில் நடைபெறும் பிள்ளைக ளுக்கு எதிரான உரிமை மீறல் வகைகள்**

பாடசாலை வருகின்ற மாணவர்கள் அனைவருமே கல்வியைப் பெற்றுக்கொள்கின்ற உரிமையுடையவர்கள் ஏதாவது குறைபாடுகள் வசதியீனங்கள் அவர்கள் கல்வியை பெறுவதிலி ருந்து தடுத்துவிட முடியாது. மாணவர்கள் அனைவருமே ஏதாவது குறைபாடுகளைக் கொண்டிருப்பது வழமையாகும். இதனைப் போக்கியவாறு கல்வியை வழங்கவேண்டியது, கல்வித்துறையிலுள்ளவர்களினதும், பெற்றோர்களினதும் தலையாய கடமையாகும். எனவே பாடசாலையானது வெற்றிகரமான இயக்கத்தையும், முக்கியத்துவச் செயற்பாட்டின் திறனையும் வெளிப்படுத்தி சான்றிதழ் வழங்கும் சுட்டியாக செயற்படுவதற்கு மாறாக, பிள்ளை மீது பல்வேறு தாக்கத்தினை ஏற்படுத்தி வருவது கண்கூடு அவை பற்றி நோக்குவோமாயின்,

**ஆசிரியர் மாணவர்களுக்கு கடுமையான உடற்தண்டனை வழங்குதல்.**

பாடசாலைகளில் கற்றல் செயற்பாடு களில் ஈடுபடும் மாணவர்கள் பலதரப்பட்டவர்கள் பல சூழல்களில் இருந்து பாடசாலைகளுக்குள் வருபவர்கள் அவர்கள் தங்களை அறியாமல் பிழையான செயற்பாடுகளில் ஈடுபடமுடியும் அவை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஊறுவிளைவிக்க கூடியதாகவோ இருக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் அம்மாணவர்களை அவ்வா றான செயற்பாடுகளில் இருந்து விடுவிப் பதற்காக ஆசிரியர்களால் தண்டணைகள் வழங்கப்படுகின்றன. இது உடல் ரீதியான

வேதனை, நோய், பலவீனம், காயம் போன்றவற்றை ஏற்படுத்துவதாக அமையலாம். இவ்வாறான செயற்பாட்டினை நாம் உடற்தண்டனை எனும் வகுதிக்குள் உள்ளடக்கலாம்.

போதுமான முதிர்ச்சியடைந்த அறிவைப் பெற்றிராத 8 வயதுக்குக் கூடிய 12 வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளையால் நிகழ்த்தப்படும். எச்செயலும் குற்றமாகாது என்ற குற்றம் பற்றிய தண்டனை கோவையின் 76ம் பிரமாணம் கூறுகின்றது. இதனை பிள்ளைகளுக்கு எதிராக உரிமை மீறல் வகையாகக் கொள்ளலாம்.

**பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது குலவேறுபாடு காட்டுதல்.**

ஒரு பிள்ளை 5 வயதையடைந்ததும் அப்பிள்ளை பாடசாலைக் கல்வியினைப் பெறுவது கட்டாயமானதாகும். அந்த அடிப்படையில் தாம் விரும்பும் பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்கும் உரிமையைப் பெறுகிறது. இவ்வாறான வேளைகளில் மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுமதிக்கும் போது குலவேறுபாடு மற்றும் மாணவர்களின் ஆரோக்கியமான கல்விச் செயற்பாடுகளுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியவகையில் அனுமதி மறுத்தல், வேறு வகையான காரணங்களினால் மாணவனது விருப்பத்திற்கு ஏற்ற பாடசாலை மறுக்கப்படுதல் என்பன மாணவர் அனுமதியில் ஏற்படுத்தும் உரிமை மீறலினைக் காட்டுகின்றது.

**பாலியல் தொடர்பான குற்றச்செயல்கள்**

பிள்ளைகள் வயது வந்தோரால் பல்வேறு பாலியல் கொடுமைக்கு ஈடுபடுத்தப்பட்டு உடல் ரீதியான வேதனைகளுக்கு உள்ளாக்கப்படும் சம்பவங்களை இந்த வகுதிக்குள் உள்ளடக்கலாம் பெற்றோர், சட்டபூர்வமான பாதுகாவலர், பிள்ளைகளது பொறுப்பு கையளிக்கப்பட்ட வேறு நபர்கள் ஆகியோரது பராமரிப்பில் இருக்கும்போதே பாலியல் ரீதியான சட்ட விரோத மற்றும் அநியாயங்களில் ஈடுபடுத்தப்பட்ட பிள்ளைக ளின் நிலைமைகளை இதற்குள் உள்ளடக்கலாம். வீட்டில், வீதியில், வேறு பல்வேறு இடங்களில் வயது வந்தோரால் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுதலையும் இதனுள் உள்ளடக்கலாம்.

**மாற்றுத்திறனுடைய பிள்ளைகளுக்கு முறையான கல்வி வழங்காமை**

குறித்த வகுப்பறையில் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஆசிரியர் தனது மாணவர்கள் எவ்வாறான நடத்தைக் கோலங்களை வெளிக்காட்டுகின்றனர் என்பதை அவதானத்துடன் கவனிக்க வேண்டும் இதன்போது பல்வேறுபட்ட அசாதாரண நடத்தைக் கோலங்களைக் கொண்ட மாணவர்களை ஆசிரியர் இனங்காணக்கூடியதாக இருக்கும்.

அந்த வகையில் மாணவர்கள் அனைவரும் திறமையுள்ளவர்களாக அனைத்து விடயங்களையும் சிறப்பாக மேற்கொள்ளக் கூடியவர்களாகக் காணப்படுவதில்லை ஒவ்வொரு மாணவரும் தனித்தனி வேறுபாடுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இதே போல் அங்கக்குறை பாடுடைய பிள்ளைகள் மற்றும் புத்திக்கூர்மை குறைந்த மாணவர்களென தற்போது வேறுபடுத்தி அவர்களின் கல்வி மேம்பாட்டிற் கான விசேட திட்டங்களுக்கு இணங்க விசேட கல்வி என்னும் புதிய எண்ணக்கருவின் ஊடாக அம்மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. அந்த அடிப்படையில் தற்போது மேற்படி இயல்புடைய மாணவர்களுக்கு ஏற்ற கல்வியினை விசேட கல்வி முறையின் ஊடாக வழங்கவேண்டிய கடப்பாடு கல்வித்துறையினருக்கு உள்ளது. எனவே இவ்வாறான கல்வி மாணவர்களுக்கு மறுக்கப்படுவது அப்பிள்ளையின் உரிமை மீறல் செயலாகவே கொள்ளப்படும்.

**பின்தங்கிய மாணவர்கள் மீது உரிய முறையில் கவனம் செலுத்தாமை.**

ஒரு வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் திறமையான மாணவர்கள் என நாம் கொள்ளமுடியாது. அவர்கள் சில விடயங்களைப் புரிந்துகொள்வதில் காலநேரம் தேவைப்படலாம். அவர்களை உரியமுறையில் கவனம் செலுத்துவதன் மூலம் குறித்தவிடயம் தொடர்பில் உரிய நிலைக்கு கொண்டுவரலாம். ஆனால் அவர்களைக் கவனியாது புறந்தள்ளுதல் அம்மாணவர்களின் உரிமை மீறலாகவே அடையாளப்படுத்தப்படுகின்றன.

**மாணவர்கள் விரும்பும் பாடசாலைகளில் சந்தர்ப்பம் வழங்கப்படாமை**

ஒவ்வொரு மாணவரும், வெவ்வேறு வகையான திறமையினையும் வித்தியாசமான சிந்தனைப்போக்கினையும் கொண்டு காணப்படுகின்றனர். அந்த அடிப்படையில் மாணவர்கள் தங்களது திறமைக்கு ஏற்ப பாடசாலைகளைத் தெரிவுசெய்ய வேண்டிய சுதந்திரம் இவர்களுக்கு உண்டு ஏனெனில் தற்போது இலங்கையில் காணப்படும் அனைத்து பாடசாலைகளும் எல்லா வகையான வசதிகளுடனும் இயங்குகின்றன. எனச்சொல்லமுடியாது. அந்த அடிப்படையில் கிராமப்புறத்தை சேர்ந்த திறமையுள்ள மாணவர்கள் அவர்களின் திறமையினை வெளிக்காட்டக்கூடிய அவர்கள் விரும்பும் பாடசாலை கிடைப்பதில்லை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மூலமாக இதற்கான திட்டமொன்று நடைமுறையிலிருந்தாலும் அது சிறந்த முறையில் வெற்றியளிப்பதாகத் தெரியவில்லை. இதற்கு பல காரணங்களைக கூறலாம் திறமையான மாணவர்களுக்கு அவர்களது திறமைகளை வெளிக் காட்டக்கூடிய அவர்கள் விரும்பும் பாடசாலை கிடைக்காமல் போவது பிள்ளைகளது உரிமை மீறல் செயலாகவே கொள்ளப்படும்.

**உறவு முறையினரின் செல்வாக்கினால் திறமையுள்ள மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமை.**

தற்காலத்தில் எந்தவொரு விடயத்தினை எடுத்துநோக்கினாலும் அதற்குள் ஏதோ ஒரு வகையில் அறிமுக ரீதியிலான சில ஊடுருவல்கள் காணப்படவே செய்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள் சில சமயங்களில் பாடசாலைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது பாடசாலைகளில் இடம்பெறும் போட்டி நிகழ்ச்சிகளின்போது திறமையுள்ள மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்காது சில வேளைகளில் உறவு முறைகள் செல்வாக்கு செலுத்தி திறமையற்ற மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவது திறமையுள்ள மாணவர்களுக்கான வாய்ப்பினை இழக்கச் செய்யும் செயற்பாடாகவே காணப்படுகின்றது. இதனால் அம்மாணவனின் திறமை மழுங்கடிக்கப்படுகின்றது. இதுவும் அம்மாணவனின் உரிமைமீறல் செயற்பாடாகவே அமையும் (உதாரணம் - தமிழ் மொழித்தினம், ஆங்கில மொழித்தினம் போன்ற போட்டி நிகழ்ச்சிகள்)

**உரிமை மீறல்கள் பிள்ளைகளின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள்**

ஆசிரியர் மாணவர்களுக்கு கடுமையான உடற்தண்டனை வழங்குவதினால் உடல் ரீதியான, உளரீதியான பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. இதனால் மாணவரினால் கல்வியினைத் தொடர முடியாது போகலாம்.

மாணவர்களுக்கு தான் விரும்பும் பாடசாலையில் கல்விகற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாவிட்டால் அம்மாணவர்களால் அதிக நாட்டத்துடனும், பூரணமானதொரு விருப்பத்துடனும் கல்வியினை தொடர முடியாது போகலாம்.

விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு அவர்களின் நிலைமைக்கு ஏற்ப உபகரணப் பயன் பாட்டுடன் கல்வி வழங்கப்படாவிட்டால் அவர்களால் உரிய முறையில் கல்வியினை பெறமுடியாது போகும். இதனால் பாடசாலைக் கல்வி கிடைக்காமல் போவதற்கான சந்தர்ப்பம் அதிகம்.

பின்தங்கிய மாணவர்களை உரிய முறையில் கவனித்து பின்னூட்டல் செயற்பாடுகளைச் செய்யாது விட்டால் பாடத்தில் வெறுப்பேற்பட்டு அது பின்னர் ஆசிரியர் மீது தாக்கத்தை உண்டுபண்ணி, பின்னர் பாடசாலையை விட்டு அம்மாணவன் விலகக் கூடிய சந்தர்ப்பத்தைத் தோற்றுவிக்கும்.

மாணவர்களின் திறமைக்கு ஏற்ற விதத்தில் உரிய சந்தர்ப்பம் வழங்கப்படாவிட்டால், அவர்களின் திறன்கள் மழுங்கடிப்பட்டு எதிர்காலத்தில் குறித்த மாணவர்களின் முன்னேற்றத்திற்கு அது பாதகமாக அமையும்.

பொருளாதார ரீதியில் மாணவர்கள் கவனிக்கப்படும்போது மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு மனப்பாங்கினை உண்டுபண்ணி, மாணவர்களின் செயற்பாட்டில் பாதிப்பை உண்டு பண்ணும்.

**பாடசாலை மட்டத்தில் பிள்ளை உரிமைகளை மேம்படுத்தக்கூடிய முன்மொழிவுகள்**

பிள்ளைகளின் உரிமைகள் தொடர்பாகவும், அதனை மீறும் சந்தர்ப்பங்களில் வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பாகவும் ஆசிரியர்களுக்கு பயிற்சிப்பட்டறைகள் மூலமாக சிறந்த முறையில் விடயங்களை எடுத்துரைத்தல்.

உடற்தண்டனைகளை மாணவர்களுக்கு வழங்கும்போது ஏற்படும் பாதிப்புகளை ஆசிரியர்களுக்கு விளங்கவைத்தல்

உடற் தண்டனைக்குள்ளான மாணவன் ஒருவன் எதிர்காலத்தில் கல்வியினைப் பெறுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களை ஆசிரியர்களுக்கு விளங்கவைத்தல்.

பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிக்கும்போது எந்த விதமான வேறுபாடுகளையும் காட்டாது அவர்களின் விருப்பத்திற்கு இணங்க கல்வி கற்கக்கூடிய பாடசாலைகளை வழங்குதல் அதற்கு ஒவ்வொரு பாடசாலையும் நியாயமான சில விதிமுறைகளை ஏற்படுத்திக் கொள்ளல்.

பாலியல் தொடர்பான பிரச்சினைகளுக்கு மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு வகுப்புக்களை நடத்துதல்.

பாலியல் குற்றச்செயல்கள் கல்வியில் ஏற்படுத்தும் தாக்கங்களை விரிவாக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எடுத்துரைத்தல்.

பாலியல் குற்றச்செயல்களினால் சமூகத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் பாதகமான விளைவுகளை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் விளங்கப்படுத்தல்.

விசேட கல்வி தேவையுடைய மாணவர்களுக்கு அவர்களின் நிலைமைக்கு ஏற்ப கல்வி புகட்டக்கூடிய விசேட கல்வி முறையூடாக கற்றல், கற்பித்தல் செயன்முறையினை மேற்கொள்வதற்கு தேவையான வகுப்பறைகளை உருவாக்குதல். மீத்திறன் குறைந்த மாணவர்களுக்கு அவர்களின் நிலைமையினை விசேடமாக கருத்திற்கொண்டு அவர்களுக்கு சிறந்த முறையில் கல்வி கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத்தினை உரிய முறைப்படி வழங்குதல்.

உறவு முறை மற்றும் வெவ்வேறு செல்வாக்குகள் காரணமாக திறமையுள்ள மாணவர்களுக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்காமல்



போகும் சந்தர்ப்பங்களை தவிர்ப்பதற்காக போட்டி நிகழ்ச்சிகளில் பங்கெடுக்கும் மாணவர்களை உரியமுறைப்படி வழங்குதல்.

பிள்ளைகளது உரிமையினை மீறுபவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளையும் வழங்காது சட்டப்படி நடவடிக்கை எடுத்தல்.

எனவே, தொகுத்து நோக்கும் போது அனுபவத்தை அனுபவத்தால் அனுபவத்தின் முகமாக, ஓர் ஆசிரியரால் மாணவர்களுக்கு வழங்கப்படும் அறிவூட்டலே கல்வியாகும் அந்தவகையில் இலசவக்கல்வி (Free Education) கட்டாயக்கல்வி (Compulsory Education) எல்லோருக்கும் கல்வி (Education for all) போன்ற கல்வி பற்றிய ஜனநாயக மயப்படுத்தல் என்பன கல்வித்துறையினுள் சாதகமான பார்வையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், அத்தகைய முன்னெடுப்புக்கள் மேலும் அர்த்தமுடையதாக்கப் படவேண்டுமாயின் கல்வியானது எந்தவொரு பாரபட்சமுமின்றி அனைத்து மாணவர்களுக்கும் அடிப்படை மனித உரிமை என்ற அடிப்படையில் முழு அளவில் கிடைக்கக்கூடிய தேவைப்பாடு உணரப்பட்டுள்ளது. கொள்கைகள், கோட்பாடுகள், கருத்துக்கள் என்பன எழுத்துவடிவில் உறங்கிக்கொண்டிராமல் செயல் வடிவம் பெற்றாக வேண்டும். அந்தவகையில் சகல மாணவர்களுக்கும் கல்வியை அளிக்கும் செயற்பாட்டினை முனைப்புடையதாக்க வேண்டுமாயின் இவ்விடத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கைகளை வலுவாக கோர்த்து கல்விச் செயற்பாடுகளை முன்கொண்டு செல்ல வேண்டும். அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இதற்கான காத்திரமான பங்களிப்பினை வழங்குகின்ற போதிலும், சமூகமும் தனது பங்களிப்பை வழங்க வேண்டியது அவசியமாகும்.

# மகிழடித்தீவுக் கிராமம்

## ஒரு நோக்கு

ஈழக்கிழக்கில் மட்டக்களப்பு மாநிலத்திற்கு அணி செய்யும் பெருநிலப்பரப்பாக புகழ்பெற்று விளங்குவது கொக்கட்டிச்சோலைப் பிரதேசம் என அழைக்கப்பட்ட இன்றைய மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பட்டிப்பளைப் பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் இதயமாகவும் வரவேற்பு கோபுரமாகவும் விளங்கு வது மகிழடித்தீவுக் கிராமம் ஆகும். இக்கிராமம் வயலும், வயல்சார்ந்த இடமுமாகிய மருத நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

மட்டக்களப்பு வாவிக்கு அணமித்து இக்கிராமம் அமைந்துள் ளதன் காரணமாக இயற்கை அழகு நிரம்பப்பெற்ற கிராமமாக பண்டு முதல் இந்நாள் வரை பெருமை அடைந்துள்ளது. இக்கிராமத்தில் 80 விழுக்காடு (வீதமான) மக்கள் பழுதில்லா தொழிலாக உழுதுண்டு வாழ்வதை பரம்பரை பரம்பரையாகக் கொண்டு வாழும் போடிமார் மலிந்த ஊராகும். இதற்கு "போடிமார்களே மட்டக் களப்பு தமிழகத்தை தாங்கிநிற்கும் தூண்கள்" என்ற சிறப்பும் அத்தோடு இக்கிராமத்துக்கு மேலும் ஒரு பெருமை சகல நிலைகளிலும் நூற்றுக்

**வே.மகேசரெத்தினம்** (J.P)
அதிபர் (SLPS - 2- 11, PGRE)



கணக்கான கல்விமான்களைப் பிரசவித்த பெருமையுமாகும். சிறப்பாகக் கூறுவ தாயின் இப்பிரதேசத்தில் க.மகேஸ்வரலிங்கம் முதலா வது பட்டதாரியை உருவாக்கிய பெருமை இக்கிராமத்தையே சாரும்.

இங்கு வாழும் மக்கள் இறைவழிபாட்டில் தங்களது வாழ்க்கையையும் ஒன்றாகப் பிணைந்த உயிரையும் விட உயர்ந்ததாக தங்களது மூதாதையர்கள் கட்டிக்காத்து வந்த பண்பாடு, பழக்க வழக்கம், கலை, கலாசாரம் இவைகளை கண்ணென மதிப்பவர்களாகும்.

**(1) அமைவிடம்:-**

கிழக்கு இலங்கையில் மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே மண்முனைப்பாலம் ஊடாக சுமார் 12 கிலோ மீற்றர் தூரத்தில் "பாலோடு தேனாறு பாய்ந்தோடும் நன்னாடு" என்ற சிறப்பினைப் பெறுகின்ற மண்முனை தென் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தில் மகிழடித்தீவுக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் பரப்பளவு 161.6 Sq km ஆகும். தற்போதைய மகிழடித்தீவு கிராமத்தில் வசித்து வரும் மக்கள் தொகை 2910 பேர் ஆகும்.

**(2) கோயில் :-**

பிள்ளையார் கோயில் பந்தலாகவும், கண்ணகி அம்மன் ஆலயம் ஓலைக்குடிசையா கவும் ஆரம்ப காலத்தில் அமைந்திருந்ததாக அறிகின்றோம்.

கண்ணகி அம்மன் ஆலயத்தின் இரு பக்கமும் இரண்டு கொட்டறைகள் அமைந்தருந் ததாகவும் இவை வடசேரி,தென்சேரி கொம்பு விளையாட்டுச் சாமான்கள் வைப் பதற்கு அமைக்கப் பட்டதாகவும் கூறப்படுகின்றன. வைகாசி மாதச் சடங்கு முடிந்தவுடன் கொம்பு விளையாட்டு நடைபெறும் ஆரம்பகாலத்தில் வைகாசிச் சடங்கு முடிய வடசேரி சார்பாக ஒரு இளைஞனும் தென் சேரி சார்பாக ஒரு இளைஞனுமாக இரண்டு ஆண் பிள்ளைகள் தேங்காய் உருட்டி அடித்தல் இடம்பெறும். தொடர்ந்து கொம்பு விளையாட்டு நடக்கும் இதன் பின்பு வசந்தன் அடித்தல் நிகழ்வு நடைபெற்று வந்ததாக அறிகின்றோம்.

அம்மன் கோயில் சடங்கு காலத்தில் மட்டும்தான் கதவு திறக்கப்படும். முனைக் காட்டில் வசித்து வந்த கொம்புக்கிளவி வகுத்துவாரைச் சேர்ந்த கட்டாடி ஒருவர்தான் சடங்கு செய்துவந்தார். மாவடிப்போடியார் என்றும் கோட்டையார் என்றும் அழைக்கப்பட்ட கனகசபை என்பவரின் தலைமையில் தான் முதன்முதலாக அம்மன் கோயில் செங்கல்லால் கட்டப்பட்டது. இவ்வாலயத்தில் 1941ம் ஆண்டு காலப்பகுதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிராமண ஐயர் ஒருவர் தான் தனிமையில் தங்கியிருந்து பூசை செய்ததாகக் கூறப்படு கின்றது. ஆலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள மடுவை கோயிலடி மடு எனவும் அரையாப்பாடி மடு எனவும் கூறப்படுகின்றது. தற்போது வெண்தாமரை உள்ள தாமரைக் குளமாகக் காணப்படுகின்றது.

**(3) கண்ணகி அம்மன் ஆலயம் :-**

மண்முனை தென்மேற்குப்பிரதேசத்தில் உள்ள கண்ணகி அம்மன் ஆலயங்களுள் மகிழடித்தீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்த ஆலயமாகும். யாழ்ப்பாணம் ஏத்துக் குடாவில் இருந்து ஏழு (07) கண்ணகி சிலைகளை நாடாளும் நம்பிகளும் மட்டக்களப்புப் பகுதிகளுக்கு கொண்டு வந்து கண்டி அரசனின் கட்டளைப்படி ஏழு கிராமங்களில் வைக்கப்பட்டதாக மட்டக்களப்பு மாண்மீகம் கூறுகின்றது.

**(4) கண்ணகி அம்மன் ஆலயம் பற்றிய செவிவழிக்கதை:-**

முற்காலத்தில் தனது மகளை இடுப்பிலும், தலையில் கட்டுப்பெட்டியுடனும் மண்முனை ஆறு கடந்து இக்கரைக்கு ஒரு பெண் வந்தாள் என்றும் தற்போது சேவகப்பற்று வயலாக

இருக்கும் பகுதி குளமாகவும் குளக்கட்டின் (கட்டுப்பற்றை) வடபுறம் ஒரு பெரிய மடு (இறால் வளப்பின்போது மூடப்பட்ட புறத்திமடு) இருந்ததாகவும் கூறப்படுகின்றது. இம்மடுவுக்குத் தென்புறத்தில் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. மடுவில் படுத்திருக்கும் தாய் எருமையைப் பிடிப்பதற்கு அதன் கன்றை மரத்தடியில் கட்டிவிட்டு இருவர் மரத்தின்மேல் இருந்ததாகவும் கன்று கனைக்கும் சத்தம் கேட்டு தாய் எருமை கோபத்துடன் அப்பெண்ணை நெருங்கி முட்டி வீச எத்தனித்த தருணம் எருமையினை அப்பெண் அடக்கினாள்.

மரத்தில் இருந்த இருவரும் ஆச்சரியத் துடன் அம்மா! பெட்டியினுள் என்ன? இருக்கின்றது என்று கேட்டபோது அதனுள் கண்ணகை அம்மன் சிலை ஒன்று இருப்பதாக அப்பெண் கூறினாள் அவள் எருமை மாட்டினை அடக்கியமைக்கு காரணம் பெட்டியில் இருந்த அம்மன் சிலையே என்று கருதி அச்சிலையினை அப்பெண்ணிடம் இருந்து பெற்று மகிழடித்தீவில் தற்போது இருக்கும் ஆலயத்தின் சற்றுமுன் னாள் ஓலையால் சிறு குடிசை கட்டி அச்சிலை யினை வைத்து வழிபட்டு வந்தனர். இவ்வால யத்தில் வைகாசிப் பூரணையை குளிர்த்தி தினமாகக் கொண்டு ஏழுநாட்கள் சடங்கு நடை பெற்று வருகின்றது.

**(5) வைரவர் கோயில்:-**

மகிழடித்தீவுக் கிராமத்தின் கிழக்கில் ஆரம்பகாலத்தில் மாவிலங்கையடி வைரவர் கோயில் பந்தலில் வழிபாடு இடம்பெற்று வந்தது விவசாயிகள் தமது வேளாண்மைத் தொழில் சம்பந்தமான நேர்த்திக்கடன் வைத்து உரிய நேர்த்தி முடிவடைந்ததும் பந்தலில் ஆகமம் சாராத சடங்கு முறை வழிபாடு இடம்பெற்று வருகின்றது.

**(6) காளிகோயில்:-**

மகிழடித்தீவுக் கிராமத்தின் தெற்கில் ஆலயடியில் காளி கோயில் அமைந்துள்ளது. இக் காளி கோயில் 1980ம் ஆண்டு தம்பிமுத்து சிங்கநாயகம் என்பவரால் முதன் முதலில் பூசகராக செம்பாப்போடி அமரசிங்கம் என்பவரைக் கொண்டு சடங்கு செய்யப்பட்டது. தற்போது புரட்டாதி மாதத்தில் காளிகோயில் சடங்கு பொது மக்களின் உதவியுடன் நடைபெற்று வருகின்றது.

**(7) பாடசாலை:-**

இக்கிராமத்துப் பாடசாலையின் ஸ்தாபகர் பொ.த.குமரப்போடி சின்னத்தம்பி (வாத்தியார்) என்பவர் ஆவார். 1889ம் ஆண்டு இப்பாடசாலை திண்ணைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டது. 1889 தொடக்கம் 1912ம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் சின்னத் தம்பி (வாத்தியார்) என்பவர் தனது வீட்டில் திண்ணைப்பள்ளியை உருவாக்கி கல்வி புகட்டி பின் மெதடிஸ்த மிஷனிடம் காணியை யும், திண்ணைப்பள்ளியையும் ஒப்படைத்தார். அப்போதைய பொருளாதார உயர்நிலை இந்துமதப் பற்று என்பன தலைமை ஆசிரியர் பதவியை ஏற்காமைக்கான காரணங்களாகும். அப்போது ஆரம்பப்பிரிவு வகுப்புக்களையும், மண்சுவரால் பாடசாலை அமைக்கப்பட்டிருந்த தாகவும் அறியக்கூடியதாக உள்ளது.

பாடசாலையை ஆரம்பிக்கின்றபோது சின்னத்தம்பி (வாத்தியார்) தலைமை ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொள்ளாததன் காரணமாக தற்போதைய மட்/மமே/ மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்தின் முதலாவது தலைமை ஆசிரியர் திரு.சி.அமரசிங்கம் என்பவர் 1912 தொடக்கம் 1928 வரையுள்ள காலப்பகுதியில் கடமையாற்றியதாக பாடசாலையின் ஆவணப் பதிவு மூலமாக தற்போதைய பாடசாலை அதிபர் திரு.பொ.நேசதுரை அதிபர் அவர்களிட மிருந்து அறியக்கூடியதாக உள்ளது. தற்போது வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் 13ஆம் தரம் வரை உள்ளது. மாணவர் தொகை 639 ஆகவும் ஆசிரியர்களின் தொகை 31ஆகவும் உள்ளது. நூற்றாண்டை பூர்த்தி செய்த ஒரு பாடசாலையாக கிராமத்திற்கு பெருமை சேர்த்துத் திகழ்கின்றது.

**(8) கலை, கலாசாரம் :-**

மகிழடித்தீவுக் கிராமத்தின் கலை, கலாசாரத்தில் வசந்தம், கும்மி, கூத்து, கொம்பு விளையாட்டு என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. சிறப்பாக மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் கூத்துக் கலையில் முதலாவது கிராமம் என்ற பெருமைக்குரிய கிராமமாக மகிழடித்தீவுக் கிராமம் திகழ்கின்றது. 1952ம் ஆண்டு முதல் சீரற்ற சூழ்நிலையை அடைந்தது இக்கிராமம் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் முற்று முழுதாக தமிழ்த் தேசியத்தை ஆதரித்த ஒரு கிராமமுமாகும். மணியம் மாஸ்டர் என்றழைக்கப்படும் சுப்பிரமணியம் ஆசிரியர் அப்போதைய பாராளுமன்ற உறுப் பினர்களுடன் நெருக்கமான உறவை வைத்தி ருந்ததன் காரணமாக பிரதேச வைத்திய சாலையை மகிழடித்தீவுக் கிராமத்தில் அமைத்துள்ளார்.

**(9) மகிழடித்தீவுச் சந்தியில் மறைந்துபோன தெம்மத்தன் கிணற்றடி அமுது:-**

தமிழர் பண்பாட்டின் பாரம்பரிய விருந்தோம்பல் பண்பினை பண்டு தொட்டு மட்டக்களப்பு மக்கள் பேணி வந்தனர் என்பதற்குச் சான்றாக ஒரு வரலாற்று நிகழ்வு தெம்மத்தன் கிணற்றடி அமுதாகும். அன்னதானம் என்று கூறுவதையே இங்கு அமுது என்று குறிப்பிட்டனர்.

**(10) தெம்மத்தன் கிணற்றடி அமைவிடம் :-**

மண்முனைப் பாலத்தை அடுத்து 2 கிலோமீற்றர் தூரத்தில் முதலைக்குடா, குறிஞ்சாத்தீவு, மகிழடித்தீவு கிராமங்களுக்கு இடையே இத்தெம்மத்தன் கிணற்றடி அமைந்துள்ளது. இவ்விடத்தில் அமுது கொடுப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த பழமையான கிணறு அழிந்து மறைந்து விட்டது. எனினும் அடிப்பாகத்தை இவ்விடத்தில் உள்ள மெதடிஸ்த தேவாலய வளவில் அகழ்ந்தால் இன்று கண்டு கொள்ளலாம்.

**(11) அமுது கொடுக்கப்பட்ட காலப்பகுதி:-**

தெம்மத்தன் கிணற்றடி அமுது பெரும் போக அறுவடையை அடுத்து குறிப்பிட்ட ஒரு நாளில் பெரிய அளவில் கொடுக்கப்பட்டு வந்தது. பொரியலுடன் தொடங்கி தயிர், கூழ், பழம், பலகாரம், சர்க்கரை ஆகியன கலந்த சுவையுடன் நிறைவுறும் கி.பி 10ம் நூற்றாண்டளவில் தொடங்கி கி.பி.20ம் நூற்றாண்டின் மூன்றாவது தசாப்தம் வரை நடைபெற்றது அறியக்கூடியதாக உள்ளது.

**(12) தெம்மத்தன் கிணற்றடி அமுதுக்கான வரலாற்றுப் பின்னணி:-**

மட்டக்களப்பு மான்மியத்தின்படி மட்டக்களப்பு இராச்சியத்திற்கு முன்பும், பின்பும் ஆதிக்குடிகளாகிய வேடர் செறிந்து வாழ்ந்து வந்தனர். மண்முனையை அடுத்துள்ள முனைக்காடு, கொக்கட்டிச்சோலை கிராமங்களை உள்ளடக்கியதாக பரந்த வெண்மணற் பரப்பு காணப்படுகின்றது. இம்மணல் செறிந்த காட்டுப்பகுதியில் வாழ்ந்து வந்த வேடர் "மணற்காட்டு வேடர்" என அழைக்கப்பட்டனர்.

மண்முனையில் கலிங்கர் குடியேறிய காலத்தில் அங்கு வாழ்ந்த வேடருக்கும், கலிங்கருக்கும் ஏதும் முரண்பாடு இருந்ததாகத் தெரியவில்லை. ஆரம்பத்தில் கலிங்கர் மாடு வளர்ப்பதற்காக பயன்படுத்திய இடங்கள் பட்டியடிக்குடா காலவாசல் என்னும் பெயருடன் மகிழடித்தீவில் இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. மண்முனையில் இருந்த கலிங்கச் சிறுவர்கள் மாடு மேய்ப்பதற்காக படுவான்கரை பக்கம் பகல் பொழுதில் செல்வது வழக்கம். அவ்வேளை வேடர்கள் உணவுக்காக கண்டு வைக்கும் ஆக்காண்டி முதலிய பறவைகளின் முட்டைகளை இச்சிறுவர்கள் தொடர்ந்து எடுத்து தொல்லை கொடுத்து வந்தனர். இதன் வேறு காரணங்களினாலும் வெறுப்புற்று வேடர்கள் அடைக்கப்பட்டிருந்த கலிங்கர்களின் பசுக்கன்றுகளை கொன்று மரங்களில் தூக்கிவிட்டனர். இது நிகழ்ந்த இடம் மகிழடித்தீவு கிழக்கில் உள்ளது. இந்த இடம் "கன்று

தூக்கி முனை" என இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. இதனால் கலிங்கருக்கும், வேட ருக்கும் இடையே பகைமை மிக வலுப்பெற்றது இதன் காரணமாக வேடர்களை அழிப்பதற்கு கலிங்கரால் திட்டம் தீட்டப்பட்டது. இத்திட்டத்தில் உருவானதே தெம்மத்தன் கிணற்றடி அமுதுக்கான வரலாற்றுப் பின்னணி ஆகும்.

**(13) அமுதின் ஆரம்பம் :-**

பரந்து வாழ்ந்த வேடர்களை அழித்து ஒழிப்பதற்கு அவர்களை ஒன்று சேர்க்க கலிங்கர் எண்ணினர். பெரும்போக அறு வடையை அடுத்து பெரியதொரு விருந்துக்கு வருமாறு வேடர்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டது ஒரு சூத்திரபந்தல் போடப்பட்டது. பந்தலில் இருந்து விருந்துண்டு முடியும் தருவாயில் பந்தல்பொறி எடுத்து விடப்பட்டது பந்தலில் அகப்பட்டவர்களும் விடுபட்டவர்களும் அனைவரும் பல வழிகளிலும் கொலை செய்யப்பட்டார்கள் இவ்வாறு அக்கிரமமும் அதிகார வெறியும் கொண்டதாகவே தெம்மத்தன் கிணற்றடி அமுதின் ஆரம்பம் அமைந்தது.

இவ் அக்கிரமச் செயலுக்கு பிராயச் சித்தம் தேடும் வகையில் கலிங்கர்கள் இவ் அன்னதானத்தை தர்மவழியில் செய்துவர ஆரம்பித்தனர். குறித்த அக்கிரமம் நடந்த இடத்தில் அன்னதானம் கொடுப்பதற்காக பெரியதொரு மரக்கொட்டுக் கிணறு ஒன்று அமைக்கப்பட்டது. பெரும்போக அறுவடையின் பின் ஒரு நாள் விவசாயிகள் எல்லோரும் சேர்ந்து அறுசுவையுடன் பல ஆயிரம் மக்களுக்கு உணவளித்தனர். பல மைல்கள் தூரத்தில் உள்ளவர்களும் இவ்வன்னதானத்தை நாடி வரத்தொடங்கினர். மண்முனை இராச்சி யத்தில் கலிங்க ஆட்சி நிலவிய சுமார் நான்கு நூற்றாண்டுகள் இவ்வமுது தவறாது சிறப்பாக அரச ஆதரவோடு கொடுக்கப்பட்டு வந்தது.

16ம் நூற்றாண்டு போர்த்துக்கேயர் கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றினர். இக்காலத்தில் கண்டி இராச்சியத்தின் ஆதரவின் கீழ் முற்குகத்தலைவர்கள் மட்டக் களப்பை ஆட்சிசெய்து வந்தனர் இக் காலப் பகுதியிலும் தெம்மத்தன் கிணற்றடி அமுது வெகு சிறப்புப்பெற்றது. கண்டி மன்னனின் ஆணையின் கீழ் மானிய கால சமுதாய அமைப்பு முறையில் ஒவ்வொரு சாதிகளும் தெம்மத்தன் கிணற்றடி அமுதுக்கு செய்யவேண்டிய பங்களிப்பு வகுக்கப்பட்டு இருந்தது.

19ம் நூற்றாண்டு காலப்பகுதியில் முக்கியமான ஒரு அம்சம் தான்தோன்றீச்சரத் திற்கும் அமுது கொடுக்கின்ற நிகழ்வுக்கும் இருந்த மிக நெருக்கமான உறவாகும். பெரும்போக அறுவடை முடிவடைந்ததும் சேவகப்பற்றுப் போடிமார் எல்லோரும் ஒருங் கிணைந்து தான்தோன்றீச்சரத்தில் அபிஷேக பூசை நடாத்தி அதைத்தொடர்ந்து மகேசுர பூசை போல தெம்மத்தன் கிணற்றடி அமுதை நடாத்தி வந்தனர்.

இன்னுமொரு முக்கிய அம்சம் தெம்மத்தன் கிணற்றடியில் இருந்து தான் தோன்றீச்சரத்துக்கு புதிர்கோட்டை காவிச் செல்லும் காட்சியாகும் நூற்றுக்கு மேற்பட்ட சேவகப்பற்று விவசாயிகள் அலங்கரிக்கப்பட்ட புதிர் கோட்டைகளை காதடியில் கொட்டு முழக்கம், குரவைச்சத்தத்தோடு வரிசையாகக் காவிச்செல்வது கண்கொள்ளாக்காட்சியாக இருந்ததாக் கூறப்படுகின்றது.

20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் தெம்மத்தன் கிணற்றடி அமுது இடையிடையே பாதிக்கப்பட்டு இறுதியாக 1920ம் ஆண்டை யடுத்த சில ஆண்டுகளில் முழுமையாக மறைந்து விட்டது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றினை உடைய தெம்மத்தன் கிணற்றடி அமுது மறைந்தாலும் இதுபற்றிய செய்திகளும், கதைகளும் இப்பிரதேச மக்களி னால் தொடர்ந்து மரபு வழியாக காப்பாற்றப் பட்டு வருகின்றன. இந்நிகழ்வின் மூலமாக மட்டக்களப்பு வரலாற்றினையும் குறிப்பாக மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தின் வரலாற்றினையும் நாம் அறிந்துகொள்ள முடியும்.

**அனர்த்தத்தினால் இக்கிராமத்திற்கு ஏற்பட்ட பேரழிவுகள்:-**

அனர்த்தத்தினால் இக்கிராமத்திற்கு ஏற்பட்ட பேரழிவுகளை இரண்டு வகையாகக் குறிப்பிடலாம். அவையாவன இயற்கையினால் ஏற்பட்ட அனர்த்தம், மனிதனால் ஏற்பட்ட அனர்த்தம் என்பனவாகும். இயற்கை அனர்த்தம் என்னும் போது 1956ம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளம் 1978ம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளி என்பவற்றைக் குறிப்பிடலாம். மனிதர்களால் ஏற்பட்ட அனர்த்தம் என்பது கடந்த முப்பது வருட யுத்த காலத்தில் ஏற்பட்ட பேரழிவுகளைக் குறிப்பிடலாம்.

1986ம் ஆண்டு இறால் வளர்ப்புப் பண்ணை செரண்டிப் சீபூட்ஸ் லிமிட்ட் என்ற நிறுவனத்தின் உதவியுடன் சாம்தம்பிமுத்து அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1987.01.28ஆந் திகதி அன்று இறால் வளர்ப்புப் பண்ணையில் முதலாவது மனிதர்களினால் ஏற்பட்ட அனர்த்த சம்பவமாக இப்பிரதேச படித்த இளைஞர்களின் உயிர்கள் பரிதாபமான மரணத்தைத் தழுவியதைக் குறிப்பிடலாம்.

இந்த வடு இற்றை வரையும் கிராமத்தில் மறக்க முடியாத சோகச்சம்பவம் மட்டுமன்றி கொக்கட்டி மரத்தில் இரத்தம் பாய்ந்த புனித மண்ணில் நூற்றுக்கணக்கான தமிழர்களின் இரத்தம் ஆறாக ஓடிய நாள் முதல் இவ்வூர் மக்கள் இதுநாள் வரை இச்சோகத்தில் இருந்து மீளவில்லை இவ்வாறு மனித அனர்த்தத்தினால் இக்கிராமத்திற்கு பேரழிவு ஏற்பட்டது. இவ்வாறான ஒரு நிலையில் இறால் பண்ணை மீண்டும் ஆரம்பிப் பதற்கு எவரும் ஆதரவு கொடுக்கவில்லை. இதற்கு உதாரணமாக 2015.06.17ஆந் திகதி அன்று மகிழடித்தீவு சந்தியில் இருந்து பட்டிப்பளை பிரதேச செயலாளர் செயலகம் வரை பொது மக்களாலும் பொது அமைப்புக்களாலும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நடைபெற்றதைக் குறிப்பிடலாம்.

1991.06.12ஆந் திகதி அன்று அழகிய இந்த மகிழடித்தீவு கிராமம் அலங்கோலமானது. இது மனிதர்களால் ஏற்பட்ட மற்றுமொரு மனித அனர்த்தச் சம்பவமாகும். இச் சம்பவம் மண்முனை கொக்கட்டிச்சோலை பிரதான வீதியில் அரசடி என அழைக்கப்பட்டு இன்றைய பிரதேச விளையாட்டு மைதானத்தை அண்மித்த அரசடி என்னுமிடத்தில் நடந்த பேரழிவாகும்.

அன்றைய தினம் 100க்கு மேற்பட்ட பொதுமக்கள் பலியானார்கள். 150க்கு மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டன. மகிழடித்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்த பொதுமக்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். இவர்களுக்கு ஆபத்து நேர்ந்திருந்தால் மகிழடித்தீவுக் கிராம மக்களின் வாழ்வு சோகக்கதையாகவே அமைந்திருக்கும். இன்றும் இம்மக்கள் தமது உறவுகளை நினைத்து ஏங்குகின்றனர். 100க் கணக்கான இறந்தவர்களுக்காக மகிழடித்தீவுச் சந்தியில் அமைக்கப்பட்ட நினைவுக்கோபுரம் இராணுவப் பிரச்சினை காலத்தில் சிதைக்கப்பட்டு இன்று வரையும் புனருத்தாரணம் செய்யப்படாமல் இருப்பது உயிர் இழப்புக்களைச் சந்தித்த மக்களுக்கு வேதனை தரும் விடயமாகக் காணப்படுகின்றது. இது விடயத்தில் உரிய அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் கவனம் செலுத்த வேண்டும் என்பது பொதுமக்களின் கருத்தாகும்.

**மகிழடித்தீவு எனும் பெயர் வரக்காரணம்**

மகிழை மரங்கள் நின்றமையினால் மகிழடித்தீவு எனும் பெயர்வரக்காரணம் ஆகும். மண்முனைப் பாலத்தைக் கடந்ததும் மண்முனை தென்மேற்குப்பிரதேசத்தில் முதலாவது வருகின்ற கிராமம் மகிழடித்தீவு ஆகும்.

**பிரதேச விளையாட்டு மைதானம்**

இயற்கை எழில் மிக்க வாவி மகள் அழகு செய்ய மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தின் பிரதேச விளையாட்டு மைதானம் மகிழடித்தீவுக் கிராமத்தில் அமைந்திருப்பதும் இக்கிராமத்தின் சிறப்பம்சமாகும்.



**குஞ்சிலியார் குளம்**

முதலைக்குடாவைச் சேர்ந்த திரு. அருணாசலம் கோபாலப்பிள்ளை என்பவரது முயற்சியில் முதலைக்குடா பாடசாலைக்கு 1941ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் சுவாமி விபுலானந்தர் அவர்களால் 80அடி நீளமும் 30அடி அகலமும் உடைய கட்டிடத்திற்கு "அடிக்கல்" வைக்கப்பட்டு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. இப்பாடசாலை இராமக்கிருஷ்ண மிஷன் பொறுப்பேற்பதில் தாமதம் ஏற்பட்டது. 1946ஆம் ஆண்டு மட்/ முதலைக்குடா மகாவித்தியாலய கட்டடத்திறப்பு விழாவிற்கு சுவாமி விபுலானந்தர் அவர்களை மிக விமரிசையாக வரவேற்று அழைத்துச் செல்லும் போது "ஒரு பசுக்கன்று "ம்பா" என்று கத்திய போது அதற்குத் தாய்பசு குஞ்சிலியார் குளத்திற்கு தண்ணீர் குடிக்கப்போகிறேன் என்று கத்தியதாம்" அப்போது பதினெட்டுப்பாஷைகள் தெரிந்த சுவாமி விபுலானந்தர் இதனைப்பற்றி சற்று தாமதித்து சிந்தித்து நின்றபோது அழைத்துச் சென்றவர்களிடம் பசு கத்திய விடயத்தினைக் கூறி குஞ்சிலியார் குளம் எங்கிருக்கிறது என வினவியபோது மகிழடித்தீவுக்கு தெற்குப் பகுதியில் அமைந்துள்ளதாகக் கூறினார்கள்.

இவ்வாறு இயற்கை எழில் கொஞ்சி விளங்கும் இக்கிராமத்தின் பெருமைகளில் கோயில், பாடசாலை, வைத்தியசாலை, நீர்வளம், தெம்மத்தன் கிணற்றடி அமுது போன்ற பல இன்னோரன்ன சிறப்புக்கள் முக்கியத்துவம் பெறுகின்ற அதே வேளை 1978.11.23 அன்று வீசிய சூறாவளி 1987ம் ஆண்டு ஜனவரி 28இல் இடம்பெற்ற அரச படைகளின் மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு இலக்காகிய புத்திஜீவிகளின் மிலேச்சத்தனமான படுகொலை அவ்வாறே,

1991.06.12இல் இடம்பெற்ற இன வெறியாட்டத்தால் ஏற்பட்ட கொந்தழிப்புக்கள், உயிரிழப்புக்களிலிருந்து இக்கிராம மக்கள் இன்று வரை மீளவில்லை என்பதுடன் 1991 இற்கு முன் பிறந்த அனைவரது உள்ளத்திலும் ஆறாத வடுக்களாக ஆழப்பதிந்த நினைவுகளாக இச்சம்பவம் உள்ளது என்றால் இதனை மறுக்கவோ, மறைக்கறோ முடியாது.

**உசாத்துணை நூல்கள் :-**


1. வயல்சஞ்சிகை - 1993
2. மகிழடித்தீவு ஸ்ரீ கண்ணனை அம்மன்ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 1993


**வாய்மொழித் தகவல்கள்:-**

1. திரு.கறுவத்தம்பி - அழகிப்போடி
2. திரு.பாலிப்போடி - இன்பராசா (ஊடகவியலாளர்)
3. திரு.கணபதிப்பிளை - சிவகுருநாதன் (கிராம சேவை உத்தியோகத்தர்)

# ஆக்கபூர்வமான மனிதர்களை உருவாக்கும் இலக்கியமும் கலையும்

2015 பிரதேச இலக்கிய கலைப் போட்டித் தொடரில், பாடசாலை மட்ட போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை




செல்வி. அ. தர்ஷிகா

மட்/ மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்

(சிரேஸ்ட பிரிவு)


கிராமங்கள் இயற்கைத் தெய்வங்களின் உறைவிடங்கள் அங்கு வாழும் மக்கள் அத் தெய்வங்களை வழிபடுகின்ற அடியவர்கள் இவ்வாறாக இயற்கையோடு ஒன்றித்து வாழ்கின்ற மக்களே நாட்டுப்புற மக்களாவர். இவர்களின் வாழ்வானது கலைகளோடும், இலக்கியங்களோடும் மிக நெருக்கமாக பின்னிப் பிணைந்தவை என்பதிலே எந்த விதமான ஐயப்பாடும் இல்லை என்றே கூறலாம். ஆகவே இத்தகைய நாட்டார் கலைகளும், இலக்கியங்களும் மனிதனை சிறப்பான முறையிலே உருவாக்குகின்றன. அந்தவகையில் நாட்டார் கலைகள் என்னும்போது கூத்து, வசந்தன், கும்மி, கோலாட்டம், கரகம் என்பனவையும் நாட்டார் இலக்கியங்கள் எனும்போது நாட்டார் பாடல்களையும், பழமொழிகளையும் அவர்களின் விடுகதை துணுக்குகளையும்

குறிப்பிடலாம். ஆகவே இத்தகைய கலைகள் இலக்கியங்கள் பற்றியும் அவை எவ்வாறு மனிதனை ஆக்கபூர்வமானவனாக உருவாக்கு கின்றன என்பது பற்றியும் இனி நோக்குவோம்.

முதலாவதாக நாட்டார் கலைகளை எடுத்து நோக்குவோமாயின் கலை என்பது "மனிதனின் உள்ளார்ந்த ஆற்றலின் வெளிப்பாடு என்று குறிப்பிடலாம். இதிலே முதலாவதாக கூத்துக்கலை பற்றி நோக்குவோமாயின் நாட்டுப்புற மக்கள் தொன்றுதொட்டு இன்று வரை விருப்பத்துடன் ஆற்றும் கலை எனலாம். அதாவது நாட்டுப்புற மக்கள் விவசாயத்துடன் இணைந்த வாழ்க்கையினை வாழ்ந்து வருபவர்கள் அக் காலத்திலே அம் மக்கள் தங்களது ஓய்வு நேரங்களை சிறப்பான முறையில் கழிக்கும் முகமாக கூத்துக்களைப் பழக்கி வந்தனர். அறுவடைக் காலம் முடிந்த பிற்பாடு அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பழைய புராண, இதிகாச கதைகளை அண்ணாவியாரின் துணைகொண்டு பழகுவர் இவற்றினை ஆலயங்களில் சடங்குகள் நடைபெறும் வேளை யிலே அரங்கேற்றம் செய்வர். எடுத்துக்காட்டாக அருச்சுனன் தபசு, வாளபிமன் நாடகம் நொண்டி நாடகம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான கருத்துச் செறிந்த கூத்துக்களை அரங்கேற்றம் செய்யும்போது அவற்றைப் பார்க்கும் மக்கள் அது பற்றிய அறிவினைப் பெறுவதுடன் அதனை அரங்கேற்றம் செய்ப வர்கள் தங்களது திறமைகளையும் வெளிப் படுத்துவதோடு உடலுக்கு நல்ல உடற்பயிற்சி யாகவும் அமைகின்றது.

அடுத்து நாட்டார் கலைகளிலே வசந்தன் கூத்தும் மிகவும் முக்கிய ஒன்றாகும். வசந்த காலம் பிறந்துவிட்டது என்பதனை அறிவிப்பதற்காக ஆடப்படுவதே வசந்தன் கூத்தாகும். அது பல வகைப்படும் உதாரணமாக பிள்ளையார் வசந்தன், அனுமன் வசந்தன் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவையும் ஆக்கபூர்வமான மனிதர்களை உருவாக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. எவ்வாறெனில் இவற்றை ஆடும்போது தாளமும் அதற்கேற்ற பாட்டும் ஆட்டமுமாக இருக்கும். இதனால் இதனை ஆடுவோர் தாள லயத்திற் கேற்ப ஆடும் திறமையையும் பெறுவர்.

அடுத்த நாட்டார் கலையான கும்மியை எடுப்போமாயின் கன்னிப்பெண்களெல்லாம் வளைக்கரம் கொட்டி குழுமி நின்று ஆடப் படுவது கும்மியாகும். இது கிராமப்புறங்களிலே ஆலயங்களின் உற்சவத்தின் போதும் சித்திரை வருடப்பிறப்பு, தைப்பொங்கல் போன்ற விசேட தினங்களிலும் ஆடப்படுகின்றது. இதுவும் கண்ணகி அம்மன் கும்மி, மாரியம்மன் கும்மி என பல வகைப்படும். இவற்றை கன்னிப் பெண்கள் பழகும்போது பாடப்படும் பாட்டிற்கேற்ற வகையில் தங்களது கரங்களைக் கொட்டி ஆடுவர். இதன் காரணமாக அவற்றை ஆடுவோர் பாடலுக்கேற்ற அவிநயத்தை வெளிக் காட்டுவதோடு அதனைப் பார்ப்போரின் மனதிலும் உள்ளத்திலும் புத்துணர்ச்சியும், மகிழ்வும் ஏற்படுகின்றது. எடுத்துக்காட்டாக பாரதியின்

"கும்மியடி தமிழ் நாடு முழுவதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் நீங்கின....." எனும்

பாடலைக் குறிப்பிடலாம்.


அடுத்து கலைகளிலே கோலாட்டம், கரகம் என்பவற்றைக் குறிப்பிடுவோமாயின் கோல்களைத் தட்டி ஒலி எழுப்பி ஆடப்படும் ஆட்டம் கோலாட்டம் என்றும் தலையிலே கரகம் எனப்படும் குடம் வைத்து ஆடப்படுவது கரகம் என்றும் அழைக்கப்படும் இவ்வாறான கோலாட்டம், கரகம் போன்ற நாட்டார் கலை களும் மக்களிடமுள்ள கலையுணர்ச்சிகளையும், திறமைகளையும் வெளிப்படுத்தி அவனை ஆக்கபூர்வமான மனிதனாக உருவாக்குவதற்கு உதவுவதுடன் அதனைப் பார்க்கும் மக்களிடை யேயும் கலை இரசனையையும் ஏற்படுத்துகின்றன.

இது வரையும் நாட்டார் கலைகள்



பற்றியும் அவை ஆக்கபூர்வமான மனிதர்களை உருவாக்குகின்றன என்பது பற்றியும் பார்த்த நாம் நாட்டார் இலக்கியங்கள் பற்றியும் அவை ஆக்கபூர்வமான மனிதர்களை உருவாக்கும் விதம் பற்றியும் நோக்குவோம் நாட்டார் கலைகளும், இலக்கியங்களும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவையாகும். இதனையே ஸ்னோபஸ் போன்ற அறிஞர்களும் கூறியுள்ளனர். நாட்டார் இலக்கி யங்களிலே மிக முக்கியமானது நாட்டார் பாடல்களாகும்.

நாட்டார் பாடல்கள் எனப்படுவது தொன்று தொட்டு எழுத்து மூலம் எழுதப்படாது வாய்வழியாகப் பாடப்பட்டு வரும் பாடல்களாகும். இது நாட்டுப்புறப் பாடல்கள் என்றும் அழைக்கப்படும். இதற்கு எழுத்து வழக்கு கிடையாது இன்றைய கால கட்டத்திலே எத்தனையோ கலைஞர்கள் ஏட்டிலே எழுதி பாடல்களை அச்சிட்டு வெளியிட்டாலும் ஏட்டிலே எழுதப்படாமல் வாய் வழியாகப் பேணப்பட்டு வரும் நாட்டார் பாடல்களின்



கவித்திறனுடன் ஒப்பிடவே முடியாது. நாட்டார் பாடல்கள் பல வகைப்படும். இவை மனிதனின் பிறப்பு தொடக்கம் இறப்பு வரை நீடித்துக் கொண்டே தொடர்ரயில் பாதை போல செல்கின்றன. குழந்தை பிறந்தவுடன் பாடப்படுவது மருத்துவிச்சி பாடல், தாலாட்டும் போது தாலாட்டுப்பாடல், வேலைகள் செய்யும்போது தொழிற்பாடல், காதல் வயப்படும் போது பாடப்படுவது காதல் பாடல், இறப்பின்போது பாடப்படுவது ஒப்பாரிப்பாடல் எனப் பல வகைப்படுகின்றது.

ஒரு தாய் வெகு நாட்களாக குழந்தையில்லாமல் குழந்தை பிறந்த பின் தனது மகிழ்ச்சியை பின்வருமாறு பாடுகின்றாள்.

"மலடி மலடியென்று மாநிலத்தார் பேசாமல்
மலடிக்கொரு குழந்தை ஆண்டவனார் தந்த
பிச்சை
இருடி இருடியென்று இரு நிலத்தார் பேசாமல்
இடிக்கொரு குழந்தை இந்திரனார் தந்த
பிச்சை" என்று பாடுகின்றார்.

குழந்தை சாய்ந்தாடும் வேளையில் "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு சாயு மடியிலே சாய்ந்தாடு...." என்று பாடுவதோடு குழந்தை நடக்க துவங்கி நடக்கும் போது "கை வீசம்மா கை வீசு....." என்று குழந்தையை தாலாட்டும் போது "ஆரோ ஆரிரோ.." என்றும் பாடுகின்றனர்.

அது மட்டுமா கிராமங்களிலே விவசாயம் என்பதே பிரதான தொழிலாகும். தாங்கள் செய்யும் வேலையில் சலிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக "ஓடி நட செல்லா...." என்றும் பாடுகின்றனர். ஒருவரை கிண்டலாகப் பாடுவதற்காக

"ஏன்டி குட்டி என்னடி குட்டி என்னடி செய்தாய்?" என்று ஆணும்

"பாம்புக்குட்டிக்கு பல்லு விளக்கினன் சும்மாவா இருந்தனான்" என்று பெண்ணுக்கு கிண்டலாக பாடுகின்றனர்.

அது மாத்திரமா விளையாடும் போது




பாடப்படும் பாடல்களும் ஏராளம்
"கவடியடிக்க கவடியடிக்க கைகால் முறியக் கைகால் முறிய காலுக்கு மருந்து தேடிக்கட்டு"
என்றும் பாடுகின்றார்.


காதல் வயப்பட்ட தலைவன் வேலைக்குச் செல்லும் போது தலைவியைப் பார்த்து
"அருவி வெட்டப்போறேன் பெண்ணே
அரிவாளைக் கொண்டா!" என்று ஒய்யாரமாகப் பாடுகின்றான்.

அத்தோடு ஒருவர் இறந்து விட்டால் அவரின் பிரிவுத்துயரை நினைத்து
"எண்ட கானா ராசா...." என்றும் பாடுகின்றனர்.

இவ்வாறான நாட்டார் பாடல்கள் மட்டுமன்றி நாட்டார் இலக்கியங்களில் ஒன்றான




விடுகதைகளும் மக்கள் மத்தியில் சிந்திக்கும் ஆற்றலை ஏற்படுத்துவதோடு, நாட்டார் இலக்கியமான பழமொழிகளும் கூட மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளைப் பொருத்தமாக பிரதிபலிப்பவையாக உள்ளன. எடுத்துக்காட்டாக சிறுவயதிலே திருந்தாத பிள்ளையைப் பார்த்து "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்று கூறும் பழமொழி யினூடாக இதனை அறியலாம். இவ்வாறாக நாட்டார் இலக்கியங்களும் மக்கள் மத்தியில் சிந்திக்கும் ஆற்றலினை விருத்தி செய்ய உதவுவதுடனும் அவர்களின் அழுகை, கோபம், காதல் போன்ற உள்ளத் துணர்வுகளையும் வெளிக்காட்ட உதவுகின்றன.



ஆகவே இவ்வாறான நாட்டார் கலைக ளும் நாட்டார் இலக்கியங்களும் மக்கள் மத்தியில் கலை இரசனையையும், கலை உணர்வுகளையும் ஏற்படுத்துவதோடு அவர்கள் மத்தியில் உள்ள திறமைகளை வெளியுலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டுவதுடன் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப சிந்திக்கும் ஆற்றலையும் ஏற்படுத்தி அவர்களை நாட்டிற்கேற்ற நற்பிரஜை களாகவும் மாற்றுகின்றதனூடாக எதிர்கால உலகிற்கு தேவையான ஆக்கபூர் வமான மனிதர்களை உருவாக்குகின்றன. என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

# திருவுருவங்களில் லிங்கம்





சைவவழிபாட்டில் இலிங்கம் முக்கிய இடம் பெறுகின்றது. பாரதத்தில் ஆங்காங்கு காணப் படும் புண்ணிய தீர்த்தங்களில் இலிங்கத் திருவுருவங்கள் நிறுவப் பட்டுள்ளன. பாரத நாட்டில் சிவனுக்குக் கோயிலமைத்துள்ள இடங்களிலெல்லாம் வழிபடுவதற்கு இலிங்கத் தையே முக்கிய விக்கிரகமாகத் தேர்ந்து நிறுவியுள்ளார் கள். தெற்கே கன்னியாகுமரி யிலிருந்து வடக்கே காஷ்மீரம் வரை இலிங்க வழிபாடு ஒரே மாதிரியாகப் பரவியுள்ளது. வடக்கே வழிபடுமிடங்களி லெல்லாம் சைவர்கள் இலிங்கங்களை மட்டுமே நிறுவி வழிபடுகின்றனர். அங்கு சிவனுடைய மூர்த்தி பேதங்களை வழிபடும் வழக்கம் அவ்வளவு பிரசித்தி பெற வில்லை. தென்னாட்டில் சிவனுடைய மூர்த்தி பேதங்களை நிறுவி வழிபடுதல் நிகழ்வதாயினும் இவ் வழிபாட்டில் இலிங்கத்திற்கே முக்கியத்துவம் உண்டு. கோவிற் கருவறைகளில் நிறுவப்படுவது இலிங்கமே இலிங்கந் தவிர்ந்த ஏனைய திருவுருவங்கள் நிறுவப்பெற்றுள்ள சிவன் கோவில்கள் கிடையா சிவனின் மூர்த்தி பேதங்கள் நிறுவப்பட்டுள்ள எனினும் இக் கோயிற் கருவறைகளில் இலிங்கமே இடம் பெறும் என்பது நினைவு கூரற்பாலது. சைவத்தின் கிளைகளாக விளங்கும்

**சிவதொண்டன். ஞானபேரின்பம்** *(J.P)*
இந்து ஆலய ஒன்றியத் தலைவர்

முருக வழிபாடும் கணபதி வழிபாடும் நிகழுமிடங்களிலும் இலிங்கத்திற்குத் தனி இடம் உண்டு. இதை இந்தியாவிலும் இலங் கையிலும் முறைப்படி அமைக்கப்பட்டு சிறந்து விளங்கும் கோயில்களிற் காணலாம் இவ்வுண் மைகள் இலிங்க வழிபாட்டின் தனிச் சிறப்பி னையும் முக்கியத்துவத்தினையும் சுட்டுகின்றன.

இலிங்கத் திருவுரும் எதைக் குறிக் கின்றது? இலிங்க வழிபாட்டின் நோக்கம் என்ன? என்னும் கேள்விகளுக்குப் பலர் பலவாறாக விளக்கங் கூறியுள் ளார்கள் சமய இலக்கியங்களும் பல்வேறு விளக்கங்கள் தந்துள்ளன. மேனாட்டவர்கள் வழிபடும் மரபு தெரியாதவர்களாய் தம் மனம் போனவாறு இலிங்கம் பற்றி விளக்கியுள்ளார்கள். அரை குறையாய் விஷயங்களைத் தெரிந்து கொண்டு ஆராயப் புகுந்ததன் விளைவே இது இவற்றை விரிவாய்க் கூறி உரிய விளக்கந்தருவதற்குச் சைவக்கிரியை என்னும் பெருநூலில் இக்கருத்துக்கள் விரிவாக இடம்பெறும்.

சிவனுக்கெனச் சிறப்பாக உள்ள திருமேனிகள் மூன்று ஒன்று அருவத்திருமேனி. இது ஊனக் கண்களுக்குப் புலப்படாதவாறு நுண்ணியது அகக் கண் கொண்டு உள்நோக் கும் யோகியர் நோக்கிற்கு மட்டும் எட்டுவது மற்றையது கை,கால் முதலிய உறுப்புக்களுடன் கூடிய உருவத்திருமேனி இவ்விரண்டிற்கும் புறம்பானவாறு உருவமும், அருவமும் கலந்த தனி நிலையில் புது உருவம் ஒன்றும்முண்டு. இது உருவத்திற்கு வேண்டுவனவான கை,கால் முதலிய உறுப்புக்கள் இல்லாததனால் அருவமாகியும் கண்ணால் பார்க்கும் பொழுது கையாற் தொடும் பொழுது உணரத்தக்கதனால் உருவமாகியும், இருநிலைகளும் விரவப் பெற்ற அருவுருவம் இவ்வுருவத்திருவுருவம் சிவனுக்கு மட்டிலும் சிறப்பாயமைந்தது இதுவே இலிங்கம் சிவனுக்கெனச் சிறப்பாயுரி யதனால் இது சிவலிங்கம் எனப்படலாயிற்று.

இலிங்கம் உயரிய தத்துவங்கள் பலவற்றை உணர்த்தி நிற்பது லிங்கம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு அடையாளம் என்பது கருத்து சிவனைக் குறிக்குங் குறிப்பாக நிறுவப்பட்டதனால் இது இலிங்கமாயிற்று உபநிடதங்கள் இறைவன் பெருமையை எடுத்தோதுகின்றன. அவன் மக்களினறிவுக்கு எட்டாதவன் இந்திரியங்களுக்கு இவனைக் கிரகிக்கும் ஆற்றல் இல்லை என்பது சுவே தாசுவதர உபநிடதம் எனவே கையால் தொட முடியாதவனை கண்ணால் பார்க்க இயலாத வனை வாழ்த்தி வணங்கும் பொழுதும் நினைக்கும் பொழுதும் அவனைக் கிரகிக்க முற்படுவோர்க்கு இலிங்கம் அவனைக் குறிக் கும் அடையாளமாக அமைவது இலிங்கமாக அவனையுணர்த்துங் கருவியாக விளங்கிற்று இது பற்றியே இதற்கு இலிங்கம் என்றும் பெயர் ஏற்பட்டது.

வேதங்கள் யாகத்தில் வளருந் தீயைப் போற்றுவன தூய்மை வாய்ந்த தெய்வீகத் தீயை நடுநாயகமாகக் கொண்டு தான் வேத கால வழிபாடு நிகழ்ந்தது. இது அவிசொரிந்து வேட்கும் வழிபாடும் அக்கினியில் நிகழும் இவ்வழிபாடு அக்கினிக்கு மட்டும் நிகழ்வதல்ல தெய்வங்களனைத்துக்குமே அவிசொரிதல் அக்கினியொன்றிலேயே அன்றிவேறோரு இடத்தும் இல்லை. அக்கினி முகமாகவே தேவர்களை வழிபடுவது வேதகால வழக்கு. இதனால் ஹுதபும், ஹவ்யவாட் என அக்கினி பெயர் பெறலாயினன். வேதகால வழிபாட்டிற்கு அக்கினி இன்றியமையாது விளங்கிற்று அக்கினியின்றேல் வேள்வியில்லை. கட்புல னுக்கு அகப்படாத தேவர்கட்குக் கட்புலனாகும் அக்கினி பிரதிநிதி இவ்வக்கினி குளிர்ந்து நெருங்கி இறுதித்திரண்டு உருவங்கொண்டது பொன்நிறமான தீ குளிர்ந்த நிலையில் கருநிறம் பெறுவது அனைவருமறிந்ததே இவ்வாறு அக்கினி எய்திய நிலை இலிங்கம் பிரமனும் மாலும் அடிமுடி தேடும் வண்ணம் இறைவன் ஒளி வீசும் தீப் பிழம்பாய்த் தோன் றிய நிலையினை நினைவூட்டுவது இலிங்கம். தேவர்கள் வேண்டத் தீப் பிழம்பு வடிவம் நீங்கி இலிங்க வடிவாயினன் என்பன சமய நூல்கள் இலிங்கத்தின் குவிந்த தோற்றம் இவ்வுண்மையினைத் தெளிய வைக்கின்றது.

இலிங்கங்களை நூல்கள் இருவகை

யாகக் கூறும். ஒன்று சலலிங்கம் மற்றது அசலலிங்கம் ஜங்கமலிங்க வகையும் சிலநூல்களிற் காணப்படுகின்றது. இவ்வினத்தைச் சார்ந்த இலிங்கங்கள் மண்ணாலும், உலோகத்தாலும், இரத்தினத்தாலும், மரத்தாலும், கல்லாலும் அமைக்கப்படுவன அவ்வப்போது வழிபடுவதற்காக அமைக்கப்படும் இலிங்கம் வழிபாடு நிறைவேறியதும் புனித தீர்த்தங்களில் சேர்ப்பிக்கப்படும்.

பச்சை மண்ணால் உருவாகும் மண்ணிலிங்கத்தை அமைக்கும் முறையைக் காகோகாமம் கூறுகின்றது. சுத்தமான இடத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட களி மண்ணுடன் பால், தயிர், நெய், மா முதலிய பொருள்களைச் சேர்த்து மரப்பட்டைகள், சந்தனம், பாதரசம் முதலியவற்றையும் கலந்து நன்கு பிசைந்து ஒரு மாதம் வரை வைத்திருந்து பின் ஆகமம் கூறும் இலக்கணங்களுக்கமைய இலிங்கத்தை உருவாக்கல் வேண்டும். இதை நெருப்பிற் காய்ச்சி எடுத்த பின் வழிபாட்டிற்கு பயன்படுத்தலாம்.

உலோகஜலிங்கம் என்பது பொன், வெள்ளி, செம்பு, வெண்கலம், இரும்பு, ஈயம், பித்தளை, துத்தநாகம் முதலிய உலோகங்களிலொன்றால் அமைவது இரத்தினஜலிங்கம் முத்து, பவளம், வைடூரியம், புஷ்பராகம், மரகதம் முதலிய இரத்தினங்களிலொன்றால் உருவாவது தாருஜலிங்கம் வன்னி, மதுகம், கர்ணிகாரம், திந்துகம், அர்சுணம், பிப்பலம் உதும்பரம் முதலிய மரங்களால் ஆக்கப்படுவது. கருங்காளி, சந்தனம், சாலமரம், வில்வம், இலந்தை, தேவதாரு முதலியனவும் இவ்வகை இலிங்கம் அமைப்பதற்குத் தகுதிவாய்ந்தன. எனக்காமிகாகமம் கூறும் கல்லாலமைந்த இலிங் கங்களும் சலலிங்கங்கள் எனப்படும். இவ்வகை இலிங்கங்கள் சிறு உருவம் வாய்ந்தவை கழுத்தில் தரிப்பதற்குத் தகுந்தவை இலிங்கபயதர்கள் இவற்றைத் தரிசிப்பர் பூசை நிகழும் வேளை உடனே உருவாக்கிப் பூசை முடிந்ததும் களையப்படும் இலிங்கம் க்ஷணிகலிங்கம் எனப்படும். இது மணலைக் குவித்தும் அமைக்கப்படும். அரிசி, சமைத்த சோறு, சாணகம், வெண்ணெய், உருத்திராக்கம், அரைத்த சந்தனம், தர்ப்பையாலமையும் கூர்ச்சம், பூ, சக்கரை, மா ஆகியனவும் க்ஷணிகலிங்கம் அமைப்பதற்கு உரியவை

அசலலிங்கம் தாவரலிங்கம் என்றும் பெயர் பெறும் இவ்வினத்தைச் சார்ந்த இலிங்கங்கள் ஒன்பது வகையின அவை சுவாயம்புவம், தைவிகம், காணபத்தியம், அசுரம், சுரம், ஆர்ஷம், ராஷசம், பாணம் என்பன இவற்றுள் சுயம்புலிங்கம் தலைசிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது. தைவதம், ஆர்ஷகம், காணபம், மானுஷம் ஆகிய நான்கு இலிங்கங்களையே மகுடாகமம் குறிப்பிடுகின்றது. காமிகாகமம் தாவரலிங்களை அறுவகைகளாக வகுக்கின்றது. இவை சுயம்புவம், தைவிகம், ஆர்ஷகம், காணபத்தியம், மானுஷம், பாணம் என்பன.

சுயம்புலிங்கம் தானே தோன்றுவது தொடக்கம் அற்றது. பலவகைப்பட்ட உற்பாதங்களின் விளைவாகச் சிதைவுறினும் திரும்பவும் பிரதிஷ்டை முதலிய கிரியைகளின்றியே வழிபடத்தக்க பெருமை வாய்ந்தது. பின்னப்படும் பகுதியை வெள்ளி முதலிய உலோகங்களால் நிரவித் தொடர்ந்து பூசிக்கலாம். இந்தியாவில் உள்ள அறுபத்தெட்டுத் திருக்கோயில்களில் இச்சுயம்புலிங்கங்கள் விளங்குகின்றன.

தைவிகலிங்கம், சுவாலை வடிவானது கைகளைக் கூட்டிக் கூப்பும் அஞ்சலியை நிகர்க்கும் கணபலிங்கங்கள், கணங்களால் நிறுவப்பட்டவை. அசலலிங்கங்களும் பெரும்பாலானவை. மானுஷலிங்கங்கள் இவை மக்களால் அமைக்கப்பட்டவை. ஆகமங்கள் விதிக்கும் முறையினுக்கிணங்க உருவாக வேண்டியவை. சதுரவடிவினதான அடிப்பகுதி பிரம பாகம் என்றும் நடுவில் எண்கோண வடிவினதான பகுதி விஷ்ணுபாகம் என்றும் மேலே வட்ட வடிவினதான பகுதி உருத்திர பாகம் என்றும் பெயர் பெறும். சர்வதேசிகம், சர்வசமம், வர்த்தமானம், சைவாதிகம் ஸ்வஸ்திகம், திரைநாசிகம், ஆட்யம் என்னும் இலிங்க வகைகளும் ஆகமங்களில் விரிக்கப்பட்டுள்ளன.

நாகரலிங்கம், திராவிடலிங்கம், வேசரலிங்கம் என இலிங்கங்களின் பிரிவுகளை மயமதம் எடுத்துக்கூறுகின்றது.

மானுஷ இலிங்கங்களுள் இன்னும் ஐவகை இலிங்கங்கள் இருக்கின்றன. இவை சஹஸ்ரலிங்கம், தாராலிங்கம், சைவேஷ்டய லிங்கம், முகலிங்கம் என்பன அஷ்டோத்திர லிங்கம் நூற்றெட்டு சிறு இலிங்கங்களை பூசா பாகத்தில் உடையது. இவ்வாறு ஆயிரம் சிறு இலிங்கங்கள் இருப்பின் அது சஹஸ்ரலிங்கம் எனப்படும். தாரலிங்கம் ஐந்து, ஏழு, ஒன்பது, பன்னிரண்டு, பதினாறு, இருபது, இருபத்துநான்கு அல்லது இருபத் தெட்டு பட்டைகளை உடையது. முகலிங்கங்கள் முகங்கள் செதுக்கப்பட்டிருப்பன. இம்முகங்கள் ஐந்து. இதன் எண்ணிக்கை வேறுபடலாம். ஒரு வாயில் இருக்கும் கருவறையில் ஒரு முகமுள்ள இலிங்கம் நிறுவப்படும். நான்கு வாயில்கள் இருப்பின் நான்கு முகங்களையும் அமைக்கலாம். ஐந்தாவது முகத்தை அமைப் பதாயின் அது மேலே இருத்தல் வேண்டும். உச்சியில் இவ்வாறு இருக்கும் முகத்திற்கு ஈசானம் எனப்பெயர் உண்டு கிழக்கே இருப்பது தத்புருஷம், அகோரம் தெற்கே உள்ளது சத்யோஜாதம் மேற்கிலும், வாமதேவம் வடக்கிலும் விளங்குவன.


இலிங்கம் பீடத்தின் மேல் நிறுவப்படும். இப்பீடத்திற்குப் பிண்டிகை என்றும் பெயர் உண்டு. இது சதுர வடிவிவாவோ, வட்ட வடிவாகவோ அமையலாம். ஒன்று, இரண்டு அல்லது மூன்றுகல தளங்கள் ஒன்றின் மேலொன்றாயமையும் வகையில் பீடம் உருவாகும். இதில் பல நுணுக்கமான வேலைப்பாடுகள் அமையும். எண்ணிறைந்த வடிவங்களைக் கொடுத்து உருவாக்கப்படும் பீடங்களும் பல திறந்தன. இப்பீடங்களின் வேலைப்பாடமைந்த பகுதிகள் முறையே உபானம், ஜகதி, குமுதம், பதிமம், கம்பம், கண்டம், பட்டிகை, நிம்னம், கிருதாவரி என்பன பூசாபாகத்திலிருந்து இலிங்கத்திற்கு வெளியே நீண்டிருக்கும் பகுதியை நாளம் என்று நூல்கள் சுட்டுவன. இது பீடத்திலிருந்து தொடங்கி வெளியே நீண்டு நிற்கும் அபிடேகிக் கும் நீர் வெளியே செல்வதற்கு இது வழியாய் அமைந்துள்ளது.

இதுவரை அருவுருவத் திருமேனியா கிய இலிங்கத்தைப் பற்றிய விபரங்களைச் சுருக்கிக் கூறினோம். சிவபெருமானின் மூர்த்தி பேதங்கள் அறுபத்து நான்கினுள் முதலிற் கூறப்படுவது இலிங்கம் இதையடுத்தும் கூறப்பட்ட மூர்த்திகள், இலிங்கோற்பவர், முலிங்கம், சதாசிவம், மகாசதாசிவம், உமாம கேசுவரர், சுகாசனமூர்த்தி, உமேசமூர்த்தி, சோமாஸ்கந்த மூர்த்தி, சந்திரசேகரமூர்த்தி, விருஷாந்திகமூர்த்தி, புஜங்கலளித மூர்த்தி, புஜங்கத்ராஸ மூர்த்தி, சந்தியாதிருத்தமூர்த்தி, சதாநிருத்த மூர்த்தி, சண்டதாண்டவமூர்த்தி, கங்காதரமூர்த்தி, கங்காவிசர், ஜனமூர்த்தி, திரிபுராந்தகமூர்த்தி, கல்யாணசாந்தர மூர்த்தி,அர்த்தநாரீசுவரமூர்த்தி, கஜாசுரசம்ஹரா மூர்த்தி, ஜவராபக்ன மூர்த்தி, சார்துஸஹர மூர்த்தி, பாசுபதமூர்த்தி, கங்காளமூர்த்தி, கேசவார்த்தமூர்த்தி, பிஷடனமூர்த்தி, சிம்ஹக்ன மூர்த்தி, சண்டேசுவராணுக்கிரகமூர்த்தி, வியாக்யாதஷிணாமூர்த்தி, யோகதஷிணா மூர்த்தி, வீணாதரஷிமூர்த்தி, காலாந்தகமூர்த்தி, காமரிகாலதகனமூர்த்தி, வகுனேசுவரமூர்த்தி, பைரவமூர்த்தி, ஆபதுத்தாரணமூர்த்தி, வடுக மூர்த்தி, ஷேத்திபாலமூர்த்தி, வீரபத்திரமூர்த்தி, அதுகாராஸ்திரமூர்த்தி,

சோமஸ்கந்தர், வைரவர், வீரபத்திரர், நிருத்தமூர்த்தி, தட்சணாமூர்த்தி, பிஷாடன மூர்த்தி ஆகிய ஒன்பது மூர்திகள் இலங்கை யிலும், இந்தியாவிலும் உள்ள பெரும் பாலான கோவில்களில் வழிபாட்டிற்காக நிறுவப் பட்டிருக்கக் காண்கின்றோம். இவற்றைப் பற்றி மட்டுமே இந்நூலில் கூறுதல் இயலும் ஏனையமூர்த்திகள் சிற்சில குறிப்பிட்ட இடங்க ளில் மட்டும் காணப்படுவன. இவை பற்றிக் கூறுவதற்கு விரிவாக எழுதப்படும் நூலே இடந்தரும்.

# மகிழடித்தீவில் கண்டெடுக்கப்பட்ட 2000 ஆண்டு பழமையான நாகர் காலத்துபொருட்கள்

## பற்றிய பார்வை



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைதென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட மகிழடித்தீவு கண்ணகி அம்மன் ஆலயத்தில் தாந்தாமலையில் இருந்து ஆலய அமைப்பு வேலைகளுக்காக கொண்டுவரப்பட்டு அமைக்கப் பட்டுள்ள கருங்கற்கள், மற்றும் மகிழடித்தீவு கண்ணகி அம்மன் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட அம்மிகுழவி, ஓட்டுச்சிதைவுகள் போன்ற பொருட்களை ஆராய்ந்த தில் பல நூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட மிகப்பழமையான பிராமி தமிழ் எழுத்துக்கள் அவற்றில் எழுதப்பட்டுள்ளன இதனை தகை சார் பேராசிரியர், வரலாற்றுத் துறை பேராதனைப் பல்கலைக் கழகம், வேந்தர், யாழ்பல்கலைக்கழகம் கலா நிதிசி.பத்மநாதன் உறுதிப்படுத்தியுள்ளார் இது தொடர்பாக அவர் குறிப்பிடுகையில் இங்குகண்ணகி அம்மன் ஆலயத்திற்கு

**வயிரமுத்து துசாந்தன்**

முனைக்காடு



முன்பாக உள்ள கருங்கல்லில் தமிழ் பிராமி எழுத்துக்களால் எழுதப்பட்ட தமிழ் சொற்கள் குறிப்பாக நாகமன்னர்களின் பட்டப்பெயர்கள் காணப்படுகின்றன.

அதே போன்று மகிழடித்தீவு பிள்ளையார் ஆலயமண்டபத்தின் முகப்பில் சோபனத்தோடு கூடிய படிகளாகவைக்கப்பட்டுள்ள கற்கள் பலவற்றை ஆராய்ந்ததில் எல்லாமாக நான்கு நிரையான படிகளும் முதல் இரண்டு படிகளுக்கு இடையே சதுரமான கல்லிலே குடம் போன்றவடிவம் குழிவாக வெட்டப்பட்ட உருவமும் காணப்படுகின்றது. எல்லாவற்றிலும் நாகமன்னர்களது பெயர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு தாந்தாமலையில் 2000ம் ஆண்டுகளுக்கு முன்பு நாகர்கள் குறுநிலமன்னர்களாக வேள் என்ற பட்டம் பெற்று ஆட்சி புரிந்தனர் என்பதை நாம் தெளிவாக அறியக் கூடியதாகவுள்ளது.

அதேபோன்று மகிழடித்தீவுகண்ணகி அம்மன் ஆலயத்திற்கு முன்புறத்தில் கிடைத்த பொருட்கள் அம்மி குழவி, சிதைந்த ஓடுகள் என்பனவாகும். அதிலே குழவிநன்றாக செதுக்கப்பட்டு கைப்பிடிபக்கங்களில் பெயர்கள் எழுதப்பட் டுள்ளன அதேபோன்று குழவியின் எல்லாப் பாகங்களிலும் பெயர்கள் எழுதப் பட்டுள்ளன. அம்மி இரண்டு தளஅமைப்பாக ஒரேகல்லிலே பொழியப்பட்டுள்ளது. அடிப்பாகம் நீள் சதுர அமைப்புக்கொண்டது. மேல்பாகம் இப்பொழுது வழக்கத்தில் உள்ள அம்மிகளை போன்றது. அது தற்பொழுதும் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளது. அம்மியினுடைய எல்லாப் பாகங்களிலும் தமிழ் பிராமிஎழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

இதுவரை 30க்கும் மேலானதலங்களில் தமிழ் பிராமிவரிவடிவங்களில் எழுதப்பட்டதமிழ் சொற்கள் அடங்கிய பலஉபகரணங்களை பாவனைப் பொருட்களை பார்த்துள்ளோம் முதல் முதலாக இங்குதான் அம்மியும் குழவியும் கிடைத்துள்ளன. இதில் அம்மியும் குழவியும் இருந்த இடத்திலிருந்து ஏழுகலர் ஓடுகளைஎடுத்திருக்கின்றார்கள் அவைவெவ் வேறு விதமானவை மூன்று கரிய நிறத்திலான ஓடுகள் இரண்டு கரிய செம்மண்பாண்டங்களை யுடைய ஓடுகள் இரண்டு செம்மண்பாட்டங்க ளினுடைய துண்டுகள். இவை எல்லாவற்றிலும் சொற்கள் பிராமி வரிவடிவங்களில் எழுதப்பட் டுள்ள அவற்றில் உள்ள வரிவடிவ எழுத்துக் களும் அம்மியில் உள்ள வரிவடிவங்களும் ஒன்றா னவை ஒரே காலத்துக்குரியவை என்று கூற முடியும்.

அம்மி குழவி என்பவற்றில் உள்ளதை போல இவற்றிலும் வேள்நாகன், நாகன் மகன் கண்ணன் என்றவாறுபட்டங்கள் எழுதப் பட்டுள்ளன. எனவே மகிழடித்தீவிலும் கொக் கட்டிச்சோலையிலும் பிற்காலத்தில் இருந்த வன்னிமைகளை போல அக்காலத்தில் நாகரின் சிற்றரசு இருந்தது என்றும் அல்லது அவர்களது சிற்றரசு ஒன்றில் கொக்கட்டிச்சோலை அடங்கி இருந்தது என்றும் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இவை எல்லாமே கிறிஸ்துவுக்கு முற்பட்டகாலத்துக்கு முதல் இரண்டு நூற்றாண்டு காலத்து எழுத்துக்களை கொண்டுதான் எழுதப் பட்டுள்ளது. இவை எல்லாம் 2000ஆண்டுகளுக்கு முற்பட்டவை என உறுதியாக கூறமுடியும்.

# எமது படுவான்கரை பெருநிலமே

அம்பளாந்துறையூர் அரியம்

தமிழினத்தின் தனித்துவத்தை காக்கும் நிலம்
தன்மானப் பண்புகளை போற்றும் வளம்
தடைவரினும் தாண்டி வெற்றிபெறும் சனம்
நடைமுறைகள் தவறாத மக்கள் பலம்
நாளாந்தம் உபசரிக்கும் நல்ல மனம்
படுவான்கரை பெருநிலத்தில் காணலாம் தினம்
முன்னோர்கள் வாழ்ந்து முறையாய் ஆட்சி செய்த
முத்தமிழும் வளர்ந்திடும் மூதாதையர் பூமி இது
எத்திசையும் இல்லை குறை ஏர்பிடிக்கும் கைகள்
தேரோட்டம் காணும் சிவனார் திருத்தலம்
தாந்தாமலைமுருகன் நாகதம்பிரான் ஆலயம்
தேசத்து கோயில்களும் வாசத்தை காட்டும்
கிழக்கின் ஒளிக்கதிர்கள் மேற்கில் சிரிக்கும்
கமம் செய்வயல்களெல்லாம் கண்டு மகிழும்
உழவர் பரம்பரையின் உறுதியும் உயரும்
உலகிற்கும் உண்மை வரலாறு காட்டும்
ஊரெல்லாம் உழைப்பால் உயரும்
மேட்டுக்காணிகளும் சேனைப்பயிர்களால்
வாட்டமின்றி வடிவு தனை நீட்டும்
மாட்டுப்பட்டிகளும் காட்டுமிருகங்களும்
காணலாம் பறவை கூட்டமும் இங்கே
பாலும் தயிரும் தேனும் பருகிட வாயூறும்
பழங்களும் பசுமை வயல்களும் பார்த்திடலாம்
பாரம்பரியமுடன் பண்பாட்டை மதிக்கும் மக்கள்
வீரமுடன் விவேகத்தில் உயர்ந்த தலைமுறைகள்
மட்டக்களப்பு மரபுவழிக் கலைகளுடனும்
மண்வாசனையை தொடடுநிற்கும் சமூகம்
கண்ணை சிமிட்டும் வண்ணக் காட்சிகளும்



கண்ணா ஓரத்து வாவியில் இறால்வளமும்
கடுக்காமுனை குளத்தில் நன்னீர் மீன்களும்
கலகலப்பான பட்டிப்பளைப் பிரதேசம்
கல்வியிலும் உயர்வு கண்டு மகிழ்கிறதே
எவ்வகையிலும் இங்கு எல்லாம் சிறப்பாகும்.
எமது படுவான்கரை பெருநிலமே.



# கொஞ்சம் உதவுங்கள்

ஏதோ படபடப்பு...
ஏதோ மன உளைச்சல்...
ஏதோ மாய உணர்வு....


அம்மா ஒருபுறம் அப்பா மறுபுறம்
முடி... முடி.... என முடுக்கினார்கள்
எனக்கு படி.... படி.... என தோன்றியது

16வயது பருவம் வரவில்லை
16 பெற்று பெருவாழ்வு வாழப் போகட்டாம்
16 வருடம் படித்த படிப்பு
முடிக்க ரெண்டு இல்ல மூணு வருசம்
முடிச்சித்து முடிக்க விடுங்க
இது ஒரு பள்ளி மாணவியின் பரிதாபக் கதை
பரிதாபம் பார்க்க வேண்டிய பாலகியின்
காவலர்கள் படுகுழியில் தள்ளுகிறார்கள்
பாவம் இவர்கள் 16இல் மனைவியாக
18ல் அம்மாவாக....
20ல் அம்மாவாக...
22ல் அம்மாவாக...
வேற என்னவாக முடியும்
25இல்தோற்றத்தில் அம்மம்மாவாக முடியும்...
பெற்றோரின் அலட்சியத்தால்
வழிதவறும் பாலகர்கள்
சிறுவயதில் குடும்ப சுமை தாங்கிகள்
நான் செல்லும் வழியில்
ஒரு முகத்தை காலையில் காண்பேன்
குனிந்த தலை நிமிராது
கொண்ட பணிக்காக நீண்ட தூரம்
பயணம் செய்யும் குமுறும் மனம்
கொண்ட குழந்தை அவன்
படிக்கவேண்டும் என நினைத்திருப்பான்

இண்டைக்கு மட்டும் அப்பாவோட
போ... நாளைக்கு பள்ளிக்குப் போ...
அம்மாவின் பாசத்தால் கட்டுண்டு
வாழ்வை அழித்துவரும் மெழுகு அவன்
குடும்பச் சுமையைத் தாங்கி
பள்ளி சுமையாகி விட்டது பாடம் மறந்து விட்டது
தன்வயது பாலகர்கள் தூரம் போய்விட்டார்கள்
காப்பாற்ற காவலர்கள் வரவேண்டும்
வழி சொல்லி விலகாமல்
பழிதன்னை நீக்க வேண்டும்
பாலகர்கள் வாழ்வில் தீப ஒளி ஏற்றவேண்டும்
எம்படுவானில் இடம் பெறும்
பரிதாபச் செயல்களா! படுபாதகச் செயல்களா!
எம் இனம் உயிர்ப்பில்லாமல்
இருக்க கால் கோலுகிறது
படுவான்கரை என்றால் பல்காட்டும்
பலரிடம் இது பல்காட்டும்
மண்ணல்ல பண்பாடு மாறாத
பால் மணம் குறையாத
செந்நெல்லும் தேன் கரும்பும் துள்ளி வரும்
மீனினமும் தூய காற்றும்
நிரம்பி வழிகின்ற சொர்க்கபூமி
தான்தோன்றி அப்பர் அருள்
தாராளமாய்க் கொட்டிக்கிடக்கும் புண்ணியபூமி
என்று கூறிப் பல்லுடைந்து
எம்மண்ணில் இடம் பெறும் பரிதாப, படுபாதக
செயல்களைத் தட்டிக் கேட்கும் படைகளாக
தட்டிக் கேட்பார்கள் எனும் நிலைகளாக
உருவாக வேண்டும் – இவற்றை
உயிர்ப்பிக்க வேண்டும் எல்லோரும் உதவ வேண்டும்....
கொஞ்சம் உதவுங்கள்....

**சோலையூரான் ஆ.தனுஷ்கரன்**
கொக்கட்டிச்சோலை

# இவன்



அமேசான் காட்டைப்போல்
பசுமையானது இவன் எண்ணம்
ஆயிரம் நதிகள்
இவன் குழந்தைகளாக
குறிப்பெடுத்துக்கொண்டு
குவலயத்தை ஆழ
நைல் நதியாய்
நீண்ட பயணத்தில்

இவன் மண்மீது
கொண்ட காதல்
அற்புதமானது!
புனித கங்கையைப் போல்
பிறைசூடன் எடுத்த
அர்த்த நாரீஸ்வரனாய்
இரண்டறக்கலந்து விட்டது

கோபத்தில்
மானுடம் கூட பொசுங்கும்
சுட்டெரிக்கும் சஹாராவின்
அனல் கூட இவனிடம்தான்
கடன் வேண்டும் இவன்
கோபத்தில் ஒரு துளியை

இவன்
கங்கையைப் போல
புனிதமானவன்
பலைவனத்தின் கஃபா
இவனுக்கு கதவுகள் திறக்கும்
கலிமாக்கள் இவனுக்குத்
துணையாய் சாமரம் வீச
இமயமலை கூட எழுந்து நிற்கும்
இவன் உறுதி கண்டு

அணைத்துக் கொள்கிறான்
தாய்மையின் காந்தமாய்
தன்னை நம்பியவர்களை
இதயம் உடைந்து
இயலாதென்றவர்களெல்லாம்
எழுந்து நிற்கிறார்கள்
இவன் ஆற்றல் கண்டு

இவன் முல்லைக்குத்
தேர் கொடுக்கவில்லை
தன்னையே கொடுத்தவன்
காய்த்துக் கனியாகி
விதையாகிப் போன பெருவிருட்சமிவன்

மரணம்
பீக்ஷ்மரைக் கூட விடவில்லை
அந்த மரணம் கூட
ஓடி விட்டது மனு நீதி
கொண்ட மகத்தான
மனிதனுக்காய்....

பேர்மியுடா முக்கோணமாய்
புதிராய்ப் போனது
இவன் மரணம்
நாசாவின் சட்லைட் கூட
நம்ப மறுக்கின்றது
மரணதூதன் வரவில்லை
அப்படியிருக்கையில்?

ஒரு வேளை
ஆழ்கடல் முத்துக்களுக்குத்
தெரிந்திருக்கலாம்
அவ்வழியால் சென்ற சுறாக்கள் பற்றி.

-குணரெத்தினம் உமாறமணன்,
அம்பிளாந்துறை-



அன்புக்கு அரசியாய் வந்து மண்ணில்
அறிவுக் கொழுந்தாய் உதித்து
அற்புதப் பிறவியே என் உயிர் நீ
ஆனந்தத்துடன் போற்றுவேன் உன்னை.

இறைவனின் இறையருளில் ஒரு கண்ணாய்
இன்பம் எனும் ஆற்றில் முழ்கி
பெறுடையுடனே இவ்வுலகில்
பெற்றெடுத்தாய் என்னை வெண்தரளம் போல்
வேறொன்றும் வேணாம் உன்னைத்தவிர....

எழுத்தறியா என்னை எழுத்தறிவித்து நீ
எண்ணியபடி என்னை உருவாக்கி
நான் விம்முற உன்னை -நீ
உரம் போல் அர்ப்பணித்தாய் உன்னை தவிர...
என்ன வேண்டும் இவ்வுலகில்

காலையும் மாலையும் நான் வணங்க
கடவுள் வேண்டாம் நீ போதும் எனக்கு
உன் அன்புப் பாதையில் கைகோர்த்துச் செல்ல
உன் கரம் பற்ற நீ போதும் எனக்கு

மனை வேண்டாம் நான் வாழ - உன்
மகிழ்ச்சி ஒன்றே போதும்
கெம்பஸ் பூங்காவில் ஆயிரம் பூக்களால்
நானொரு அதிசயம் பூவாய் பூத்து
நாளை உலக சாதனைப்
புத்தகத்தில் என் பெயரும் எழுதப்பட்டதும்
பூவே உன்னை நான் வடிக்க வைப்பேன்
ஆனந்தக் கண்ணீர் முத்துக்களை

தோழனும் நீயே என் ஆருயிர் தோழியும் நீயே
அறிவுள்ள ஆசானும் நீயே
நான் துதிக்கும் அரனாரும் நீயே
அன்னையும் நீயே பிதாவும் நீயே
வேறொன்றும் வேண்டாம்
உன்னைத்தவிர....

**பத்மநாதன் ஸோபனா**
அம்பிளாந்துறை - மேற்கு
கொக்கட்டிச்சோலை
கலைப்பூக்கள் கழகம்

# வேறொன்றும் வேண்டாம் உன்னைத்தவிர



# சிறுமி விதவையானாள்

**க.சிவகுருநாதன்**
கிராம உத்தியோகத்தர், முதலைக்குடா.

கஸ்ரப்பட்ட குடும்பத்தில்
கடைக்குட்டியா நான் பொறந்தன்
பேரெல்லாம் வச்சி
ஊரெல்லாம் கூட்டி
ஒருவயது கொண்டாடி
மருந்துபோல் நல்ல
விருந்தெல்லாம் கொடுத்ததை
மற்றாக்கள் சொல்ல
மனசெல்லாம் பூரிப்பு!

அப்பாவோ கூலிக்கு
தப்பாமல் போவாரு
கொண்டுவாற காச
கொஞ்சத்த எடுத்துத்து
மிச்சத்தக் கொடுப்பாரு
என்னோட சேர்த்து
ஏழுபேர் குடும்பத்தில்
அண்ணாக்கள் மூன்றுபேரும்
அவனவனுக்கு ஸ்ரப்பட்ட
ஒருத்திக்கு வாழ்க்கப்பட்டு
உருப்படியா படிக்காது
பதினேழு பதினெட்டு
வயசோட போனாலும்

அப்பாவும் அம்மாவும்
ஏனெண்டும் கேக்கல்ல!

போலிக்குக்கூட பொய்யா ஏசல்ல
காரணம்
அப்பா படிக்கல்ல
அம்மா படிச்சது அவருக்குப்
புடிக்கல்ல அவங்கட வயசில!

என்னதான் இருந்தாலும்
எனகெண்டு
ஒரு அக்கா
அவளும் நானும்
குடும்பதின் நிலையை எண்ணி –மன
குமுறல்கள் இருந்தாலும்
படிக்கணும் படிச்சி
கிராமத்தில் நல்ல இடம் பிடிக்கணும்
என்று தொடர்ந்து படிச்சம்!

நான் தரம் எட்டு படிக்கும் போது
அக்கா தரம் பத்து படிச்சாவு

ஒரு நாள் போதையில் வந்த
என்ட பொல்லாத அப்பன்
அக்காவைப் பார்த்து
படிச்சது காணும் - நீ
பள்ளிக்குப் போறல்ல
வாற கிழம
வரதண்ட மகனுக்கும்
உனக்கும் கலியாணம்
என்று வாய்கூசாமச் சொன்னாரு
அக்காவின் அடம்பிடிப்பு
அவருக்குப் பிடிக்கல்ல!

பலதடவை அக்காவும் நானும்
பதிலக்குப் பேசினம் - அக்காக்குப்
பதினாறு வயசுதானே
இன்னம் இரண்டு வருசம்
முடியட்டும் அப்பா
இளவயசுத் திருமணத்திற்கு
இலங்கைச் சட்டத்தில் இடமில்ல
பொறுத்திருந்து கொஞ்சம்
அக்கா படிச்சு முடிச்சதும்
பலருக்கும் சொல்லி
சிறப்புச் செய்வமெண்டு!

சட்டம் என்ன சட்டம்
எவன் போட்ட சட்டம்
வாறதப் பாப்பம்
எண்ட புள்ளக்கி நான்
என்னவும் செய்வன்
இப்படியெல்லம் அவருக்கிருந்த
அறியாமை சீறியது.

அப்பா சத்தம் கேட்டா
அம்மா வாய் தொறக்கமாட்டாவு
பிழையெண்டாலும் அவர் பக்கம்
சரியெண்டு சொல்லுவாவு.
தாய் தகப்பன் பேச்சை



மீறக்கூடா என்று
சறுக்கலா பதில் கூறி
சமாளிதது விடுவாவு!

இதையெல்லாம் மீறி
எதை நாங்க சொன்னாலும்
அதையெல்லாம் அவங்க
கணக்கில எடுக்கல
ஊராக்கள் சிலரும்
உபதேசம் சொன்னாங்க
படிக்கட்டும் பிள்ளெண்டு.

குடிச்சித்த வந்து
அவங்களுக்கம் கொம்புவாரு.


தலைவிதியோ என்று
தயக்கத்தோடு இருந்தாள்
தடபுடலா கலியாண ஏற்பாடு நடந்தது
வேண்டாம் வேண்டாம் என்று
வெறுப்போடு கத்தினாள்.
ஏண்டி எனக் கேட்டு
அம்மா போய் அருகில் உள்ள

கிணற்றில் குதிச்சாவு
அப்பாவோ விசமருந்த
விடாப்பிடியா நிண்டாரு.
அவர்களின் உயிர் காக்க
வேறுவழி எதுவும் தெரியாமல்
அக்கா சம்மதிக்க
கலியாணம் நடந்தது.

பதினாறு வயசால பதிவு
வைக்க முடியல்ல
இரு வீட்டார் விருந்தோட
கலியாணம் முடிந்நது!

அதிபரும் சேர்மாரும்
விசயத்தை அறிந்து
அசந்து போய் நிண்டாங்க
நல்லாப்படிச்ச பிள்ளைக்கு
ஏன் இப்படிச் செய்தீங்க என்று.
எரிச்சல் பட்டு நொந்தாங்க!

கலியாணம் முடிச்சி
ஒன்பது மாதம் வாழ்க்கை ஓடிச்சி
அப்போது அக்காவுக்கு வயிற்றுல
எட்டுமாசக் குழந்தை.
தொழில் இல்லை என்று என் மச்சான்
அக்காட புருசன் கணேசன்
வெளிநாடு சென்றான்.
போனவர் ஒன்றரை மாதத்தால்
மாடியில் இருந்து கீழே விழுந்து
மரணமானதாக மற்றொரு பொடியன்
போனில் சொன்னான்.
இதுவா அக்காட வாழ்க்கை என்று
எரிச்சலோட அம்மாவையும்
அப்பாவையும் கேட்டுப் புலம்பினேன்
ஊரெல்லாம் ஒரு விதமான பேச்சு
கண்ட கண்ட மாதிரி கதைக்கத்
தொடங்கினாங்க



இருபதாம் நாள் சடலம் வீட்டிற்கு
வந்து இறங்கித்து
கத்திக் குளறி கடமையெல்லாம்
முடிச்சாங்க
படிக்க வேண்டிய என் அக்கா
பால்குடிக்கும் ஒருமாதக் குழந்தையோடு
கதறி அழுதாவு.

படிப்பெண்டா என்னெண்டு தெரியாத
என்னப்பன் அம்மா செய்த
இந்தப் பாவவினை
அக்காவ விதவையாக்கி
அவள் மகனை அனாதையாக்கித்து!
அக்காவைப் போல அவள் தங்கை
எனக்கென்ன கெதியோ என்று
இப்பவே யோசிக்கிறன்.

படித்த பண்புள்ள சமூகமே
என் அப்பாவைப் போல
அம்மாவைப்போல
மொக்குத்தனமாக
முடிவு எடுக்காம
கற்கும் காலத்த
கரைசேர்க்க முயற்சிப்போம்.

தனத்த தனத்த தன தன
தனத்த தனத்த தன தன

துள்ளித் துள்ளி ஓடுவோம்
மெல்ல மெல்ல ஆடுவோம்
காடு எல்லாம் சுற்றுவோம்
காட்சி எல்லாம் இரசிப்போம்
(தனத்த தனத்த)

எம் மேனியெல்லாம் புள்ளியே - அங்கே
மேகம் எல்லாம் அழகு வண்ணம்
பச்சை வெளிகள் செழிக்குதே - இங்கே
பறவை இனங்கள் ஒலிக்குதே
(தனத்த தனத்த)

முதிரை தேக்கு இருக்குதே - இங்கே
சந்தன மரம் மணக்குதே
பெரிய சிறிய மரங்களெல்லாம் - இங்கே
காய் கனிகள் தொங்குதே....
(தனத்த தனத்த)
(துள்ளித் துள்ளி)

# மான்
## சிறுவர்பாடல்





# இரவில் ஆகாயம்
## சிறுவர்பாடல்


வான்வெளியைப் பாருங்கள் - அதன்
வடிவழகைப் பாருங்கள்
தங்கம் போல மின்னுதே - அங்கே
நட்சத்திரங்கள் சிரிக்குதே.

வட்ட நிலா ஜொலிக்குதே - அங்கே
வான் பரப்பு வெளிக்குதே
உடுத்தொகுதி தெரியுதே - அதன்
உருவங்களும் புரியுதே
(வான்வெளி)

அதிசயமாய் தெரியுதே - நிலா
ஆனந்தமாய் இருக்குதே...
மெல்ல மெல்ல நகருதே - நிலா
மெல்லொளியும் பரப்புதே...
(வான்வெளி)

**அழகு தனு**
ஆசிரியர் (அ.தனுராஜ்) அம்பிளாந்துறை.

# உருத்திரபெருமான் (சிவன்)



## காவியம்

1. அரி அயனும் சிவனுமுமைகணபதியுமறுமுகனும்
அழகான லெட்சுமியும் அன்னை சரஸ்வதியும்
பெரிய தவமுனி இருஷி இந்திரரும் தேவர்களும்
பெருமை செறிநாரதரும் பெரியோருமாக
உரியதொரு உருத்திர சுவாமிமேல் பாமாலை
உண்மையாய் ஓதுதற்கே மன நினைந்தேன்
கரிய நிற விகடதட ஐங்கரக் கடவுளைக்
கனவிலும் நினைவிலும் நான் மறவேன்

2. அன்னை சிவமுத்துமாரியுடனாடும் ஏடும்
ஆதிவயிரவராக வருபவரும் நீயே
உன்னை நாம் பணியவே ஓடோடி வருவோம்
உண்மையாய் வரங்கள் நீ தந்தருள வேண்டும்
அன்னை நிழல் தன்னிலே மாரியுடனாடிப்
பூலோகம் தளைக்கவே வறுமை தீர்ப்பவளே
அண்ணலே மின்னலே எமையாள வந்த
ஆதியே சோதியே அகில நாரணரே.

3. ஆதியாய் உலகிலே அவதரித்தவரே
அண்டபகிரெண்டமும் நிறைந்த மெய்பொருளே
சோதியாய் நின்றுமே மூவுலகோர்க்கும்
சிவராத்திரி தன்னை ஆக்கினீரலவோ
வேதியர்கள் விரும்பிட வரங்கள்தந்தருளும்
விமலனே குலவு சடை நிலவுபுனைவோனே
வேதனைகள் வராமல் நீ கிருபை புரிவாய்
மேவரிய தில்லை வாழ் ஆடல் நாயகனே.

திரு.மா.பா.நல்லதம்பி
முனைக்காடு

4. இராவணனுக்கு வரம் கொடுத்தவரும் நீயே
இசை கேட்டு அவனுக்கு இரங்கியதும் நீயே
முனிவர்களுக்கே அதிக வரங்கள் கொடுத்தருளும்
முக்கண்ணரே உமது திருவடிகள் சரணம்
நிலையான கொக்கட்டிச்சோலை தனிலுறையும்
நிசமான தான்தோன்றியிசுரரும் நீயே
அலையான கடல் தனிலே மகர மீனதனை
அன்றுமே பிடித்திழுத் தெறிந்தவரே சரணம்

5. தில்லைதனிலே நடனமாடி நிற்பவரே
சிதம்பரத்தில் காட்சி தந்து நிற்பவரே
சொல்லவொண்ணாத் துயர் தீர்த்து வைப்பவரே
சூட்சாதி சூட்சமுறு சுந்தரரும் நீயே
இப் புவியிலென்று மெமை ஆள்பவரும் நீயே
ஏகமுறு நவகோண தற்பரரும் நீயே
எல்லையில்லாச் சுடலை காப்பவரும் நீயே
ஓம் நமசிவாயனாய் உள்ளவரும் நீயே

6. ஒளியினுள் ஒளியாகி ஓங்காரமாகி
உலகிலே துன்பவினை ஓட அருள் புரிவாய்
பழியாகி மாரியுடன் வாதாடி நின்று
பாங்காக முத்துவகை தானது உகந்தாய்
அழியாத சடாட்சரம் தன்னிலுருவாகி
ஆண்டவனாகவே அனைவோர்க்கும் வந்து
வெளியான நஞ்சதனை உட்கொண்ட தேவ
தயாபரப் பொருளானமயான உருத்திரரே

7. பிட்டுக்கு மண்ணைச் சுமந்தவரும் நீயே
பாண்டியன் பிரம்பாலே அடிபட்ட நாயகனும் நீயே
வாதிட்டுச் சுந்தரரை ஆட்கொண்ட நீயே
வளர்மதியைச் சடையில் அணிபவரும் நீயே
சட்டென்று சமணரை அடக்கியவர் நீயே
சடுதியில் அப்பர் நோய் தீர்த்தவரும் நீயே
இட்டமுடன் எங்கள் பிணி தீரவருள்புரிவாய்
ஈசுபரரே ஆதி உருத்திரப் பெருமானே.

8. நடராசராய்க் காட்சி தந்து நிற்பவரே
நாயன்மாரை ஆட்சி செய்த பெருமானே
இடமான சுடலையில் ஆட வருவாயே
இரப்போர்க்கு என்றென்றும் ஈந்தருள் செய்வாயே
மகமாரி திரிசூலியுடனாடி வருவாய்
தொழுவோர்கள் பிணி தீர வருவோர் நீரல்லோ
திட்டமாகக் கொக்கட்டிச்சோலை தனிலுறையும்
நிசமான தான்தோன்றீசுரரும் நீயே

9. நாரைக்கு முத்தி கொடுத்தவரும் நீயே
நாலுமறை ஆகம புராணமும் நீயே
நாகமதைக் கழுத்தில் அணிபவரும் நீயே
நாத சிந்து வேத நாயகனும் நீயே
தருமிக்குப் பொற்கிளி அளித்தவரும் நீயே - கீரன்
தமிழோடு விளையாட வந்த வரும் நீயே
பாரிலே மக்கள் மனைகாக்கும் உருத்திரா
பார்வதி வலமுறை பராபரப் பொருளோ

10. கல்லு மாட்டைப் புல்லுத் தின்ன வைத்தாயே
காத்திடச் சொல்பவரைக் காத்துவைப்பாயே
சொல்லுக்குச் சொல்லான நமசிவாயத்தைச்
சிந்தித்திருப்போரைச் சீக்கிரம் ஆள்வாய்
வில்லுக்கு விஜயனும் அருச்சுனன் தனக்கு
வேல் போன்ற பாசுபதம்தனைக் கொடுத்தவரே
அல்லலுறும் மானிடரின் அவலநிலை தீர்ப்பாய்
ஆதியே சோதியே தான்தோன்றிலிங்கமே!

11. வேயுறு தோழி பங்கனும் நீயே
வினை தீர்த்து ஆட்கொள்ளும் தலைவனும் நீயே
பாதரிதரித்த பரநாதனும் நீயே
பசுபதி எனப் பெயர் கொண்டவரும் நீயே
ஏறிட்ட பார்வைகள் உள்ளவரும் நீயே
எண்கோடி உருத்திரரானவரும் நீயே
நம்பியாண்டார் நம்பி தன்னை உண்டாக்கி
உன் நற்பாடல்களைத் தொகுத்துத்தந்த பெருமானே.

12. கெங்கையைச் சடையில் அணிந்தவரும் நீயே
கைலாய பதியனாய் உள்ளவரும் நீயே
பித்தன் எனப் பெயர் கொண்டவரும் நீயே
பிறைபாம்பைச் சூடி இருப்பவரும் நீயே
பங்கயம் போல் ஒளி வீசுபவரும் நீயே
பைந்தமிழில் ஆர்வம் மிக்கவரும் நீயே
குறுமுனிக்கே வரமளித்தவரும் நீயே
செல்வம் குறையாமல் கொடுக்கின்ற
கொடை வள்ளல் நீயே

13. வெள்ளை எருதேறுவாய் ஓம் நமசிவாயம்
வினை தீர்த்து ஆட்கொள்வாய் ஓம் நமசிவாயம்
தெள்ளு தமிழ் திரிசூலா ஓம் நமசிவாயம்
தேவர்களின் தலைவனே ஓம் நமசிவாயம்
கெங்கைச் சடையனே ஓம் நமசிவாயம்
உண்மை தரும் நாயகனே ஓம் நமசிவாயம்
உருத்திரப் பெருமானே ஓம் நமசிவாயம்

# மார்க்கண்டேயன் (நாடகம்)



## கதாபாத்திரங்கள்

1. மார்க்கண்டேயர்
2. மார்க்கண்டேயரின் தாய்
3. மார்க்கண்டேயரின் தந்தை
4. நாரதர்
5. சிவன்
6. உமை
7. எமன்
8. வம்பன் (வாயு)
9. கும்பன் (கும்பு)

**மு. குணரெத்தினம்** (அதிபர்) அம்பிளாந்துறை

### முதலாம் காட்சி

இடம் - சிவலோகம்

**நாரதர் :** ஓம் நமோ நாராயனா... (பாடலைப் பாடிக்கொண்டே வந்து) சிவலோகத்திற்கு வந்து விட்டேன் இன்று எனக்கு ஒரு வேலையும் இல்லை பூலோகத்தில் நடக்கும் அக்கிரமங்கள் இந்த நல்ல நேரத்தில் சிவ பிரானிடம் கூறி நமது வேலைக்கு அடிக்கல் வைப்போம்.... ஓம் நமசிவாய

### காட்சி - 2

இடம் - சிவலோகம்

**நாரதர்:** (நாரதர் வந்து கொண்டே) ஓம் நமசிவாய

**சிவன் :** என்ன நாரதா சௌக்கியமா

**நாரதர் :** லிங்கேஸ்வரா மகேஸ்வரா கைலாயநாதா நின் திருவடி சரணம் ஐயனே சரணம்

**சிவன் :** சர்வ மங்களம் உண்டாகட்டும் எம் நல்லாசிகள்

**உமை:** என்ன நாரதா உன் திருவிளையாட்டிற்கு இன்று வேறு இடம் கிடைக்கவில்லையா

**நாரதர்:** சிவ சிவா தாயே நான் விளையாடுகின்றேனா எம்மையெல்லாம் ஆட்டுவிக்கும் இறைவன் ஆடும் திருக்கூத்துக்கு யாரும் நிகர். என்ன இருந்தும்?

**சிவன்:** என்ன இருந்தும் என்கிருயே அங்கு தானே ஏதோ இருக்கிறது சொல்லப்பா சொல்.

**உமை:** தயங்காமல் சொல் நாரதா உன் கலகம் நன்மையில் தானே முடியும் பயப்படாதே நான் இருக்கிறேன்.

**நாரதர்:** இல்லை தாயே பூலோகம் மிகவும் கெட்டுவிட்டது அங்கு மனிதர்கள் இறைவனை மதிப்பது குறைந்து கொண்டு வருகின்றது. அதனால் பக்தி குறைந்து பாதகம்

தலை தூக்குகிறது. அதைத்தான் தாங்கள் இருவரும் பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்களே நான் சொல்லியா தெரியவேண்டும்.

**சிவன்:** நாரதா நானும் அது பற்றித்தான் எண்ணம் பூண்டுள்ளேன் உன் கவலை நீங்கும்

**உமை:** சுவாமி என்ன செய்வதாக முடிவெடுத்துள்ளீர்கள்

**சிவன்:** உமா பூலோகத்தில் நம்மையே நினைத்து வழிபடும் ஒரு குடும்பத்திற்கு பிள்ளை பாக்கியம் இல்லை அவர்களுக்கு பிள்ளைப்பாக்கியம் கொடுத்து அவன் மூலம் இந்தப் பூலோகத்திற்கு ஒரு படிப்பினையை ஊட்டுகிறேன் சரிதானே நாரதா.

**நாரதர்:** சிவ சிவா உங்கள் திருவருள் அதுவாயின் மாற்றயாரால் முடியும் வருகிறேன். சிவாயநம

## காட்சி - 3

இடம் :- பூலோகம்

**அந்தணர்:** எம் பெருமானே என் பூசையை நீ ஏற்கலையா ஊரார்கள் சொல்கிறார்களே நீ தந்திருந்தால் எனக்கு பிள்ளை பாக்கியம் கிடைத்திருக்கும்... என்று.... நான் என்ன தவறு செய்தேன் இறைவா (அழுதல்)

**மனைவி :** நாதா நீங்கள் அழுதால் என்னால் எவ்வாறு தாங்க முடியும் இறைவன் நிச்சயம் அருள் புரிவான் நீங்கள் கோயிலுக்கு சென்று பூசை செய்துவிட்டு வாருங்கள் நேரமாகின்றது.

**அந்தணர்:** சரி சரி எல்லாம் அவன் செயல் நான் கோயிலுக்குப் போகின்றேன்.

(திரைமறைவில் பூசை செய்தல்)

## காட்சி - 4

இடம் :- அந்தணர் வீடு

**மனைவி :** சுவாமி தங்களுடன் யாரோ வந்ததுபோல் தெரிந்ததே யார்!

**அந்தணர் :** இன்றும் ஒ சிவனடியாரை நம் இல்லத்துக்கு அழைத்து வந்துள்ளேன் உணவு தயாராகிவிட்டதா

**மனைவி:** எல்லாம் தயாராகிவிட்டது சாப்பாட்டிற்கு அழைத்து வாருங்கள் உள்ளே

**அந்தணர்:** சுவாமி வாருங்கள் உணவு அருந்தலாம்

(எல்லோரும் உணவு அருந்த இருக்கிறார்கள்)

**சிவனடியார்:** மகனே உன் வதனம் வாடி இருக்கிறதே ஏதோ ஒரு பெரும்குறை உன்னை வாட்டுகிறது சொல்வாயா

**மனைவி:** சுவாமி என்முகத்தில் சந்தோசம் மிகுதி நீங்கள் அமுது செய்தருளுங்கள் நான் ஏதும் குறை செய்திருந்தால் மன்னியுங்கள்.

**சிவனடியார்**: இல்லை உன் குறையை என்னால் தீர்க்க முடியுமாயின் தீர்ப்பேன் சொல் இல்லையேல் நான் இப்படியே சென்று விடுவேன்.

**அந்தணர் :-** சுவாமி உங்கள் சித்தம் எங்கள் பாக்கியம் எங்களுக்கு என்ன குறை பிள்ளை இல்லாத குறை மட்டுமே உண்டு என்ன செய்ய இறைவா திருவருள் செய்வான் சுவாமி.

**மனைவி :** முதலில் அமுது செய்தருளுங்கள்.

**சிவனடியார்:** (கையைப் பார்த்து விட்டு) பெண்ணே உனக்கு நீ வேண்டிக்கொள் உனக்கு ஒரு புத்திர பாக்கியம் உண்டு ஆனால் அவன் 16 வயதில் உன்னை விட்டு பிரிந்து விடுவான். இதோ இந்தத் திருநீற்றை நித்திரை செய்யும் போது சாத்திக்கொள்.

**மனைவி :** சுவாமி 16 வயதில் இறக்கும் குழந்தை பிறந்து என்ன பிறக்காமல் விட்டுத்தான் என்ன எல்லாம் அவன் செயல்

## மார்க்கண்டேயர் நாடகம்

### காட்சி - 1

இடம் – ஆச்சிரமம்

**ரிசி :** சீடர்களே நேற்று நான் சொல்லித்தந்த வாக்கியங்கள் யாவும் மனனம் செய்துவிட்டீர்களா

**வம்பன் :** ஆம் பிரபு நான் எல்லாம் பாடம் செய்துவிட்டேன் கும்பன்தான் இன்றும் பாடமாக்கவில்லை

**ரிசி :** என்ன கும்பு இவன் சொல்வது சரியா

**கும்பன் :** பிரபு இவனுக்கு எப்போதும் என்மீது பொறாமை நான் எல்லாம் பாடமாக்கிவிட்டேன்.

**வம்பன் :** அப்படின்னா சொல்லச் சொல்லுங்கள் பார்க்கலாம்

**ரிசி :** சரி கும்பு நீ சொல் பார்க்கலாம்

**கும்பன் :** சுவாமி அம்மா கத்தரிக்காய் கூட்டு.... இப்படி பல பட்சணங்களை சமைத்துத் தந்தார் சாப்பிட்டேனா நீங்க சொல்லித்தந்த நீதி வாக்கியம் எல்லாம் அதுக்குக்கீழ் பட்டிருக்கும் வெளியே வரமாட்டேங்குது.

**ரிசி :** சபாஸ் நல்ல பிள்ளையடா நீ என்ன வம்பு நீ சொல்

**வம்பு :** அது எப்படி சுவாமி அம்மா... எல்லாம் தந்தால் கோ வயிறாரச் சாப்பிடனா தூக்கம் வருகுதுகோ பிறகு சொல்றன் (அப்போது மாதவி வருதல்)

**மாதவி :** ரிசி புருஸருக்கு என் வணக்கங்கள்

**ரிசி :** அசீர்வாதம் நீ யாரப்பா வந்த காரியம் என்ன

**மாதவி :** சுவாமி நான் தேவலோகத்தின் தூதன் தேவேந்திரன் தாங்களை அழைத்து வரும்படி கட்டளை இட்டார் உடன் எழுந்திருங்கள் சுவாமி

**ரிசி :** ஆகட்டும் நீர் முன்செல்லும் நான் தொடர்கிறேன் வம்பு ஆசிரமத்துள் இருக்கும் அன்னையை அழைத்துவா

**வம்பு :** அம்மா அம்மா (கூப்பிட்ட வண்ணம் செல்லல்) (பின் அம்மா வருதல்)

**மருத்துவதி :** சுவாமி நமஸ்காரம் என்னை அழைத்தது ஏனோ?

**ரிசி :** எழுந்திரு பெண்ணே என்னை உடனே தேவேந்திரன் வரும்படி தூதனுப்பியுள்ளான் நான் உடனே செல்ல வேண்டும்

**மருத்துவதி :** சுவாமி ஏன் திடீர் என்று தேவேந்திரன் அழைத்தான் என்ன காரணம் எனக்குப் பயமாக இருக்கிறது.

**ரிசி :** ஏன் பயம் கொள்ளவேண்டும் ஏதாவது யாகம் செய்யவே அழைத்திருப்பான் நான் சென்று வருகிறேன் நீயும் சிசியர்களும் ஆச்சிரமத்தில் இருங்கள்.

**கும்பன் :** சுவாமி இந்திரலோகத்துப் பலகாரங்களையெல்லாம் வாங்கி வாருங்கள்

**வம்பு :** சுவாமி எனக்கு ஒரு திருநீற்றுப்பையும் தேவர்கள் அணியும் திருநீறும் வாங்கி வாங்கோ

**ரிசி :** நல்லது எல்லாம் வாங்கி வருகிறேன். நல்ல பிள்ளைகளாக ஆச்சிரமத்தில் விளையாடிக்கொண்டிருங்கள்.

## காட்சி - 2

இடம் : - இந்திரலோகம்

**இந்திரன் :** ரிசிகளே தேவர்களே திக்பாலர்களே யாவரும் அமருங்கள் ஊர்வசி உன் நாட்டியத்தைத் தொடங்கு

**வியாசர் :** இந்திரா ஏன் எம்மையெல்லாம் திடீர் என்று இங்கு அழைத்தாய்

**இந்திரன் :** சுவாமி ஒரு விடயத்தில் எனக்கு பெரும் சந்தேகம் நீண்டநாளாகவே உள்ளது அதை நிவர்த்திக்கவே இன்று எல்லோரையும் அழைத்தேன்.

**வியாசர் :** சந்தேகத்தை சொன்னால் தானே சான்றோர் தக்க உபாயம் கூறுவர்.

**இந்திரன் :** சுவாமி பிள்ளையில்லாதவர்களுக்கு சொர்க்கம் இல்லை என்கிறார்களே இதன் தார்ப்பரியம் என்ன?

**வியாசர் :** இந்திரா நீ எடுத்துக்கொண்ட பிரச்சினை மிக முக்கியமானது தான் பிள்ளைப் பாக்கியம் இல்லாதவன் யாராயினும் அவனுக்கு சொர்க்கமில்லை மனிதனாகலாம், மிருகமாகலாம், பறவைகள், ஊர்வன ஏன் தேவர்கள் என்றாலும் பிள்ளை இல்லாவிட்டால் சொர்க்கம் இல்லை இது நமது வேதப்பொருள். அதனால் தான் பிள்ளை இல்லாத வீடு புலிவளர்காடு என்கிறார்கள் முன்னோர் பிள்ளையில்லாத வர்களுக்கு எதிலும் இடமில்லை ஏன் இந்திர சபையிலும் இருக்க அருகதையில்லை.

**இந்திரன் :** சுவாமி பிள்ளை இல்லாதவர்கள் செய்யக்கூடியதுதான் என்ன?

**வியாசர்:** இம்... பரமனை வேண்டி பிள்ளைப்பாக்கியம் பெறவேண்டும்

**இந்திரன் :** நல்லது சந்தேகம் தீர்ந்தது இத்துடன் சபை கலையட்டும் சென்று வாருங்கள் நானும் வருகின்றேன்.

(மிருகண்டு ரிசி சோகத்துடன் பெருமூச்சு விட்டுச் செல்லல்)

## காட்சி - 3

இடம்: - ஆச்சிரமம்

**மிருகண்டு :** என்ன செய்யலாம் பரமன் எனக்கிட்ட விதி இது யாரால் மாற்றமுடியும்

**வம்பன் :** சுவாமி நமஸ்காரம்

**ரிசி :** மங்களம் உண்டாகட்டும் அம்மா சந்தோசமாக இருக்கிறாரா?

**வம்பன் :** இல்லை சுவாமி அம்மா அழுது கொண்டே இருக்கிறாங்க பாவம்.

**ரிசி :** ஏன் அழவேண்டும் என்ன நடந்தது சொல்

**வம்பு :** அதுவா அன்று தேவகன்னிகள் வந்தாங்கோ அம்மா சாப்பாடு போட்டாங்கோ புள்ளையில்லாத வீட்டில் புசிக்கமாட்டோம் என்று போய்ட்டாங்கோ அது மட்டுமா குரத்தி ஒருத்தி வந்து குறிசொன்னாங்கோ அம்மாவுக்கு குழந்தை புறக்கும் என்றாங்கோ

**கும்பு :** (வருதல்) நமஸ்காரம் சுவாமி

**ரிசி :** ஆசீர்வாதம் கும்பு அம்மாவை அழைத்துவா (அம்மா..... தட்டல்)

**மருத்துவதி:** சுவாமி வந்துவிட்டீர்களா நமஸ்காரம்

**ரிசி :** மங்களம் உண்டாகட்டும்

**மருத்துவதி :** சுவாமி தங்கள் வதனம் வாடியிருப்பது ஏன் இந்திர சபையில் ஏதாவது தகராறோ?

**ரிசி :** பெண்ணே (இந்திர சபையில் நடந்ததை கூறல்)

**மருத்துவதி:** சுவாமி இரும் (கதைகூறல்)

**ரிசி :** ஏன் இல்லை நாம் இருவரும் கானகம் சென்று புத்தரரை வேண்டித்தவம் செய்வோம்.

**வம்பு :** அம்மா நாங்களும் வாறேங்க

**கும்பு :** நானும் வாறேங்க

**ரிசி :** சிசியர்கள் நீங்கள் இருவரும் இங்கேயே இருந்து ஒவ்வொரு நாளும் எங்களை வந்து பார்த்துக்கொள்ளுங்கள் பக்கத்தில் உள்ள காட்டில் தான் தவம் செய்வோம்.

**கும்பு :** அது முடியாது நானும் வருவேன்

**வம்பு :** நானும் தான்

**மருத்துவதி :** நாதா சொன்னால் இவர்கள் கேட்டமாட்டார்கள் ஒருநாள் இருந்து பார்த்துவிட்டு ஓடி வந்து விடுவார்கள் சரி போவோம் வாருங்கள்.

## காட்சி - 4

இடம் :- வனம் (காடு)

**ரிசி:** ஓம் நமசிவாய...

**மருத்துவதி :** ஓம் நமசிவாய.....

**வம்பு :** டேய் கும்பு என்னடா அம்மாவும் அப்பாவும் ஒரே நிலையா நிற்கிறாங்க வயிறு பத்துதடா பசியால்

**கும்பு :** எனக்கு தான் பசிக்குதடா

**வம்பு :** டேய் இவங்க இப்படியே நிக்கட்டும் நாம் போய் சமைச்சு சாப்பிடலாம் வாடா

**கும்பு :** எனக்கு சமைக்க தெரியாதடா

**வம்பு :** அதெல்லாம் எனக்குத் தெரியும் வாடா (போகிறார்கள்)

## காட்சி - 5

இடம் :- வனம் (காடு)

**சிவன் :** (சிவன் காட்சி கொடுத்தல்)

ஏ பக்தா மிருகண்டு, மருத்துவதி உங்கள் தலத்திற்கு இறைஞ்சினேன் என்ன வரம் வேண்டும்.

**ரிசி :** பிரபு எங்களுக்கு புத்திர பாக்கியம் வேண்டும்.

**சிவன் :** உங்களுக்கும் அதற்கும் வெகுதூரம் இருப்பினும் தவம் செய்தமையால் அப்பாக்கியம் கிடைக்க

அருள் செய்கிறேன் என்ன குழந்தை வேண்டும் கூறும்

**ரிசி :** மருத்துவதி :- எங்களுக்கு ஆண் குழந்தைதான் வேண்டும்

**சிவன் :** சரி அப்படியாயின் 100 வயது கொண்ட துன் மார்க்கப்பிள்ளை வேண்டுமா 16வயது மட்டும் வாழும் சன் மார்க்கப்பிள்ளை வேண்டுமா.

**ரிசி :** சுவாமி சன் மார்க்ககுணம் கொண்ட 16 வயது மகன் போதும் சுவாமி

**சிவன் :** அப்படியே ஆகட்டும் (மறைதல்)

## காட்சி - 6

இடம்: - ஆச்சிரமம்

**வம்பு :** டேய் கும்பு குருவோட பிள்ளை என்னமா படிக்கிறாண்டா

**கும்பு :** சும்மா போடா படிச்சு என்ன பலன் என்னப்போல சாப்பிடச் சொல்லு பாப்பம்

**வம்பு :** அதுவும் சரிதான் ஆனா இவன் புறந்தவுடன் தான் நமக்கு இந்த வேலையெல்லாம் பூசை பண்ணுவதற்கு அம்மா அப்பாவுக்கு வேலை செய்யட்டும்....

**கும்பு :** அட வாடா சும்மா முணு முணு என்னாம பூசைக்கு நேரமாகுது காத்திருப்பான் மார்க்கண்டன்

(மார்க்கண்டன் பூசை செய்தல்) (பாடல்)

## காட்சி :- 7

இடம் : - ஆச்சிரமம்

**மருத்துவதி :** சுவாமி இன்றுடன் நம் குமாரனுக்கு 16 வயது ஆராம்பமாகின்றதே

**ரிசி :** ஆமாம் பெண்ணே அதைத்தான் நானும் நினைத்து யோசித்துக்கொண்டு இருக்கிறேன்.

**மருத்துவதி :** அன்றே நாம் இதற்கு மாற்றுவழி பரமனிடம் கேட்டு இருக்கலாம் அல்லவா.

**ரிசி:** போன விடயம் பற்றி யோசித்து என்ன பலன் நமது கர்மாவை நாமே அனுபவிக்க வேண்டும். சரிசரி பிள்ளை வரும் நேரமாகிறது நீ போய் நல்ல முறையில் அவனுக்கு சாதம் படை போ....

(மார்க்கண்டேயன் வருதல்)

**மார்க்கண்டேயன் :** ஏன் என்றுமில்லாதவாறு தாயும் தந்தையும் துக்கத்தில் மூழ்கியுள்ளார்கள் போல தெரிகின்றதே நான் வரும் போது கட்டியணைத்து முத்தம் கொடுத்து சாதம் படைக்கும் அன்னை முகத்தைத் திருப்பிக் கொண்டிருப்பது போல் உள்ளதே ஏதும் தவறு நடந்துவிட்டதோ தந்தையே தாயே ஏன் சோகமாக இருக்கின்றீர்கள்.

**மருத்துவதி :** ஒன்றுமில்லையே நீ வா மகனே அமுது படைக்கிறேன்.

**மார்க்கண்டேயன் :** தாயே அகத்தின் அழகு முகத்தில் தெரியும் அல்லவா நீங்கள் ஏதோ கவலையில் இருப்பது புரிகிறது. மறைக்காமல் சொல்லுங்கள். தந்தையே சொல்லுங்கள்.

**ரிசி :** அவரவர் கர்மாவை அவரவரே அனுபவிக்க வேண்டும் நாங்கள் அனுபவிப்பதை அனுபவிக்கிறோம் நீ என்ன செய்வாய்

**மார்க்கண்டேயன் :** அம்மா, அப்பா நீங்கள் யோசிப்பது பற்றி என்னிடம் கூறாவிட்டால் நான் உண்ணமாட்டேன் வருகிறேன்.

**இருவரும் :** ஐயோ மகனே நில்

**(பாட்டு) :** என்ன செய்வோம் மகனே இனி ஏது செய்வோம் மகனே கண்மணியே உன்னை காலன்தொடும் காலம் ஆச்சே எண்ணம் முழுதும் ஏங்குதே என் செய்வேன் என் மகனே விதியாச்சே முன்னம் நாம் பெற்றோம் வரம் முழுவயதென்று இறைத்தார் பதினாறு. இன்று அது உனக்காச்சே.

**ரிசி :** மகனே மார்க்கண்டேயா நாங்கள் பெற்ற வரத்தின்படி உனக்கு பதினாறு வயது வரையுமே ஆயுள் இனி எந்த நேரமும் காலன் உன்னைக்கொண்டு செல்லலாம் அதனால் தான் கவலைப்படுகின்றோம்.

**மார்க்கண்டேயரன்:** தாய் தந்தையர்களே படைக்கப்பட்ட எல்லா ஜீவராசிகளும் என்றோ ஒரு நாள் இறக்கத்தான் வேண்டும் இதை அறியாதவர்களா நீங்கள்

**ரிசி :** பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்பதை நிரூபிப்பது போல் கதைத்து விட்டாய் மகனே பெற்றார்கள் என்னபாடு படுகின்றோம் தெரியுமா?

**மார்க்கண்டேயன் :** தந்தையே கவலையை விடுங்கள் நான் கானகம் சென்று தவமிருந்து சிரஞ்சீவி வரம் பெற்று வருகிறேன்.

**மருத்துவதி :** மகனே நீ சின்னப்பிள்ளை எப்படித்தவம் செய்வாய்.

**மார்க்கண்டேயன் :** தாயே இனிக்கவலைப்பட வேண்டாம் நான் சென்று வர விடை கொடுங்கள்.

**மருத்துவதி:** மகனே நீ காட்டில் இறக்காமல் என் காலடியில் இறந்தால் நிம்தியடா

**மார்க்கண்டேயன் :** அம்மா பயப்படாதீர்கள் இறப்பதென்றால் எங்கு இறந்தால் என்ன நான் சென்று வர விடைதாருங்கள்.

**ரிசி :** மகனே உனது முடிவும் சரி தான் சகல வரமும் பெற்று வருவாயாக.

## காட்சி - 8

இடம் :- வனம் (காடு)

விதி இதுவே சதிபதியை வேதனை யாச்சே

**மார்க்கண்டேயர் :** வேதம் ஓதி....

**நாரதர் :** வேதம் ஓதி..... பாட்டு)

**மார்க்கண்டேயன் :** யார் வீணையோடு வருகின்ற மகான் சுவாமி நமஸ்காரம்

நாரதர் : மகனே என் ஆசிகள் நீயார் இந்தக் கானகத்தில் தனியாக எங்கே செல்கிறாய்

மார்க்கண்டேயன் : சுவாமி நான் மிருகண்டு மகரிசியின் மகன் மார்க்கண்டேயன் எனக்கு 16 வயதில் ஆயுள் முடிகின்றது அதனால் தவம் இருந்து சிரஞ்சீவியாகப் போகின்றேன் நீங்கள் யார் சுவாமி

நாரதர் : நான் தேவலோக சஞ்சாரி பிரமபுத்திரன் நாரதர் என்பர்

மார்க்கண்டேயரன் : (காலில் விழுந்து) சுவாமி நான் செய்த பாக்கியமே பாக்கியம் தவம் செய்வதற்கான வழியை தாங்களே எனக்குக் காட்டி அனுக்கிரகம் செய்யவேண்டும்.

நாரதர்: நன்றாக இருக்குதப்பா உன் செயல் ஏதோ சின்னப்பிள்ளை என்று பார்த்தால் நான் வருகின்றேன்.

மார்க்கண்டேயன் : சுவாமி நீங்கள் நல்ல வழி காட்டாவிட்டால் உங்கள் காலடியிலேயே என் உயிரை விடுவேன்

நாரதர்: அடேயப்பா எழுந்திரு பிராமணன் பிராமணனின் காலில் விழுந்து இறந்தால் பிரமகத்தி தோசம் பிடிக்கும் "இம்"இதோ வழிசொல்கிறேன் கேள் நேரே காசி விஸ்வலிங்கேஸ்வரனைச் சென்றடைந்து தவம் செய்யப்பா.

மார்க்கண்டேயன் : நல்லது சுவாமி நமஸ்காரம்

நாரதர் : என் நல்லாசிகள் வாழ்வாய்

## காட்சி - 9

### இடம் - எமலோகம்

எமன் : சித்திரபுத்திரரே இன்று பூலோகத்தில் இருந்து வந்த நரர்களின் பாவ நஸ்டக் கணக்கைச் சொல் அவர்களை அழைத்துவா

சித்திரபுத்திரர் : ஓய் கிஸ்கர்களே அந்த நரர்களை அழைத்து வாருங்கள்

கிஸ்கர்: இதோ சுவாமி (இழுத்து வரல்)

சித்திரபுத்திரர்: சுவாமி இவன் பெயர் வயிரமுத்து வட்டிக்காரன் கட்டிய மனைவியை கண்கலங்கவிட்டவன் கருமி மற்றவர் பொருட்களை அபகரிப்பதில் சூரன்

எமன் : இவனை உலையில் போட்டு உருட்டுங்கள் மற்றவர்

சித்திரபுத்திரர் : சுவாமி இவன் கன்றுக்கு பால் கொடா பாவி குரு நிந்தனை செய்பவன் கோயில் வரி செலுத்த மாட்டான் தன் பிள்ளைகளுக்கே நேரத்துக்கு உணவு கொடாதவன் மகாபாவி

எமன் : அப்படியா இன்னும் பழுக்கக்காய்ச்சிய இரும்பால் கண்ணில் குற்றி முள் கிடங்கில் தள்ளுங்கள் வேறுயார்

சித்திரபுத்திரர் : சுவாமி இதோ நிற்கிறார் இவர் மகா நல்லவர் இறைவழிபாட்டிலும் மற்றவரை மதிப்பதிலும் தானம் செய்வதிலும் சிறந்தவர் இருந்தும் ஒரு நாள் அறியாமல் பூசைவிதி தவறிவிட்டார் அதனால் இங்கு வர நேர்ந்தது.

எமன் : அறியாமல் செய்த குற்றம் ஆகவே இவரை பொற்தேரில் ஏற்றிக்கொண்டு சொர்க்கத்தில் விடுங்கள் சரி இன்று பூலோகத்தில் இருந்து வர வேண்டிய

உயிர்கள் எவை அதிலும் அவசியமானவை எவை

**சித்திரபுத்திரர் :** சுவாமி மார்க்கண்டேயன் என்பவன் இன்று சூரிய அஸ்தமனத்திற்குள் இங்கு வரவேண்டும்

**எமன் :** சரி சென்றழைத்து வா நீங்கள் சென்று உடன் அவனையழைத்து வாருங்கள்.

**எமகிஸ்கா :** உத்தரவு பிரபு

## காட்சி -10

பூலோகம் நோக்கி போதல்

இருவரும் உரையாடல்

## காட்சி 11

இடம் காசி விஸ்வலிங்கேஸ்வரர் ஆலயம்

**செந்பூ :** அதோ கோயிலின் உள்ளே இருக்கிறானே அவன் தான் மார்க்கண்டேயன்

**செங்கண் :** டேய் வாடா வெளியே நாங்கள் எமகிஸ்கர்கள் வந்திருக்கின்றோம் உன் காலம் முடிந்துவிட்டது.

**மார்க்கண்டேயன் :** எமகிஸ்கர்களே காலம் முடிந்தால் என்ன கடவுள் இருக்கிறார் அல்லவா நான் வர மாட்டேன்.

**செந்பூ :** அடம்பிடியாதே வெளியில் வா இல்லை நாங்கள் வந்து தரதர என்று இழுத்திட்டு போவம்.

**மார்க்கண்டேயன் :** முடிந்தால் செய்யுங்கள்

**செங்கண் :** ஆ என்ன பேச்சி பேசுரான் பாரு டேய் (உள்ளே போதல் தீச்சுவளையில் தீய்க்க திரும்பி) டேய் செல்லமுடியவில்லை ஏதோ விபரீதம் நம்மால் முடியாது வா போய் எமனிடம் சொல்வோம்.

## காட்சி - 12

இடம் :- எமலோகம்

**எமன் :** அழைத்து வந்தீர்களா எங்கே அவன்

**கிஸ்கர் :** சுவாமி என்னசொல்ல அவன் வரமாட்டேன் என்று அடம் பிடித்தான் கோயிலுக்குள் நாங்கள் சென்று பிடித்துவரலாம் என்றால் செல்ல முடியவில்லை தகிக்கிறது.

**எமன் :** தகிப்பாவது மண்ணாவது (கோபத்துடன்) சித்திரபுத்திரா எனது எருமை வாகனத்தை எடுத்து வா (சித்திர புத்திரர் போய் வருதல்)

**சித்திரபுத்திரர் :** சுவாமி எருமை வாகனம் மாட்டேன் என்கிறது மண்டியிட்டுக்கிடக்கிறது.

**எமன் :** சரி நான் பார்த்துக் கொள்கிறேன் (போதல் எதிரே நாரதர் வருதல்)

**நாரதர் :** என்ன எமதர்மா கோபாவேசத்துடன் எங்கே செல்கிறாய்.

**எமன் :** நாரதரே யாரோ மார்க்கண்டேயனாம் வர மறுக்கிறானாம் அவனைப்

பிடித்து வரப்போகிறேன்.

**நாரதர் :** சரி சரி உன் வேலையை நீ பார்க்கத்தான் வேண்டும் இருந்தும் உன் எருமை வாகனம் ஏலாது என்கிறது ஒரு சகுனம் கிஸ்கர்கள் திரும்பி வந்தது மற்றச் சகுனம் அதுவும் அல்லாமல் நீ புறப்படும் போது பிராமணன் நான் வந்தது மிகக்கெட்ட சகுனம் யோசித்துப் போ.

**எமன் :** சகுனமாவது சத்துருவாவது விலகி வழிவிடும் என்வேலைக்கு.

**நாரதர் :** நீ போப்பா சொல்வதைச் சொன்னோம்...

## காட்சி - 13

இடம் – காசி (ஆலயம்)

**எமன் :** (எமன் வருதல் பல கெட்ட நிமித்தங்கள்)

டேய் மார்க்கண்டேயா வெளியில் வாடா

**மார்க்கண்டேயன் :** எமதர்மா எக்காளமிடாதே இதற்கெல்லாம் நான் பயப்பட மாட்டேன் நான் எங்கிருக்கிறேன் என்பதை மறந்து விட்டாயா.

**எமன் :** அடே சிறு பயலே உனக்கு 16 வயதுடன் காலம் முடிவடைந்து விட்டது இன்று பொழுது அஸ்தமிப்பதற்குள் போகவேண்டும் உன் உயிர்

**மார்க்கண்டேயன்:** காலனே கண்மூடித்தனமாக கதைக்காதே காலத்தையே மாற்றும் கபாச்சரனைச் சரணடைந்துள்ளேன் உன்னால் முடிந்தால் என் உயிரை எடுத்துச்செல்

**எமன் :** ஆ.... இதோ பாசம் (பாசம் வீசல் சிவன் தோன்றி பாசத்தைத் தடுத்து நிற்றல்)

எமன் உதைபட்டு மறைதல்

## காட்சி - 14

இடம் :-

**பூமாதேவி :** ஐயோ பூமி பாரம் தாங்க முடியவில்லையே என்ன செய்வேன்.

**நாரதர் :** பூமாதேவி நீ ஏன் கவலையடைகிறாய்

**பூமாதேவி :** சுவாமி பூமி பாரம் என்னால் தாங்க முடியவில்லை எமன் தன் வேலையை செய்யாமல் கிடக்கிறான் நான் என்ன செய்வேன்.

**நாரதர் :** அப்படியா எமன் எழுந்து அவன் வேலையைச் செய்வதாயின் நீ காசிவிஸ்வேஸ்வரனைத்தான் வேண்டிக்கொள். போ... போ.... (மிருகண்டு ரிசியும் மனைவியும் வரல்)

**மிருகண்டு :** புரிசோத்ம நாரதரிசியே வணக்கம்....

**நாரதர் :** ஓ கோ மிருகண்டு ரிசியா வணக்கம்... என்ன இந்தப் பக்கம்.

**மிருகண்டு :** பகவானே என் மகனுக்கு இன்றுடன் 16 வயது முடிவடைகிறது அவன் இறந்தானா இல்லையா என்று பார்த்து வரப்போகின்றோம்.

**நாரதர் :** சரி நீங்கள் முன்னதாக செல்லுங்கள் நான் பின்னால் வருகிறேன்.

## காட்சி - 15

**பூமாதேவி :** பரம்பொருளே என்னால் பூமி பாரம் தாங்க முடியவில்லை எமனை உயிர் பெறச்செய்து நல்லருள் புரியுங்கள் சுவாமி.

**இந்திரன் :** நமச்சிவாயப் பொருளே நான் மறையே நல்லருள் புரியுங்கள் சுவாமி (சிவன் தோன்றுதல்)

**சிவன் :** பூமாதேவியே இந்திரனே ரிசிகளே நான் என்ற அகந்தையால் எமன் இன்னிலையை அடைந்தான் மார்க்கண்டா எழுந்திரு உனக்கு என்றென்றும் 16 வயது சிரஞ்சீவிப்பட்டம் சூட்டினேன் எமதர்மா எழுந்திரு (எழுந்து)

**எமன் :** பிரபு பிழை பொறுத்தருள வேண்டும் கடமை உணர்வில் உங்களையே மதிக்க மறந்துவிட்டேன்.

**சிவன் :** கடமை செய்ய வேண்டும் தான் இருப்பினும் இனிமேல் இறை பூசை செய்வோரையும் அன்னம் உண்போரையும் தானம் கொடுப்போரையும் தவம் செய்வோரையும் விரதம் இருப்போரையும் கொல்ல நினைக்கும் போது நீ அவசரப்படக்கூடாது சரியா...

**நாரதர் :** சுவாமி ஒரு விண்ணப்பம் ஏற்றருள வேண்டும்

**சிவன் :** நாரதா ஏது உன் விண்ணப்பம் கூறு

**நாரதர் :** சுவாமி இன்று முதல் தங்களுக்கு காலகாலன் என்ற நாமம் சூட்டி உலக மக்கள் போற்றட்டும் அதற்கு அருள் புரியுங்கள்


**சிவன் :** அப்படியே ஆகட்டும்

**மார்க்கண்டேயன் :**
தாயே தந்தையே நாரதபகவானே
பரம்பொருளே நமஸ்காரம் (பாட்டு)
ஒன்றே குலம் என்று பாடுவோம்
ஒருவனே தேவனன்று போற்றுவோம்
உதட்டினில் உறவிதனை மாய்ந்திடுவோம்
தூய உள்ளத்தில் உண்மையன்பை மீட்போம்
நன்று நீதாயினும் நன்மையை நாடுவோம்
ஒன்றே குலம் என்று பாடுவோம்
ஒருவனே தேவன் என்று போற்றுவோம்
நாம் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று
பேசும் ஊனரைப் பாரினில் ஒதுக்கிடுவோம்

ஒன்றே குலம் என்று பாடுவோம்
ஒருவனே தேவன் என்று போற்றுவோம்
கன்றோடு பசுவும் கலப்பது போல்
ஒன்றோட ஒன்றாய் கலந்திடுவோம்.

2014ல் மொழித்தினப் போட்டியில்
தேசிய மட்டம் சென்ற நாடகப் பிரதி

# பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு



மகேசுவரத்தினம் - சுமர்த்திகா
கலைப்பிரிவு, மட்/முதலைக்குடா வித்தியாலயம்

**நாடக மாந்தர்கள்**

எடுத்துரைஞர்,

கனகம்மா - அம்மா (விதவை)

பிரியா - கனகம்மாவின் மகள்

நந்து - கனகம்மாவின் கடைசி மகள்

புனிதா - கனகம்மாவின் ஒன்றுவிட்ட சகோதரி

கண்ணன் - கனகம்மாவின் வீட்டிற்கு பக்கத்தில் இருக்கும் கடைக்காரன் (முதலாளி)

ரமேஷ் - பிரியாவின் கணவன்

வைத்தியர்

பல்கலைக்கழக அதிபர்

(மேடையை அலங்கரித்துக் காணப்பட்ட திரைச்சீலை விலக மேடையின் மீது பரப்பொளி பாய்ச்சப்படுகிறது. குறிப்பாக CCயில் இருந்த குடிசை மீது பொட்டோளி பாய்ச்சப்பட்டுக் கொண்டே இருக்கிறது)

எடுத்துரைஞர் :- கனகம்மா எனும் பெண் முப்பது வயதினிலே கணவனை இழந்த பெண்ணாக காணப்படுகிறாள் இவளுக்கு மகாலெட்சுமி போல இரண்டு பெண் பிள்ளைகள் கணவன் இறக்கும் போதே இவர்கள் சிறிய பிள்ளைகள் கணவன் இறந்தால் மறுதிருமணம் செய்யும் இக் கால கட்டத்தில் கனகம்மா மறு திருமணம் செய்யாமல் தன் இரண்டு பிள்ளைகளையும் படிக்க வைத்து நல்ல பிள்ளைகளாக உருவாக்க வேண்டும் என எண்ணி தன்னையே உருக்கி அவர்களை படிக்க வைக்கிறாள் அதில் மூத்த பிள்ளை பிரியா A/L பாஸ் பண்ணி பல்கலைக்கழகத்தை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறாள். கடைசிமகள் நந்து 10ஆம் தரத்திலே கல்வி பயின்று கொண்டிருக்கிறாள்.

கனகம்மா தன் வாழ்க்கையில் ஏற்பட்ட கஷ்டங்களை தன்னுள் போட்டுக்கொண்டு வெளித் தோற்றத்தில் சந்தோசமாக இருப்பது போல் காட்டிக்கொள்கிறாள். கனகம்மா இருதய நோயாளியும் கூட இருந்தபோதிலும் தன் நோயைப்பற்றி எண்ணாது பிள்ளைகள் மீது அக்கறை காட்டும் பெண்ணாக திகழ்கிறார்.

**காட்சி - 1** (கனகம்மாவின் வீடு)

(காலையில் சூரியன் சோம்பேறி முறித்துக்கொண்டு துயில் எழ இவனைக் கண்ட மொட்டுக்கள் விரிந்து பூவாக தேனீக்கூட்டங்கள் ரீங்காரம் செய்து தேனை அருந்த கூட்டம் கூட்டமாக பறந்து செல்கின்றன. இதனைக் கண்ட பறவைகள் தங்களுக்கு தேவையான உணவைத் தேடி நீண்ட தூரம் செல்கின்றன. சேவல் கூவ மக்கள் தமது கடமைகளில் ஈடுபடுகிறார்கள்.)

கனகம்மா : (சந்தோஷத்துடன் எழுந்து கை, கால், முகம் கழுவி இறைவனை பிரார்த்தனை செய்தாள்) கடவுளே! நான் நெடுநாள் கண்ட கனவுகள் இன்றைக்கு நிஜமாகி விட்டதே என் மகள் பிரியா இன்றைக்கு பல்கலைக்கழகத்திற்கு செல்லப் போகிறாள். அவள் படித்து வேலை எடுப்பாள் என் கஷ்டங்களை தீர்த்து வைப்பாள் என்மகளை நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும் கடவுளே! (மனத்திற்குள்)

பிரியா : அம்மா புதுப்பெட்டி, உடுப்பு, புத்தகம், உணவு போன்ற பொருட்களெல்லாம் வாங்க வேண்டும் அதற்கு 3000 ரூபா காசு வேணும் அம்மா (கவலையோடு)

கனகம்மா : பிரியா கவலைப்படவேண்டாம் பிள்ளை உன்ர அப்பா வாங்கித் தந்த காப்பு ஒரு ஜோடி இருக்குது மகள் அதை அடகு வச்சால் 2000 ரூபா கிடைக்கும் புனிதாட்ட கேட்டு 1000 ரூபா வாங்குவம் மகள்.

பிரியா : வேண்டாம் அம்மா எனக்கு வேண்டாம் நான் படிக்கல்ல படிப்பதற்கு ஏற்ற வசதியும் இல்லை. அப்பா வாங்கித்தந்த காப்பை நீங்க அடகு வைக்க வேண்டாம் (கவலையோடு) அப்பாவின் ஞாபகத்திற்காக இதை நீங்க பாதுகாத்து வச்சிருக்கீங்க எனக்குத் தெரியும் எவ்வளவு கஷ்டப்பட்டு இரவு பகல் பாராமல வீட்டு வேலை செய்து மற்றும் அப்பம், கொழுக்கட்டை விற்று எங்களை படிப்பிச்ச போதிலும் நீங்க விற்கவில்லையே அம்மா! எனக்காக அதை அடகு வைக்கவேண்டாம் நான் பல்கலைக்கழகம் போகவில்லை எனக்கு ஏலாது அம்மா! (சோகத்தோடு)

கனகம்மா : (கோபத்தோடு) என்னபிரியா உனக்கென்ன பைத்தியமா? எத்தனை பிள்ளைகள் பல்கலைக்கழகம் செல்வதற்காக ஏங்கிக் கொண்டு இருக்கிறார்கள் அவர்களுக்கு கிடைக்காத ஒரு சந்தர்ப்பம் உனக்கு கிடைத்துள்ளது நீ போகத்தான் வேண்டும் காசப்பற்றி கவலைப்படாதே நான் அதை எப்படியாவது உனக்கு இன்றைக்கு தருவேன் மகள்.

(காப்பை எடுத்துக்கொண்டு கனகம்மா வங்கிக்கு செல்கிறார்)

நந்து : (சந்தோசத்தோடு) பிரியா அக்கா.... பிரியா அக்கா எங்க இருக்கீங்க நான் கூப்பிடுகிறது விளங்கவில்லையா? அக்கா... ஏன் பேசாமல் இருக்கிறீங்க எங்களை விட்டுத்துப் போறத்திற்கு கவலையாக இருக்கிறதா அக்கா?

பிரியா : கவலைதான் எல்லாத்தாலையும் கவலை தான்

நந்து : ஏன் அக்கா காசு இல்லை என்றா அழுறா? அம்மா வங்கிக்கு போறா காப்பை அடகு வைக்க உன்னை தேவையான பொருட்களையெல்லாம் எடுத்து வைக்கட்டாம் மறக்காமல் கடிதத்தையும் எடுத்து வைக்கட்டாம் அக்கா.

பிரியா :- (அழுகையுடன்) என்ற நந்துக்குட்டி உன்னையும் அம்மாவையும் விட்டு என்னால போகமுடியல செல்லம் நான் போனால அம்மாவ நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும் ஏதாவது அம்மாவுக்கு முடியல என்றால் பக்கத்துக்கடையில இருக்க கண்ண மாமாவிடம் சொல்லி போன் பண்ணு நந்து (கவலையுடன்) உடனே வருவன்

நந்து :- சரி அக்கா நீ எதைப்பற்றியும் கவலைப்படாத நான் அம்மாவை பத்திரமா பார்த்துக்கொள்ளுறன் அக்கா நீ கவலைப்படாமல் போயிற்று வா சந்தோசமாக

பிரியா :- எனக்கு ஆறுதல் சொல்லுற அளவிற்கு வளர்ந்து விட்டாள் என் செல்லம் நீ நல்லாபடிக்கனும் பிள்ள அம்மாட கஷ்டங்களை நாங்கள் தான் தீர்த்து வைக்கவேணும்.

எடுத்துரைஞர்: கனகம்மா வங்கிக்கு சென்று காப்பை அடகு வைத்தார் அவர்கள் கனகம்மாவிற்கு 2000 ரூபா காசு கொடுத்தார்கள் பின்னர் அக்காசை எடுத்துக்கொண்டு அருகிலிருந்த கடைக்குச் சென்று பிரியாவிற்கு வேண்டிய பொருட்களையெல்லாம் வாங்கிக்கொண்டு புனிதாவின் வீட்டை அடைகிறார்.

கனகம்மா : (கதவைதட்டி) புனிதா... புனிதா என்று அழைக்கிறாள்.

புனிதா:- வாங்க அக்கா.... ஏன் வெளியால நிக்கிங்க உள்ள வாங்க இருயுங்க இந்த தண்ணீரைக் குடியுங்க எங்கபோய் வாரீங்க இவ்வளவு நேரத்தோட....

கனகம்மா : பிரியாவுக்கு பல்கலைக்கழகத்திலிருந்து கடிதம் வந்தது இன்றைக்கு வர வேண்டும் என்று அதற்காகத்தான் நான் அவளுக்கு தேவையான பொருட்களையெல்லாம் வாங்கிவாரன் புனிதா என்ர காப்பை அடகு வச்சிற்றுதான் இதெல்லாம் வாங்கித்து வாறன். எனக்கு ஒரு உதவி செய்வீங்களா புனிதா எனக்கு 1000 ரூபா காசு தா நான் அடுத்த மாதம் ஐந்தாந்திகதி தாறன்.

புனிதா: சந்தோசமாக இருக்கு அக்கா பிரியா படிச்சு வேலை எடுத்தால் உங்கட கஷ்டங்களை தீர்த்து வைப்பாள் கவலைப்படவேண்டாம் நீங்கள் கும்பிட்ட கடவுள் கண் திறந்து விட்டார் இருங்க நான் போய் எடுத்து வாறன்.

(புனிதா தன்னிடமிருந்து காசை எடுத்து கனகம்மாவிடம் கொடுத்தாள்.)

கனகம்மா : நன்றி புனிதா இந்த உதவியை நான் என்றென்றும் மறக்கமாட்டேன் நான் போயிற்றுவாறன்

புனிதா : அக்கா இந்த 500 ரூபாவை பிரியாவிடம் கொடுங்க இதை எனக்கு திருப்பிதரவேண்டாம் இதை நான் என்ற மகள் பிரியாவுக்கு கொடுத்தது என்று சொல்லி கொடுங்கள் அக்கா பிறகு ஒரு நாளைக்கு உங்கட வீட்ட வாறன் பிரியாவை கேட்டதாக சொல்லுங்க

எடுத்துரைஞர்: கனகம்மா புனிதா கொடுத்த காசை சந்தோஷத்துடன் எடுத்துக்கொண்டு மற்றும் தான் வாங்கிய பொருட்களை தூக்கிக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி வருகிறாள்.

கனகம்மா : பிரியா.... இந்தாங்க மகள் நீங்க கேட்ட பொருட்களும் காசும் (சந்தோசத்தோடு) புனிதா பெரியம்மா உனக்கு 500 ரூபா கொடுக்கட்டாம் என்று தந்தவ இந்தாங்க மகள்

பிரியா :- (கவலையுடன்) அனைத்துப்பொருட்களையும் வாங்கி எடுத்து காசையும் எடுத்துக்கொண்டு புறப்பட ஆயத்தமாக அம்மா (அழுகையுடன்) உங்கட உடம்ப பத்திரமாக பார்த்துக்கொள்ளுங்க நேரத்துக்கு நேரம் சாப்பிடுங்க உரிய வேளைக்கு மாத்திரைகளைப் போடுங்க ஏதாவது பிரச்சினை என்றால் பக்கத்துக்கடையில இருக்கிற கண்ணன் மாமாட்ட என்ர நம்பர் இருக்கு அவரிடம் சொன்னால் Call எடுத்து தருவார் அம்மா பிறகு என்ர நந்துக்குட்டியை பார்த்துக்கொள்ளுங்க நான் போயிற்று வாரன்.

நந்து :- (மகிழ்ச்சியுடன்) ஏன் அக்கா கவலைப்படுறா? நீ என்ன பல வருடம் எங்களைவிட்டு பிரிந்து செல்லப் போறாயா? இல்லையே ஒருவருடம் அல்லது 02 வருடம் தானே அக்கா

கனகம்மா :- ஓம் மகள் அவள் சொல்லுறதுவும் சரிதானே நீ ஏன் கவலைப்படுறா? கவலைப்படாத அந்த ஆண்டவன் உனக்கு துணையாக இருப்பார் சந்தோசமாக போயிற்று வா

எடுத்துரைஞர் :- கனகம்மா, நந்து சந்தோசத்தோடு பிரியாவை வழியனுப்பி வைக்கிறார்கள் பிரியா தனது அம்மா தங்கையை விட்டு செல்வதை எண்ணி கவலையுடன் பார்த்து பார்த்து செல்கிறாள் "சூரியன் மறைந்ததைக் கணடு பூக்கள் வாடுவதுபோல"பிரியாவின் முகம் காட்சியளித்தது. பிரியா வீட்டை விட்டு பல்கலைக்கழத்திற்குச் செல்கிறாள்.

**காட்சி - 2**

(கனகம்மாவின் வீட்டிற்கு பக்கத்திலிருக்கும் கடை)

எடுத்துரைஞர் : பிரியா பல்கலைக்கழகத்திற்கு சென்று 2 மாதத்திற்குபின்னர் பிரியா தனது தாய்க்கு தொலைபேசியில் அழைக்கிறாள்.

பிரியா : கலோ நான் பிரியா கதைக்கிறன் கண்ணன் மாமாவ கதைக்கிற எப்படி சுகமாக இருக்கீங்களா வியாபாரம் எல்லாம் எப்படி

கண்ணன் : வியாபாரம் எல்லாம் நன்றாகப்போகுது பிரியா ஏன் பிரியா திடீரென Call எடுத்த ஏதாவது பிரச்சினையா?

பிரியா : பிரச்சினை எதுவும் இல்லை மாமா அம்மாவிடம் போனக்கொஞ்சம் கொடுங்களன் நான் கதைக்கவேணும்.

(கண்ணன் கனகம்மாவை அழைக்கிறான் அதைக்கேட்டதும் கனகம்மா துள்ளிக்குதித்து சந்தோசமாக ஓட்டமும் நடையுமாக ஓடி வருகிறாள்)

கனகம்மா: பிரியா எப்படி மகள் சுகமாய் இருக்கியா பிள்ள எந்தவித பிரச்சினையும் இல்லை தானே

பிரியா :- ஒன்றும் இல்லை அம்மா நான் சந்தோசமாகத்தான் இருக்கன் நீங்க எப்படி சுகமாக இருக்கீங்களா நந்து பாடசாலைக்கு போயிற்றாளா?

கனகம்மா: ஓம் மகள் நாங்க இரண்டு பேரும் சுகமாகத்தான் இருக்கம்

பிரியா : அம்மா நான் கொண்டு வந்த காச எல்லாம் முடிஞ்சிபோயிற்று எனக்கு நாளைக்கு 1000 ரூபா காசு உடனடியாக வேண்டும் இல்லையென்றால் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியே அனுப்பி விடுவாங்க அம்மா.

கனகம்மா : சரி மகள் நீ அதைப்பற்றி யோசிக்கவேண்டாம் கவனமாகப் படி நான் நாளைக்கு காச வங்கியில் போடுறன் உடம்ப பார்த்துக்கொள் மகள் சரி போன வைக்கிறன்.

கனகம்மா : (சோகத்தோடு) கடவுளே! உடனடியாக 1000 ரூபா வேண்டும் என்றால் நான் என்ன செய்வது யார் எனக்கு உதவிக்கரம் நீட்டுவார்கள் யாருமில்லையே கடவுளே! நந்து.... நந்து அந்த உண்டியல எடுத்துவா கொஞ்சம்

நந்து : இந்தாங்க அம்மா கதிர்காமம் செல்வதற்காகத் தானே அம்மா நேர்ந்து வைத்த ஏன் உண்டியல்ல உடைக்கிறீங்க தெய்வக்குற்றம் ஆகிவிடும் அம்மா.

கனகம்மா :- (சோகத்துடன்) என் செய்வது மகள் நமது கஷ்ரம் அந்த ஏழுமலை ஆண்டவனுக்கு தெரியும் (உண்டியல் உடைக்கிறாள் 500 ரூபாவே இருந்தது) இன்னமும் 500 ரூபா வேண்டுமே நான் என்ன செய்வேன் (யோசிக்கின்றாள் தோடடை அடகு வைப்பம்) நந்து கவனமாக வீட்ட இரு பிள்ள நான் கொஞ்சம் வெளில போயிற்று வாறன்.

எடுத்துரைஞர்: பிள்ளை நந்துவிடம் பொய் சொல்லிவிட்டு தனது தோட்டை பையில் சுற்றிக்கொண்டு பக்கத்து ஊரிலே இருக்கும் நகைக்கடைக்காரனிடம் செல்கிறாள் அங்கே தோட்டை கொடுத்ததும் கனகம்மா ஐயா 500ரூபா காசு தாங்களன் என்று கேட்கிறாள் அதற்கு அவர் அம்மா 500ரூபா வராது 350ரூபாதான் வரும் அம்மா என்கிறார். அதையும் வாங்கி சீலையின் தொங்கலில் முடிந்து வைத்துக்கொண்டு (யோசிக்கிறாள்) வீட்ட போய் 2 கொத்து அரிசியை கொடுத்தால் 150 ரூபா கிடைக்கும் எல்லாம் மொத்தமாக 1000ரூபாவே கிடைக்கும் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வங்கிக்கு போய் போட்டுவிட்டு வீடு திரும்புகின்றாள் கனகம்மா.

நந்து : அம்மா அக்கா இப்போது *call* எடுத்தவள் காசு உடன் வேண்டுமாம் என்று

கனகம்மா :- நான் இப்பதான் வங்கியில் போட்டுவிட்டு வந்தன் கண்ணன் மாமாட்டசொல்லி *call* பண்ணி அக்காட்ட சொல்லு பிள்ள.

(நந்து பிரியாவிடம் உயடட பண்ணி சொல்லுகிறாள்.)

## காட்சி - 3

(பல்கலைக்கழக வளாகம்)

எடுத்துரைஞர்:- பிரியா, ரமேஷ் இரண்டு பேரும் இணைபிரியாத நண்பர்களாக இருந்தனர். எங்கு செல்வதாக இருந்தாலும் சரி படிப்பு வேலையாக இருந்தாலும் சரி இருவருமே ஈடுபடுவார்கள். இவ்வாறு இருக்கும் போதே ஒருவரை ஒருவர் அறியாமல் காதல் ஏற்பட்டது. இதன் நிமிர்த்தம் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறி இருவரும் திருமணம் செய்தனர்.

பல்கலைக்கழக அதிபர் :- பல்கலைக்கழகத்திலிருந்து கடைக்கார கண்ணனுக்கு தொலைபேசி வந்தது அப்பொழுது நடந்த விடயங்களை எல்லாம் கண்ணனிடம் சொன்னார்.

(கண்ணன் கடையை அடைத்துவிட்டு கனகம்மாவின் வீட்டிற்கு வருகிறார்.)

நந்து : என்ன மாமா இன்றைக்கு என்ன போயாவா? கடை அடைச்சுப்போட்டு வாரேல் மாமா.

கண்ணன் : (கவலையுடன்) அம்மா எங்க மகள் கூப்பிடுங்க.

நந்து : (அம்மாவைப் கூப்பிடுகிறாள்)

கனகம்மா : என்ன கண்ணன் காலையிலே இஞ்சால பக்கம் என்ன விடயம் (சந்தோசத்தோடு)

கண்ணன் :- அம்மா.... நம்மட பிரியா.... யாரோ ஒரு பையனோட ஓடிப்போயிற்றாளாம் என்று பல்கலைக்கழகத்திலிருந்து *call* வந்தது எங்க போனவங்களென்று

தெரியாதாம் அந்த பெடியனுக்கு பெற்றோர் இல்லையாம் அம்மா நம்மட வீட்ட வந்ததா... என்று கேட்டவங்க அம்மா நான் ஒன்றுமே பேசவில்லை என்னால நம்ப முடியல்ல அம்மா நம்மட பிரியாவா இப்படிச் செய்வாள் எனக்கு கையும் ஓடல்ல காலும் ஓடல்ல அது தான் கடையை அடைச்சுப் போட்டு வந்தன்

கனகம்மா : (அழுகையுடன்) கடவுளே! இதற்காகத்தானா நான் கண்முழிச்சி என் உடம்பை சாறாகப் பிழிந்து இவளை படிப்பிச்சன் என்னால தாங்க ஏலா கண்ணா என்னால முடியல்ல (நிலத்தில் விழுந்தபடி) எவ்வளவு கனவுடன் அவளை அனுப்பி வச்சன் என்ன செய்வேன் அவர் இறந்த போதே நானும் இறந்திருக்க வேண்டும் இதைப்பார்க்கவா என்னை கடவுள் உயிரோட வச்சிருக்கார்.

நந்து : அழவேண்டாம் அம்மா அழாதீங்க... அழாதீங்க அக்கா சந்தோசமாக வாழட்டும்.

கண்ணன் : அழவேண்டாம் ஏன் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுரீங்க ஊர் உலகத்திற்கு தெரிந்தா பழிப்பாங்க வேறு வேறு வார்த்தையா பேசுவாங்க அழாதீங்க... நான் போயிற்று வாரன் நந்து அம்மாவ அழாமல் பார்த்துக்கொள்ளூ ஏதாவது வேண்டும் என்றால் வா நான் தாரன் போயிற்று வாரன்.

கனகம்மா : என்ன செய்வது "தென்னையை நாட்டினா இளநீர் பிள்ளையைப் பெத்தா கண்ணீரு" பெத்தவள் தான் அதனை தாங்கவேண்டும். (அழுகையுடன்) பரவாயில்லை நல்லா இருக்கட்டும் நீடுழிவாழட்டும் பிள்ளைகுட்டியோட சந்தோசமாக வாழட்டும் ஆண்டவர் இந்த சின்னஞ்சிறுசுகளை நீ தான் காப்பாற்ற வேண்டும். என் துன்பங்கள் என்னோடு போகட்டும். அவள் சந்தோசமாக வாழ வேண்டும்.

எடுத்துரைஞர்: கவலையுடன் சாப்பிடாமல் நித்திரை செய்கிறாள் கனகம்மா சிறிது நேரத்திற்கு பின்பு என் இருதயம் வலிக்கிறது என் இருதயம் வலிக்கிறது என அழுகை ஒலி கேட்கிறது. நித்திரையில் இருந்த நந்து திடீரென எழுந்து அம்மா... அம்மா..... என்ன செய்கிறது அழுகின்றாள். நான் போய் கண்ணன் மாமாவை கூட்டிக்கொண்டு வாரன் என்று அந்த இருட்டுக்குள் ஓடுகின்றாள்.

நந்து : கண்ணன் மாமா.... கண்ணன் மாமா எழுந்திங்க (அழுகை)

கண்ணன் : என்ன பிள்ள நந்து இந்த நேரம் ஓடி வந்திருக்க ஏதாவது பிரச்சினையா?

நந்து : மாமா அம்மா (அழுகை) இருதயம் வலிக்கிறது என்று அழுறா என்னால முடியல்ல அது தான் உங்கள கூட்டித்து போகலாம் என்று வந்தன்.

கண்ணன் : ஓடி வா பிள்ள சீக்கிரமாக

(இருவரும் ஓடி வந்து கனகம்மாவை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு கனகம்மாவை அவசர சிகிச்சைக்குள் வைத்தார்கள் 1 மணித்தியாலத்தின் பின்னர் வைத்தியர் வெளியே வந்தார்)

நந்து : (அழுகையுடன்) டொக்டர் அம்மாவுக்கு எப்படி இருக்கிறது

டொக்டர் : அழவேண்டாம் மகள் உங்கட அம்மாவுக்கு பிரச்சினையில்லை நல்லா இருக்கா கனகம்மா சிறிது நேரத்திற்கு பிந்தி கொண்டு வந்திருந்தால் அவர் இறந்திருப்பார். நல்ல வேளை உடனே கொண்டு வந்து விட்டீர்கள் சிறிது

நேரத்திற்கு பின்னர் வீட்டிற்கு கொண்டு செல்லலாம். கவலை வேண்டாம்.

புனிதா : (விடயத்தை அறிந்ததும் அவசரமாக ஓடிவருகிறாள்) நந்து... நந்து என்ன நடநந்து அக்காவுக்கு (அழுகை)

நந்து : நடந்த விடயங்களை கூறினாள்

புனிதா: நம்மட பிரியாவா அப்படிச் செய்தாள் என்னால நம்ப முடியல்ல

எடுத்துரைஞர் : புனிதா, கண்ணன், நந்து கனகம்மாவை வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

## காட்சி - 4

எடுத்துரைஞர் : காலங்கள் உருண்டோடின பிரியாவை பற்றிய கவலையிலிருந்து கனகம்மா மீண்டு தனது கடமையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள் ஒரு பிள்ளை போனால் இன்னும் ஒரு பிள்ளை இருக்குதே அவளையும் நல்லபடியா படிக்க வைக்கவேண்டும் என்று கஷ்ரப்பட்டு உழைக்கின்றாள்.

(ஒரு நாள் கனகம்மா நித்திரையிலிருந்து விழித்தெழுந்தாள்)

கனகம்மா : (கவலையுடன் நந்து எழுந்திடுமகள் நேரம் போயிற்று பாடசாலைக்கு செல்ல வேண்டுமல்லோ எழுந்திடு பிள்ள....

நந்து : (கண்களைக் கசக்கிக்கொண்டு எழுந்தாள் பாடசாலைக்கு செல்வதற்கு தயாராகினாள்) அம்மா தேநீர் தாங்க நேரம் போயிற்று.

கனகம்மா : கொஞ்சம் பொறுங்க பிள்ள இதோ கொண்டு வாரன் (தேநீரை ஊற்றிக்கொடுத்தார்)

நந்து : என்ன அம்மா சோகமாக இருக்கிங்க

கனகம்மா : நந்து நான் இரவு கனவு கண்டன் யாரென்றும் தெரியாது மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் வாகனம் ஒன்றில் மோதி இறந்து போயிற்றார். ஒரு பெண் பிள்ளை தலைமுடியை விரித்து ஓவென்று விம்மி விம்மி அழுகின்றாள் நானும் கனவில் அழுதன் பாவம் அந்தப்பிள்ளை.

(கனகம்மா நந்துக்கு விஸ்கட்டை வாங்க கடைக்குச் சென்றார் அங்கே)

கண்ணன்:- அம்மா பக்கத்துக்கிராமத்தில் அதிகாலை 6.00 மணியளவில் விபத்து இடம் பெற்றது அதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெடியன் உயிரிழந்து விட்டாராம் பாவம் கல்யாணம் கட்டி மூன்று மாதம் தானாம்.

கனகம்மா:- ஐயோ பாவம் யார் பெத்த மகனோ தெரியாது அப்பா. (வீட்டுக்கு வருகிறாள்)

புனிதா:- அவசர அவசரமாக ஓடி வருகிறாள். அக்கா நம்மட பிரியாட கணவருக்கு தானம் விபத்து ஏற்பட்டதாம் அவ்விடத்தே உயிரிழந்து விட்டாராம் (அழுகையுடன்)

கனகம்மா:- என்ற கடவுளே! நான் கண்ட கனவு பலித்து விட்டதே அப்பா! மேலும் என் தலையிலே தான் இடி உரல் விழுதே நான் என்ன பாவம் செய்தேன் ஐயோ! என் வாழ்க்கை தான் பாதியில் முடிந்தது என்றால் என் மகளின் வாழ்க்கையும் என்னைப்போலவே இடையில் நின்று விட்டதே கடவுளே (வயலின் ஓசை)

புனிதா :- அக்கா சீக்கிரமாக வாங்க பிரியா வீட்ட போவம் பாவம் பிரியா என்ன செய்ராளோ தெரியல்ல ஐயோ!

கனகம்மா :- என்ர மகள் அப்பா என்ன செய்ராளோ யாரும் இல்லாமல் அநாதையாக ஏங்குவாளே என்ர மகளே அந்த கடவுள் உன்னை கண்திறந்து பார்க்கவில்லையா? (அழுகை)

எடுத்துரைஞர் :- கனகம்மா, புனிதா, நந்து, கண்ணன் போன்றோர் பிரியாவின் வீட்டிற்கு செல்கின்றனர். அங்கே பிரியா தனிமையில் ஏங்கிக்கொண்டு இருக்கிறாள். எந்தவித அசைவுமின்றி வீட்டோடு சாய்ந்தபடி நிற்கின்றாள்.

கனகம்மா: பிரியா... பிரியா... என்ர அன்பு மகளே உனக்கென்னம்மா நடந்தது உன்ர தலையில் தானா இடிஉரல் விழுந்தது கடவுளே என்ர (பிரியாவை அசைத்தபடி)

புனிதா:- பிரியா இந்த தண்ணீரைக்குடி பிள்ள

பிரியா: (தண்ணீரைக் குடித்துவிட்டு ஐயோ! ஓவென்று அழுதாள்)

புனிதா : என்ன நடந்தது மகள்

பிரியா : (அழுகையுடன்) பெரியம்மா இவர் காலை உணவு வாங்கி வாறன் என்று சொல்லிப்போட்டு மோட்டார் சைக்கிளை தள்ளினார் தள்ளும் போது இவர் தலையில் பல்லி விழுந்தது அப்பொழுது நான் சொன்னேன் போக வேண்டாம் என்று அதையும் கேட்காமல் சென்றார் (அழுகை)

கனகம்மா : பிறகு என்ன நடந்தது மகள் (சோகத்தோடு)

பிரியா : எனக்கு தெரியாது அம்மா பொலீஸ் வந்து கேட்டாங்க இவர் மது அருந்தினவரா என்று நான் இல்லை என்று சொன்னன் ஏன் போனவர் என்றெல்லாம் கேட்டாங்க நான் சொன்னேன்.

புனிதா: பிரியா இப்ப எத்தனை மாதம் அம்மா

பிரியா : ஒரு மாதம் பெரியம்மா எனக்கு நித்திரை வருகுது அம்மா (பிரியா உறங்கி விட்டாள்)

எடுத்துரைஞர் : சிறிது நேரத்திற்கு பிறகு சடலம் வந்தது உறங்கிய பிரியா விழித்தெழுந்தாள் விம்மி விம்மி அழுதாள் கனகம்மா, புனிதா, நந்து மற்றும் கண்ணன் அனைவரும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து சடலத்தை நல்லடக்கம் செய்தனர்.

கனகம்மா :- பிரியா வா பிள்ள நம்மட வீட்ட போவோம் இஞ்சநீ மட்டும் தனியா எப்படி இருப்பது கர்ப்பணித்தாயும் கூட வா மகள் போவம் (உரிமையோடு அழைத்தாள்)

பிரியா :- அம்மா என் மனம் கல்லு இந்த கல் நெஞ்சக்காரி உங்களுக்கு செய்த பாவம் தான் இவ்வளவு விடயத்திற்கும் காரணம் நான் படிச்சு வேலை எடுத்திருந்தால் இதெல்லாம் வந்திருக்காது அம்மா.

கனகம்மா :- பிள்ள பிரியா அழக்கூடாது உன் வயிற்றில் வளரும் பிள்ளையைப் பாதிக்கும் மகள் அழாத (பிரியாவின் கண்ணீரை துடைத்துவிடல்)

(பின்னர் பிரியாவின் பொருட்களை எடுத்துக்கொண்டு கனகம்மாவின் வீட்டை நோக்கி செல்கிறார்கள் அங்கே சென்றதும்)

புனிதா: இப்படி ஒரு அம்மா உனக்கு கிடைப்பதற்கு நீ கோடிதவம் செய்திருக்க வேண்டும். அக்கா எவ்வளவு கனவுடன் கஷ்ரப்பட்டு படிப்பித்து பல்கலைக்கழகம் வரையும் அனுப்பினார். ஆனால் நீ அந்த அம்மாவையே தூக்கி எறிந்துவிட்டு

எவனோ இனம் தெரியாத ஒருவனுடன் ஓடினாய் உன் அம்மா எவ்வளவு மனத்துயர் அடைந்திருப்பார், நீ யோசிக்கவில்லையா?

பிரியா : அம்மா என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் என் மனம் கல்லு ஆனால் உங்கள் மனமோ பித்துப் போன்றது அம்மா (சோகத்தோடு)


கனகம்மா: பிரியா பிள்ளைகள் எவ்வளவு துன்பத்தை கொடுத்தாலும் அதைப் பொறுப்பவள் தான் தாய், தாய் என்பவள் அனைத்தையும் பொறுமையுடன் கேட்டு அதற்கான தீர்வினை கொடுப்பவள்.

பிரியா : உங்களுடைய மனதை நான் புரிந்து கொள்ளவில்லையே இவ்வளவு வேலைகளை செய்திருக்கன் நீங்கள் ஒரு தடவை வைத்தியசாலையில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த போதிலும் நான் உங்களை வந்து பார்க்க வில்லையே என் நெஞ்சு கல்லு நான் பாவி... பாவி அம்மா (காலில் வீழ்கிறாள்)

கனகம்மா :- எழுந்திரு பிரியா உன்னைப்போன்ற பிள்ளைகளுக்கு காதல் வந்தால் பெற்ற தாய், தந்தையர், சகோதரர்கள் போன்றோரை மறந்துவிடுவார்கள் அவர்கள் பிரச்சினை வருவதற்கு முன்பு யோசிப்பதில்லை பிரச்சினை வந்த பின்னர் தான் அனைத்தையும் புரிந்து கொள்கிறார்கள்.

எடுத்துரைஞர் : கனகம்மா மகளின் படிப்புக்காக எவ்வளவோ செலவு செய்து அது பயனளிக்கவில்லை. தாயின் மனதை புரிந்து கொள்ளாத மகள் காதல் வயப்பட்டு ஒருவருடன் ஓடிச்செல்கிறாள். இதனை அறிந்த கனகம்மா அதை பொருட்படுத்தாது மகள் சந்தோசமாக வாழட்டும் என்று வாழ்த்துகிறாள்.

காலங்கள் உருண்டோடின கனகம்மாவின் மகள் பிரியாவின் கணவன் திருமணம் செய்து மூன்று மாதத்திலே விபத்துக்குள்ளாகி இறந்து விட்டான். இவன் இறந்த பின்பு கனகம்மா மகளுக்கு ஆறுதல் கூறி தன்னுடனே மகளை வைத்துக்கொண்டு சந்தோசமாக வாழ்ந்து வருகிறாள்.



# பிரதேச கலாசார விழா - 2015 ஐ முன்னிட்டு கலை மன்றங்களுக்கிடையில் நடத்தப்பட்ட கூத்துப்போட்டி







அனுசரணை : வேள்ட் விசன் லங்கா, பட்டிப்பளை

World Vision



2015 ஆம் ஆண்டின் பிரதேச கலாசார விழாவினை சிறப்பிக்கும் வண்ணம், கலாசாரப் பேரவையால் பிரதேச கலை மன்றங்களுக் கிடையில் 2015.09.23ஆந் திகதி கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் வேள்ட் விஷன் லங்கா பட்டிப்பளை பிராந்திய அபிவிருத்தித்திட்டத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட பாரம்பரிய வடமோடிக் கூத்துப் போட்டியில் முதலிடம் பெற்ற நாகசக்தி கலை மன்றத்தினரின் வடமோடிக்கூத்து.

# நச்சுப்பொய்கை கூத்தின் கதைச்சுருக்கம்

தொகுப்பு **இ. குகநாதன்** (நாகசக்தி கலை மன்றம், முனைக்காடு.)

இக்கூத்து மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டது. பாண்டவர்கள் வனவாசம் சென்ற பின்பு அவர்களை அழிப்பதற்குத் துரியோதனன் அவனது மாமாவாகிய சகுனியுடன் இணைந்து பல சூழ்ச்சிகளைச் செய்கின்றான். அதில் துரோபதையைக் கடத்தி வந்தால் அவளைத் தேடி பாண்டவர்கள் வருவார்கள் அப்போது அவர்களது வனவாசம் தோற்கடிக்கப்பட்டு மீண்டும் வனத்திற்கு அனுப்பலாம் என்பதற்காக துரியோதனன் தனது மைத்துனனான சைந்தவனை துரோபதையைக் கடத்திவருவதற்கு அனுப்புகின்றான். ஆனால் அம்முயற்சி கைகூடவில்லை. மீண்டும் பாண்டவர்களை அழிப்பதற்காக காளமாமுனியை நோக்கி தவமிருந்து அவரை வரவழைத்து அவர் மூலமாக வேதாளத்தை பாண்டவர் மீது ஏவுகின்றான்.

இதை அறிந்த கிருஸ்ணர் பாண்டவரைக் காப்பதற்காக இயம தர்மரை நாடுகின்றார். அவரது துணைகொண்டு பாண்டவர்கள் வாழும் இடத்தில் நச்சுப்பொய்கை ஒன்றை அமைத்து, பாண்டவர்கள் தண்ணீர் தாகத்தைத் தீர்ப்பதற்காக ஒவ்வொருவராக வந்து நீரைப்பருகும் போது ஓர் அசரீரி கேள்விகள் கேட்கும், கேள்விகளுக்கு விடை கூறமுடியாமல் வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் நீரைப்பருகி இறந்துவிட அவர்களின் உயிரை இயமதர்மன் தம்வசம் வைத்திருப்பார். தண்ணீர் எடுப்பதற்காகச் சென்ற தம்பிமார் இறந்து கிடப்பதை தேடிவந்து கண்ட தருமர் சோகம் தாங்க முடியாமல் மூச்சடங்கி விழுந்து விடுவார். இச்சமயம் வேதாளம் வருகை தந்து இறந்து கிடக்கும் பிணங்களைக் கண்டு 'பிணங்களைச் சாப்பிடவா என்னைக் காளமாமுனி அனுப்பனான்' என்று சீற்றத்துடன் காளமாமுனியைக் கொல்கிறது.

மயக்க நிலை நீங்கி தருமர் அசரீரி கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் விடை கூறி தனது தம்பிமார் அனைவரையும் உயிர்ப்பித்துத் தரும்படி கிருஸ்ணரை வேண்டி அழுகிறார். அச்சமயம் கிருஸ்ணர் யோகி வடிவம் கொண்டு தருமருடைய தம்பிமார் நால்வரையும் உயிர்ப்பித்து, நடந்தவற்றைப் பாண்டவர்களுக்கு எடுத்தரைக்கின்றார். இவ்வாறு கதை செல்கின்றது.

# நச்சுப்பொய்கை கூத்து

### பிள்ளையார் காப்பு

முருக்க மாக முனியுடைய யாகத்தாலே
முனித்தெழுந்த வேதாளம் தனையே மாற்ற
பெருக்குள்ள நீர் நிறைந்த நச்சுப் பொய்கை
பேர் நிறைந்த கதையை நாடகமாய்ப்பாட
திருக்கைலை ஈசனிட மைந்தனான
சித்தி முத்தி நாயகனை சிந்தை கூர்ந்து
மரும்புடைய கரிமுகத்துப் பிள்ளையாரே
மலர்பாதம் என்றென்றும் காப்புத்தானே.

### கட்டியகாரன் வரவு விருத்தம்

காலிலே சலங்கையது விரித்துக்கட்டி
கையிலே பிரம்புமது பிடித்துக்கொண்டு
சபையிலே இறங்கி பல சட்டம் போட்டு
சமத்தான கட்டளை இட்டுமேதான்
தலையிலே முண்டாசு கட்டுமிட்டு
வேந்தனது வேலைதனை செய்யும் தீரன்
சுருக்கான நடை நடந்து சுந்தரக் கட்டியன்
சபை நாடி வருகின்றேனே

### கட்டியன் தரு

கட்டிய காரனும் வந்தேனே களரிமீது
கட்டிய காரனும் வந்தேனே
கட்டிய காரனும் வந்தேன் கைதனில் பிரம்பும் கொண்டு
தீட்டியதோர் ஈட்டி கொண்டு சிறக்க நடை நடந்து
வணங்கா முடியோன் சேவை வரிசை தவறாமலே
கணங்களைப் போலவே துடினக்காவல் புரியும்

### கட்டியன் வசனம்

ராசாதிராசன் ராசன் கெம்பீரன் துரியோதன
மகாராசனும் அவர் தம்பிமார்களும் இன்னும் சில
படைவீரர்களும் கொலு வீதி வருகின்றார்கள்
நானோ தெரு வீதி செல்கின்றேன்... ஒருத்தரும் பேசக்
கூடாது பேசினால் குற்ற தண்டனை வழங்கப்படும்
அறிவீராக....

### துரியன் வரவு விருத்தம்

உச்சியில் நவமணி உயர்மதியென்று
உலகுள்ளோர் போற்றிடவே
மட்டில்லா கன்னியர் ஆலாத்திதீபம் ஒளிபகலவன் மறைய
துட்சாதனனுடன் சூழ்ந்திடும் தம்பிமார் துடித்து சினந்து
தூக்கிய தண்டமுடன் ஆக்கிரமித்துமே துரியனும் வருகின்றானே

### துரியன் கொலுத்தரு

ராசன் வந்தேன் துரியோதன ராசன் வந்தேன்
ராசன் வந்தேனே தேசம் பலரும் மெச்ச
ஓசை பலமுளங்க ஒயிலாச் சபையை நாடி...

### துரியன் வசனம்

கேளுங்கள் அண்ணா கர்ண மகாராசனே வாருங்கள்
வீரலாங்களே பாண்டவர்கள் வனத்தில் இறந்து
விட்டார்களோ இருக்கிறார்களோ தெரியவில்லை
இதை அறிவதற்கும் நல் யோசனை சொல்லுங்கள்
வீரர்களே....

### கருணன் தரு

தம்பி துரிய பூவா சாற்றும் மொழிகேளும் துரிய பூவா
அவர் நம்பிக்கையாகவே நாட்டில் திரும்புவார் துரிபூவா

### கருணன் வசனம்

கேளும்தம்பி துரியோதன மகாராசனே அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று அறிந்த பின் அவர்களை கொல்வதற்கு தகுந்த யோசனை செய்வோம் தம்பி துரியோதன மகாராசனே

### துட்சாதனன் தரு

அண்ணா எனது உரை திண்ணமாய்க் கேளும் அருளுவேன் நானுமிப்போ என் அண்ணா
நண்ணயமாக நாடிக் கானகம் சென்று நான் பார்த்துவாறேன் அண்ணா.

### துட்சாதனன் வசனம்

கேளுங்கள் அண்ணா அதிக சீக்கிரத்தில் வனத்தில் சென்று ஐவர்களைப் பார்த்து வருகிறேன் விடை தந்து அனுப்புங்கள் அண்ணா....

### துரியன் வசனம்

கேளும் சகுனி மாமா நீங்கள் முடிந்த அளவு ஏதாவது யோசனைகள் சொல்லுங்கள் சகுனி மாமா

**சகுனி தரு**

ஐவர்களை தேடி எங்கு அடவி முழுவதும் பார்த்து மருமகனே அவர் அடுத்திருக்கு மிடத்தில் மடுத்து விடுவோம் மருமகனே

**சகுனி வசனம்**

கேளும் மருமகனே பஞ்சபாண்டவர்களை அழிப்பதற்கு காளமாமுனியை நோக்கி வேண்டினால் அவர் உதவுவார் அறிந்து கொள்ளும் மருமகனே.

**விஸ்ணு வரவு விருத்தம்**

மாதரோடு தேவர்கள் மனமது மகிழ்ந்துமே மலர் மாரி தான் சொரியவே
பாதமதில் பலகோடி பக்தர்கள் வீழ்ந்துமே பணிவிடை செய்து வரவே
.பாரவனம் சென்றதொரு பாண்டவர்கள் தங்களை பரிவுடன் காக்கவென்று
சீதரன் கெருட வாகனம் ஏறியே சிறப்புடன் வருகின்றேனே.

**விஸ்ணு தரு**

அரி கிஷ்ணர் வந்தார் ஐவரைக் காக்க சிறிகிருஸ்ணர் வந்தார்.
அரிகிருஷ்ணர் வந்தாரே அரிய கெருடன் மீது
துரிதமாய் ஏறியே சுருக்காய் கானகம் செல்ல

**விஸ்ணு வசனம்**

நல்லது எமபுரம் சென்று எமதருமனையும் அழைத்துச் செல்வோம் மனமே

**எமதர்ம ராசன் வரவு விருத்தம்**

எமலோகம் தனையாளும் எமனாம் கானந்தானும்
சமமாக உயிரை எல்லாம் தான் கொண்டு செல்லும் தீரன்
பாவமே செய்வோர் தன்னை பதைக்கவே கொல்லும் வீரன்
வேகமாய் எழுந்து தானும் விரைவுடன் வருகின்றேனே.

**எமன் தரு**

எருமக் கிடாவினிலேறிக் குறித்து எமன் வேகத்துடன் வந்தேனே சபையை நாடி
கோலத்துடனே கையில் பாசக்கயிறு கொண்டு சீலத்துடனே கையில் சூலத்துடனே வந்து

**எமன் வசனம்**

சரணம் சரணமையா சுவாமி அடியேன் இங்கு வந்த காரியம் நான் அறியும்படி சொல்லுங்கள் ஐயா சுவாமி.

**விஸ்ணு வசனம்**

கேளும் எமராசனே பாண்டவர்களை அழிப்பதற்க்கு துரியோதனன் காளமாமுனியை நோக்கி தவமிருந்து அவர் மூலம் வேதாளத்தை உண்டுபண்ணி அனுப்பி உள்ளான் பாண்டவர்களை காக்க வேண்டும் என்னுடன் ஒருவீராக.

**விஸ்னு விருத்தம்**

காலனே நானுமிப்போ களறிடும் வார்த்தையைக் கேளாய்
கோலமாய் நீருமிங்கே குயில் வடிவம் போலாகி
ஆலமா மரத்தின் மேலே அழகாய் இருந்து நீரும்
சாலமாய்க் கூவுமங்கே தயங்கிடா திருந்து தானே

**விஸ்னு வசனம்**

கேளும் எதரும ராசனே இதோ ஒரு நச்சுப்பொய்கை உருவாக்கி விட்டேன். நானொரு மான் உருமெடு துரோபதையின் முன் செல்வேன். அப்போது மானைப் பிடித்துதரும்படி துரோபதி கேட்பாள் வீமனைப் பிடித்துக் கொடுக்கும்படி தர்மர் அனுப்புவார் அப்போது நான் காட்டில் மறைந்து விடுவேன் தேடிக்கொண்டு வரும் போது தாகத்தால் தண்ணீர் தேடுவான் அப்போது நீர் குயிலாகக் கூவிக் கொண்டிருப்பீராக.

**ஐவர் வரவு தருமர் விருத்தம்**

தரணிதனில் துரியனிட சூதினாலே சகுனியுடன் தருமரும் தான் தாயமாடி பரம்பரையில் இருந்த சொத்து சுகமிழந்து பரிதவித்த பரதேசி போல நானும் வரம்பு தப்பிப்போன தொரு குருடன் போல வழியற்று திசையற்று வனத்தினூடாய் மரநிழலில் இருந்து களைப்பாறித்தேறி மகிழ்சபையில் ஐவர் கொலு வருகின்றாரே

**தருமர் தரு**

பார்புகழும் தம்பிமார்கள் அருகிலுறை ராசனே
கொலுவில் வந்தேனே
தருமபதி நாலும் கொலும் வந்தேன்

**தர்மர் வசனம்**

கேளுங்கோ தம்பிமாரே எமது அரியைத் தியானித்து இவ் வனத்தில் இன்பமாய் வாழ்வோம் தம்பிமாரே

**துரோபதி கொச்சகம்**

அன்பு தரு பிராணநாதா - அரிவை சாந்தன் முன்பு வந்து
விளையாடு மிகுந்த நீல வர்ணமானதொரு கன்னிமான்
ஒன்று தன்னைக் கன்னி யெந்தன் கைதனிலே பின்னி
தங்கள் வாராமல் பிடித்துத் தருவீராக

**துரோபதை வசனம்**

கேளுங்களையயா சுவாமி பர்ணசாலையின் முன் பாய்ந்து பாய்ந்து விளையாடும் மானைப்பிடித்துத் தாருங்களையா சுவாமி

**தருமர் வசனம்**

கேளும் தம்பி வீமனோ எதைச் சொன்னாலும் கேளாமல் துரோபதை மானைப் பிடித்து தரும்படி கேட்பதால் இந்த மானைப் பிடித்து வாரும் வீமசேனா.

**வீமன் விருத்தம்**

அண்ணரும் சொன்ன வார்த்தை அன்புடன் காதில் கேட்டு
நல்லதோர் வில்லும் தானும் நலமுடன் எடுத்துக்கொண்டு
அண்ணலை மனதில் எண்ணி அரிய கானகத்தின் மீது
சின்னமான் நன்னைப் பிடித்து சீக்கிரம் வருகின்றேனே

**வீமன் தரு**

ஓடாத மானே எந்தனைக் கண்டு ஒளியாதே மானே
ஓடினால் விடுவேனோ தேடி உன்னை பிடித்து
கூடிய சீக்கிரம் கொண்டு சென்றிடுவேன்

**வீமன் வசனம்**

ஆகா தண்ணீர் தாகமாய் இருக்கிறது மானும் மாயமாய் மறைந்து விட்டது. இக் குளத்தில் நானும் தீர்த்த பின் மானைத் தேடுவோம் மனமே....

**விஸ்ணு வசனம்**

நிறுத்தும் பிள்ளாய் இது என்னுடைய குளம் இதில் நீ நீர் குடிக்க வேண்டுமானால் பயிரிலே வாடாப் பயிரும் சுமையிலே வருத்தமான சுமையும் இவ்விரண்டிற்கும் பதிலைக்கூறி விட்டு தண்ணீர் குடிப்பாயாக.

**வீமன் விருத்தம்**

ஆரப்பா நீருமிந்த அருங்குளத்தருகில் நின்று
நீரப்பா மறைந்திருந்து நீர் தனை குடிக்காதென்றீர்
கூறப்பா குடிக்கும் நீரைக் கொடியா தடுத்தாய் நீரும்
பாரப்பா நீரையள்ளி பருகுவேன் அறிகுவாயே

**விஸ்ணு வசனம்**

கேளும் எமதர்ம ராசனே வீமன் விசநீர்
அருந்தி விட்டான் அவனது உயிரை
எடுத்துச் கொள்வீராக.

**எமன் வசனம்**

அப்படியாகட்டும் சுவாமி

**தர்மர் வசனம்**

கேளும் தம்பி அருச்சுனா மான் பிடிக்கச் சென்ற வீமசேனனை இன்னும் காணவில்லை. அவனைச் சென்று பார்த்து வாரும் அருச்சுனா.

**அருச்சுனன் தரு**

கானகம் தன்னிலே போனதோர் அண்ணனை
கருத்துடன் தானுமிப்போ
மானுடனே பெரும் வான் விளையாடிடும் வனம்
தனில் நடந்தேனே.

**அருச்சுனன் வசனம்**

ஆகா இதுவென்ன ஆச்சரியம் மான் பிடிக்க வந்த அண்ணர் மரநிழலில் படுத்து உறங்குகிறான். நல்லது இந்த குளத்தில் நீர் குடித்த பின் அண்ணரையும் எழுப்பிக்கொண்டு சொல்வோம் மனமே.

**விஸ்ணு வசனம்**

நிறுத்தடா பயலே இது என்னுடைய குனம் இதில் நீ நீர் குடிக்க வேண்டுமானால் வாடாப் பயிரும் வருத்தமான சுமையும் என்னவென்று சொல்லி விட்டு குடிப்பீராக!

**அருச்சுனன் வசனம்**

அட போடா பைத்தியகாரப் பயலே தைரியம் இருந்தால் என் முன்னே வருவீராக.

**சபை விருத்தம்**

அருச்சுனன் விசநீர் அருந்தியே அருகிந்த விருச்சமா மரத்தின் கீழே வீமனின் அருகில் வந்து பதைத்துமே விழுந்த போது பச்சைமால் இதனைக் கண்டு உரைத்திட எமனும் வந்து உயிர்தனை எடுத்திட்டான்

**தர்மர் வசனம்**

கேளும் தம்பி நகுலா வீமசேனனைத் தேடிச்
சென்ற அருச்சுனனை காணவில்லை நீர்
சென்று பார்த்து வாரும் தம்பி நகுலா

**நகுலன் தரு**

வந்தேன் நகுலராசன் கானகம் தன்னில் வந்தேன் நகுலராசன்
வந்தேன் நகுலராசன் விந்தையதாய் நடந்து
எந்தன் அண்ணன்மாரை ஏகிப் பார்க்கவென்று

**நகுலன் வசனம்**

நல்லது இந்த குளிர்ந்த தடாகத்தில் எனது தாகம் தணியும் வரை நீர் அருந்தி விட்டு அண்ணர்களை கூட்டிக் கொண்டு போவேன் மனமே!

**சபை விருத்தம்**

ஆயனார் கேட்ட கேள்வி அன்புடன் நகுல ராசன் மாய்வது அறிந்திடாமல் மன்னனும்
விசநீர் தன்னை தூயனும் நீர் அருந்தி
சுருக்குடன் மாண்ட பின்னே தாயது இழந்தது போல் தருமரும் உரை செய்வாரே.

**தர்மர் வசனம்**

கேளும் தம்பி சகாதேவா உன் அண்ணன் மூவரையும் இன்னும் காணவில்லை. அதி சீக்கிரம் சென்று பார்த்து வருவீராக சகாதேவா!

**சகாதேவன் தரு**

அண்ணர் உரைத்த மொழி திண்ணமுடனே கொண்டு
கண்ணர் தனை வணங்கி நண்ணையமாய் நடந்தேன்

**சகாதேவன் வசனம்**

நல்லது இங்கு நடந்தவற்றை எல்லாம் இந்த தரத்தடியில் எழுதி வைத்து விட்டு நானும் விச நீர் அருந்தி அண்ணாமாருடன் இறந்து விடுவேன் மனமே....

**வேதாள விருத்தம்**

மாமுனி சொன்ன வார்த்தை மகிழ்வுடன் கேட்டு நானும்
தானினி நமக்கு நல்ல சாப்பாடு கிடைத்து விட்டதென்று
ஏனினி சுணங்க வேணும் ஆகுதே பொழுதுமிப்போ - நானினி
நடந்து கொண்டு நலமுடன் ஏகுவேனே.

**வேதாளம் தரு**

ஓடிச்செல்வேனே வனமெங்கும் தேடிச் செல்வேனே
ஓடி ஓடி நானும் தேடி வனமெங்கும் நாடி
ஐவரை நானே அருந்துவேன்

குளத்தைக் கண்டேனே அருகினில் பிணத்தைக் கண்டேனே
எனக்கெனவே முனிகனக்க ஏமாற்றியே சவத்தை
தின்றிட என்னை அனுப்பினாரே

எத்தனை நாளிலிவர்கள் செத்த பிணமே ஏதென்று நானறியேன்
ஏன் அனுப்பினார் மாமுனி என்னையும் (நானறிவேன்)
சுறுக்குடனே சென்று நானவர் தன்னையே

**வேதாளம் வசனம்**

ஆகா உயிரெல்லாம் எரியுதே நல்லது எனது
பசிக்கு அந்த முனியை சாப்பிடுவேன் மனமே....

**சபை விருத்தம்**

முனிதன்னை வேதாளம் தான் முடித்துமே போன பின்பு
சனியது பிடித்ததென்று தருமரும் மனதிலெண்ணி
இனியென்ன செய்வேன் என்று ஏங்கியே புலம்பி வாடி
தனிமரமானோமென்று தவித்தவர் புலம்புவாரே.

**துரோபதி தரு வசனம்**

கேளுங்களைய்யா சுவாமி மான்
பிடிக்கச் சென்ற நால்வரும் இன்னும் வரவில்லை
தண்ணீர் தாகமும் அதிகமாய் இருக்கிறது இதற்கு
என்ன செய்வோம் சுவாமி

**தர்மர் துரோபதை தரு (தர்மர்)**

தாகம் எடுக்குமுன்னே போவோம் நடந்துவா பெண்ணே
நாமும் வேகமுடனே சென்று தாகம் தணியலாம் கண்ணே

**தர்மர் வசனம்**

கேளும் பெண்ணே இந்தக் குளத்தில் நமது தாகம்
தணியும் வரை தண்ணீர் குடித்த பின்பு எனது
தம்பிமாரையும் எழுப்பிக் கொண்டு போகலாம் வாரும்
பெண்ணே துரோபதி

**கிருஸ்ணர் வசனம்**

கேளும் பிள்ளாய் தம்பி நீங்கள் தண்ணீர் குடிக்க
வேண்டுமானால் இப் பூமியில் என்ன அதிசயங்கள்
நடக்குதென்று - மற்றும் வருத்தமான சுமை
எதுவென்றும் மூன்றாவது கேள்வி வாடாப்பயிர்
எதுவென்றும் இம் மூன்றிற்கும் பொருளைச்
சொல்லி விட்டு சலத்தை அள்ளி குடிப்பீராக.

**தருமர் வசனம்**

கேளும் ஜக்சராசனே உமை வணங்குகின்றேன் இந்த உலகில் உள்ள அதிசயம் என்னவெனில் பிறப்பும் இறப்புமாகும் வருத்தமான சுமை வையத்து மாதர் வயிற்றில் கருத்தரித்து பையன் உருவாகி பத்து மாசம் சுமப்பது, பெரும் சுமையாகும் வாடாப்பயிர் என்னவெனில் வளரும் அறுகாகும் அறிந்து கொள்ளும் அசரீதியே.

**கிருஸ்ணர் வசனம்**

கேளும் தம்பி மிகவும் சந்தோசமானேன் உங்கள் தாகம் தணித்து கொள்வீராக!

**சபை விருத்தம்**

தாகமும் தீர்ந்த பின்னர் தருமரும் மனையாளோடு
தம்பி மாருறங்கின்ற சகாதேவரருகில் வந்து
தரையினில் எழுதிவைத்த சங்கதி தனை வாசித்து
விரைவினில் தருமரங்கே வெம்பியே புலம்புவாரே

**தர்மர்**

இங்கே தவிக்க விட்டு எங்கு சென்றீர்களோ
தம்பிமாரே
ஐயோ எந்தன் தம்பிமாரே

**துரோபதி**

அங்க பதறுதையோ உங்களை எப்போ காண்பேன் பிராண நாதா - ஐயோ எந்தன் பிராண நாதா

**சபை விருத்தம்**

இருவரும் அழும் போது எம்பெருமான் பார்த்து
கிருபை வைத்தவர்கள் முன்னே - கிருஸ்ணரும்
இருக்கும் போது கருணை வைத்தருளவென்று
கண்ணரும் மனதிலெண்ணி உருவமே யோகியாகி
ஓடியே வருகின்றாரே.

**யோகி விருத்தம்**

ஆரப்பா இந்தவனம் தன்னிலேதான் ஆவென்று கூச்சலிட்டு
நீங்கள் - நீரப்பா நெஞ்சிலே துயரமுற்று நெருப்பினிடை
அகப்பட்ட புழுவைப்போல - காரப்பா என்று நீங்கள்
கதறுகின்ற காரணத்தை என்னவென்று சொல்வீரானால்
பாரப்பா இங்கு வந்து பழிகளெல்லாம் பறந்தோட
மருந்தொன்று கொண்டு வந்தேன்.

**யோகி வசனம்**

கேளும் பிள்ளைகள் இந்த வனத்தில் வந்து
நீங்கள் அழுது கொண்டு இருக்கின்ற காரணத்தை
அடியேன் அறியும்படி சொல்லும் பிள்ளைகாள்

**தருமர் வெண்பா**

கால்கை கடுக்க கானகத்திலோடி வந்து
ஆதரவு சொல்லும் ஐயா பெரியவரே
ஆசையாய் இருந்த அன்பான தம்பியர்கள்
விஷநீர் அருந்தி வீழ்ந்தார்கள்

**தர்மர் வசனம்**

கேளுங்களையா சுவாமி இதுதான் நடந்த காரியம் அறிந்து கொள்ளுங்களைய்யா சுவாமி

**யோகி தரு**

வாரும் தம்பி தானுரைத்திடும்வாசகம் தன்னை
காருமென்று கதறாதே தம்பி

நாலு பேரில் இறந்தவர்களை ஒருவனை நான்
மேலும் நான் பிழைகளைச் செய்வேன்

**யோகி வசனம்**

கேளுங்கள் பிள்ளைகள் இந்த நான்கு பேரில்
யாரை எழுப்ப வேண்டும் சொல்லுங்கள்
யோசனை பண்ணிக்கொண்டு நீன்றீரானால்
நான் சென்று விடுவேன் அறிந்து கொள்வீராக.

**தருமர் வசனம்**

கேளுங்களையா சுவாமி ஒரு தாய் பெற்ற
பிள்ளைகளில் இருவர் இறந்து விட்டார்கள்
நானிருக்கின்றேன் மறுதாய் பெற்ற பிள்ளைகள்
இரண்டு பேரும் இறந்து விட்டார்கள் ஆகையால்
நகுலனை எழுப்புங்கள் ஐயா சுவாமி

**சபை விருத்தம்**

தருமர் உரைத்தபோது தானங்கு நின்ற யோகி கருமயாய்
மறைந்து விட்டார் காயாம்பூ வண்ணர் தானும்
வரும்படி எமனை அங்கு வரவழைத்துயிரை எல்லாம்
தரும்படி மாயர் கேட்டு தானவர் எழுந்திட்டாரே

**தர்மர் தரு**

தானதான மைத்துனனே சற்றுவேன் வார்த்தையைக் கேட்டருளும்
ஏனோ நீரும் இந்த வேலை செய்தாய் இயல்புவாய் என்னிடம் மைத்துனரே

**துரோபதை தரு**

தாலிதனை இழந்தேன் தவித்துப் புலம்பினேன் அண்ணரே
ஏனோ இந்த வேலையைச் செய்தாய் நீயும் எந்தன் மனம் நோதையை


**கிருஸ்ணர் தரு**

நச்சுப் பொய்கை தன்னை ஒன்றே நானே இங்கே அமைத்தேன்
தங்கையாரே உங்கள் மன்னர்களைக் காப்பாற்றுவதற்கு உபாயம்
மொன்று செய்தேன் தங்கை.

**கிருஸ்ணர் வசனம்**

கேளுங்கோ மைத்துனரே சைந்தவன் சிவனை நோக்கி கடும் தவம் செய்து வரம் பெற்றுக்கொண்டான் அதைக் கேட்ட சூரியனும் காளமா முனியிடம் வரமும் பெற்று கொண்டான் அவரைக் காக்கவென்று இந்த நச்சுப் பொய்கையை உருவாக்கினேன் அறிந்து கொள்ளுங்கள் மைத்துனர்களே.

நன்றி
**நாகசக்தி கலைமன்றம்**
முனைக்காடு



## ஆன்மீகச் சுடர் விருது

**ஆன்மீகப்பணி**

**சபாபதிப்பிள்ளை சந்திரசேகரம்** (சமாதான நீதவான்),


**முதலைக்குடா.**

1938.10.30இல் களுதாவளைக் கிராமத்தில் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை மட்/களுதாவளை இராமகிருஸ்ண மிஷன் அ.த.க பாடசாலையில் கற்றார். இடைநிலைக் கல்வியை களுதாவளை மகாவித்தியாலயத்திலும் க.பொ.த சாதாரண தரத்தினை கல்லடி சிவானந்த வித்தியாலயத்தில் ஆங்கில மொழியிலும் கற்றுச் சித்திபெற்று குண்டசாலை விவசாயப் பாடசாலையில் டிப்ளோமா பயிற்சி பெற்றவர்.

1975 இல் முதலைக்குடா கிராமத்தில் மங்கையவல்லி என்பவரைத் திருமணம் செய்து அங்கேயே வாழ்ந்துவருகின்றார். ஆங்கில ஆசிரியராகவும், விவசாய ஆசிரியராகவும், அதிபராகவும், சேவையாற்றியுள்ள இவர், சமூகம் சார்ந்து பல பெறுப்புக்களை வகித்து அதன் மூலம் பல சமூகப்பணிகளை இன்றுவரை ஆற்றிவருகின்றார். முதலைக்குடா பாலையடி பிள்ளையார் ஆலயத்தின் தலைவர், போசகர், தாந்தாமலைஸ்ரீ முருகன் ஆலய நிருவாக சபையின் உப தலைவர், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் கணக்குப் பரிசோதகர், நிருவாக உறுப்பினர், எனப் பல சேவைகளையாற்றியதோடு, பட்டிப்பளை பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவாகவும் கடமையாற்றியுள்ளார்.

ஓய்வு பெற்ற பின்னர் தனது முழுநேரப் பணியாக ஆன்மீகப் பணியையே மேற்கொண்டுவருகின்றார். ஆலயங்களில் திருவாசகம் முற்றோதல், சமயச் சொற்பொழிவு செய்தல், கந்த புராணம் ஓதுதல், என ஆன்மீத் துறையில் ஈடுபாடுகொண்டு செயற்பட்டு வரும் இவர், ஆன்மீகக் குரல், சேவைச் செம்மல் விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவரது ஆன்மீகப்பணியைப் பாராட்டி மண்முனைத் தென்மேற்கு பிரதேச கலாசார விழாவில் ஆன்மீகச் சுடர் விருது வழங்கி கௌரவிக்கப்டுகின்றார்.



## வசந்தன் கலைச்செம்மல் விருது

**கலைப்பணி**


**பாலிப்போடி நல்லதம்பி,** (வசந்தன் கலைச் செம்மல்)

**முனைக்காடு**

1956.01.09 இல் பாலிப்போடி வள்ளியம்மை தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக முனைக்காடு கிராமத்தில் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயத்தில் கற்று அக்கால SSC பரீட்சையில் சித்திபெற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உதவி கிளை முகாமையாளராக் பணியாற்றியுள்ளார்.

வசந்தன் கூத்துக் கலையில் மிகவும் நாட்டம் கொண்ட இவர் பட்டிப்பளைப் பிரதேசத்தில் அதிகமான கலைஞர்கள் உருவகக் காரணமானவர். முனைக்காடு, முதலைக்குடா, பட்டிப்பளை கொக்கட்டிச்சோலை கிராமங்களில் பாடசாலை மற்றும் கலைக்கழகங்களின் உதவியோடு வசந்தன் கூத்துக்கள் பலவற்றை நெறிப்படுத்தி அளிக்கை செய்துள்ளார். வசந்தன் மட்டுமன்றி காவியம் இயற்றல், பாடுதல், காவடி, கும்மி, கவி என்பவற்றிலும் சிறந்து விளங்குபவர். கலைமுதுசம், கிராமியக் கலைச்சுடர், மதுரக்கவியோன், வசந்தன் புகழ் போன்ற விருதுகளைப் பெற்றுள்ளதோடு யப்பான் நாட்டு நண்டுகள் எனும் இசைச் சங்கம நிகழ்வில் கலந்து பாராட்டுச் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

இவரது வசந்தன் கிராமியக் கலைச் சேவையை பாராட்டி மண்முனைத் தென்மேற்கு பிரதேச கலாசார விழாவில் வசந்தன் கலைச் செம்மல் விருது வழங்கி கௌரவிக்கப்டுகின்றார்.



## ஆன்மீகச்சுடர் விருது

**ஆன்மீகப் பணி, சமூகப் பணி,**

**ஞானமுத்து துரையப்பா,** (சமாதான நீதவான்),

**பனிச்சையடிமுன்மாரி**

*1941.09.23 இல் இராசமுத்து ஞானமுத்து ஆகியோரின் புதல்வராகப் பட்டிப்பளையில் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியினை கொக்கட்டிச்சோலை இராமகிருஸ்ண மின் பாடசாலையில் கற்று பின் அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தில் SSC இறுதிப் பரீட்சையில் சித்திபெற்றவர். இளமைப் பருவத்திலிருந்தே ஆன்மீகம் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருபவர். 23 வயதில் 1969 -1978 வரை கிராமச் சங்கத்தில் உதவித் தவிசாளராகக் கடமையாற்றியுள்ளார். பின்னர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் காசாளராகவும் பொருள் கொள்வனவு உத்தியோகத்தராகவும் கடமையாற்றியுள்ளார்.*

தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபையின் தலைவராகவும், பொருளாளராகவும் நீண்ட காலம் சேவையாற்றியுள்ளார். அத்தோடு மட்டக்களப்பு அம்பாரை மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்தலைவராகவும் பட்டிப்பளை குருமார் ஒன்றியத்தின் தலைவராகவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் முதியோர் சம்மேளனத் தலைவராகவும் பட்டிப்பளை கலை இலக்கிய சமூக அபிவித்தி ஒன்றியத்தின் உறுப்பினராகவும் தனது பொதுப்பணியை ஆற்றிவருகின்றார்.

ஆன்மீகம் சார்ந்து ஆலயங்களில் சமயச் சொற்பொழிவாற்றுதல். கந்தபுராணம், சிவபுராணம் ஓதுதல், ஆலய பூசகர் எனச் செயற்படுகின்றார்.

இவரது ஆன்மீகப்பணியைப் பாராட்டி மண்முனைத் தென்மேற்கு பிரதேச கலாசார விழாவில் ஆன்மீகச் சுடர் விருது வழங்கி கௌரவிக்கப்டுகின்றார்.



## சித்தவைத்திய புகழ் விருது

சித்த வைத்தியம்

### மாணிக்கர் கேதாரபிள்ளை


முனைக்காடு

1940.04.03 இல் முனைக்காடு கிராமத்தில் அமராவதி மாணிக்கர் ஆகியோருக்கு முதல் மகனாகப் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம், மட்/முதலைக்குடா மகாவித்தியாலயம் ஆகியவற்றில் பயின்று குடும்ப வறுமை காரணமாக கல்வியை இடைநடுவில் நிறுத்தி விவசாயத் தொழிலில் ஈடுபட்டவர். தனது பாட்டனிடமிருந்து சித்த வைத்தியத்தினைக் கற்ற இவர் தொடர்ந்து தனது சேவையினை மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் இன்றுவரை ஆற்றிவருகின்றார். காவியம் அம்மானை என்பவற்றிலும் ஈடுபாடு கொண்டவர். இவ்விரு இலக்கிய வகைகள் சார்ந்தும் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார்.

தனது இல்லத்தில் விஷக்கல் அலயம் ஒன்றை அமைத்து அதனூடாக சித்த வைத்தியத்தினை செய்து வருகின்றார்.

இவரது சித்த வைத்தியப் பணியைப் பாராட்டி மண்முனைத் தென்மேற்கு பிரதேச கலாசார விழாவில் சித்த வைத்திய புகழ் விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றார்.

## சிறந்த சமூக சேவையாளர் விருது



**சமூகப்பணி**

**மாணிக்கப்போடி முத்துலிங்கம்**

கச்சக்கொடிசுவாமிமலை

1942.01.01 இல் மாணிக்கப்போடி தெய்வானை தம்பதியினருக்கு மகனாக எருவில் கிராமத்தில் பிறந்த இவர் சுயநலம் பாராத சமூக சேவையாராகத் திகழ்பவர். முத்தையா நேசலட்சுமி அவர்களைத் திருமணம் செய்து 1971 இல் கச்சக்கொடி சுவாமி மலை கிராமத்தில் குடியேறிய இவர் அங்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தை உருவாக்கி 1985 முதல் அதன் செயலாளராக கடமையாற்றி அக்கிராம மக்களுக்கு தன்னாலான பணிகளை ஆற்றிவரகின்றார்.

சிவில் பாதுகாப்புக் குழுத்தலைவர், ஆலய பரிபாலன சபை உறுப்பினர், விவசாய அமைப்பின் செயலாளர், மீனவர் சங்க உறுப்பினர் எனப் பல்வேறு சங்கங்களில், அமைப்புக்களில் அங்கத்துவம் பெற்று கச்சக்கொடி சுவாமி மலை கிராமத்தில் பல பணிகளை மேற்கொண்டுவருகின்றார்.

இவரது சிறந்த சமூக சேவையைப் பாராட்டி மண்முனைத் தென்மேற்கு பிரதேச கலாசார விழாவில் சிறந்த சமூக சேவையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்டுகின்றார்.

## மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவிலிருந்து 2015டிசம்பர் வரை கலாபூஷணம் விருது பெற்ற கலைஞர்கள் தொடர்பான விபரங்கள்.

| பெயர், முகவரி | துறை | விருதுபெற்ற ஆண்டு |
|---|---|---|
| திரு.வேலாச்சி வல்லிபுரம், மகிழடித்தீவு – தெற்கு, கொக்கட்டிச்சோலை | கூத்து (அண்ணாவியார்) | 2002 |
| அமரர். திரு. க. மகேஸ்வரலிங்கம் மகிழடித்தீவு – கொக்கட்டிச்சோலை | எழுத்து, கலை, இலக்கியம் | 2005 |
| திரு.குருநாதபிள்ளை பொன்னம்பலம், வால்க்கட்டு, கொக்கட்டிச்சோலை | கூத்து (அண்ணாவியார்) | 2013 |
| திரு.சின்னத்தம்பி கோபாலபிள்ளை, மகிழடித்தீவு – தெற்கு, கொக்கட்டிச்சோலை | கூத்து (அண்ணாவியார்) | 2015 |
| கனகசபை சந்தோசம், கொக்கட்டிச்சோலை. | கூத்து (அண்ணாவியார்) | 2015 |

மகிழடித்தீவு

# பிரதேச இலக்கிய கலைப்போட்டித் தொடர் - 2015ல் வெற்றிபெற்ற பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த போட்டியாளர்கள் தொடர்பான

# விபரங்கள்

| | பாட்டித் தலைப்பு | பிரிவு | பெற்ற இடம் | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|---|
| 1. | கட்டுரை | சிரேஸ்ட | 1 ஆம் இடம் | அ.தர்ஷிகா | மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம் |
| | | | 2 ஆம் இடம் | அ.இதயரஞ்சினி | மட்/அரசடித்தீவ விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| | | | 3 ஆம் இடம் | தே.டிலோசனா | மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம் |
| | | கனிஸ்ட | 1 ஆம் இடம் | து.டிலக்ஸ்சனா | மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம் |
| | | | 2 ஆம் இடம் | ர.பிரவிகா | மட/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம் |
| | | | 3 ஆம் இடம் | த.வரிஷனா | மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம் |
| 2. | கவிதை | சிரேஸ்ட | 1 ஆம் இடம் | தி.வினுதா | மட்/அரசடித்தீவ விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| | | | 2 ஆம் இடம் | மு.சானுஜன் | மட்/அரசடித்தீவ விக்னேஸ்வரா வித்தியாலயம் |
| | | | 3 ஆம் இடம் | நா.அனோஜன் | மட்/அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம் |
| | | கனிஸ்ட | 1 ஆம் இடம் | ஜே.குகிர்தா | மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம் |
| | | | 2 ஆம் இடம் | கு.கனிஸ்டன் | மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம் |
| | | | 3 ஆம் இடம் | - | - |
| 3. | கவிதை பாடல் | கனிஸ்ட | 1 ஆம் இடம் | ர.சாளினி | மட்/கடுக்காமுனை வாணி வித்தியாலயம் |
| 4. | கையெழுத்துப் போட்டி | பாலர் | 1 ஆம் இடம் | பு.மதுஷிகா | மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம் |
| | | | 2 ஆம் இடம் | கோ.கதிசனா | மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம் |
| | | | 3 ஆம் இடம் | சி.லோகஜன் | மட்/முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம் |
| | | | திறந்த பிரிவு | | |
| | போட்டித் தலைப்பு | | பெற்ற இடம் | பெயர் | முகவரி |
| 1. | கவிதை | | 1 ஆம் இடம் | ப.ஸோபனா | அம்பிளாந்துறை – மேற்கு |
| | | | 2 ஆம் இடம் | ம.வேணுவாஜினி | அம்பிளாந்துறை – மத்தி |
| | | | 3 ஆம் இடம் | - | - |



வணசிங்கா பிறிண்டர்ஸ்; மட்டக்களப்பு. 065 222 7170